


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2049*

*மலர் - 10 இதழ் - 9 - டிசம்பர் - 2018*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ்.சண்முகநாதன்*
*தி.ரெத்தினசபாபதி*
*அ.கணேசன்*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி.சரவணன்*

இதழ் வடிவமைப்பு

*ஞா.சரிதா*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00
ஆயுள் சந்தா ₹ 3000.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00
*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
*என்ற பெயரில் அனுப்பலாம்.*

---

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600098.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## பொருளடக்கம்


படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன் – 5

தமிழர் வரலாற்றில் புதிய கண்டுபிடிப்பை
மேற்கொண்டவர் அறிஞர் ஐராவதம் மகாதேவன்
கி.இரா.சங்கரன் – 15

சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும்
ஐராவாம் மகாதேவன் – 17

திருவள்ளுவரின் திருமேனி தாங்கிய தங்கக் காசு
ஐராவதம் மகாதேவன் – 20

தமிழ்ப் பண்பாட்டுப் பின்புலத்தில்
தோழர் ஜீவாவின் அரசியல்
ந.முத்துமோகன் – 25

காலனி ஆட்சியில்
மகப்பேறு மருத்துவமும் - சமூகச் சூழலும்
டாக்டர் சு.நரேந்திரன் – 30

கண்ணீரும் செந்நீரும் பாய்ச்சி...
ப.ஜீவானந்தம் – 43

ஒரு செய்தியாளர் அனுபவித்த சித்திரவதைகளும்,
படுகொலையும்
உதயை மு.வீரையன் – 47

அலைவு இலக்கியம் பற்றிய அலசல்
சுப்ரபாரதிமணியன் – 51

திருவள்ளுவர் கால யவனர் மெய்யியல்
கி.முப்பால்மணி – 52

காஹாசத்தஈ: சமயச் சார்பற்ற காதல் இலக்கியம்
முனைவர் ஆ.கார்த்திகேயன் – 62

சோவியத் மக்களின் மாபெரும் தேசபக்த யுத்தம்
சி.ஆர்.ரவீந்திரன் – 66

எனது இலங்கைப் பயணம்
தி.சு.நடராசன் – 70

# அஞ்சலி



(1935-2018)

30 நூல்களுக்கு மேலாக
தமிழ்கூறு நல்லுலகிற்கு அளித்தவரும்,
ஒப்பீட்டு இலக்கியத்தில் சிறப்பு புலமையாளருமான,
**பேராசிரியர் அ.அ. மணவாளன்** அவர்கள்
30-11-2018 அன்று அமரரானார்.
'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்' மாத இதழின்
கௌரவ ஆசிரியராகப் பொறுப்பு வகித்த
பேராசிரியரின் மறைவுக்கு
'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்'
அஞ்சலி செலுத்துகிறது.


# படித்துப் பாருங்களேன்...

## ஆ. சிவசுப்பிரமணியன்

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

*1984*-இல் எம்.ஜி.ஆர் உடல்நலக் குறைவுக்கு ஆளானபோது தமிழ்நாடு அரசானது விமான ஓட்டி இல்லாது தானாக இயங்கும் விமானம் போல் செயல்பட்டது. இந்நிகழ்வானது அரசு எந்திரத்திற்கான பாராட்டாக அமைந்தது என்கிறார் நூலாசிரியர். சொத்துரிமை, ஆவணப்பதிவு, பிறப்பு இறப்புச் சான்றிதழ்கள் வழங்கல், கல்விநிறுவனங்களில் சேர சாதிச்சான்றிதழ் வழங்கல், உணவுப்பொருள் விநியோகம், ஓய்வூதியம் வழங்கல், அரசின் நல்கைகளை வழங்கல், அரசின் திட்டங்களை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக விவாதித்து முடிவெடுத்தல் என்பன வழக்கம் போல் நிகழ்ந்தன. வழக்கம் போலவே, அரசின் நிர்வாகம் கண்காணிக்கப்பட்டு நிர்வாக நிலையில் மதிப்பீடு செய்யப்பட்டது. தத்தம் துறைகளை நிர்வகிக்கும் அனுபவம் வாய்ந்த மூத்த அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவையும் செயல்பட்டது.

•••



**திராவிட ஆட்சியில் அரசியல் சமூக அசைவுகள் - 3**
எஸ்.நாராயணன் (2018)

**Dravidian Years: Politics and Welfare in Tamilnadu**
S.Narayan (2018)

Oxford University Press

*1988-1989* ஆண்டுகளில் தமிழ்நாட்டில் ஆளுநர் ஆட்சி நடந்தது. நல்ல நிர்வாகத்திறன் கொண்ட பி.சி.அலெக்சாண்டர் ஆளுநராக இருந்து ஆட்சியை நடத்தினார். மத்திய அரசின் நிதிநல்கையுடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் நல்ல முன்னேற்றம் நிகழ்ந்தது.

இதனையடுத்து *13* ஆண்டுகள் கழித்து *1989*-இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தது; மத்தியில் ஆட்சியில் இருந்த வி.பி.சிங்கின் அரசுடன் நெருக்கமான உறவு கொண்டிருந்தது. வி.பி. சிங்கின் அரசும் இதனையடுத்து வந்த சந்திரசேகரின் ஆட்சியும் அற்ப ஆயுளில் முடிந்தன.

தி.மு.க. ஆட்சியைக் கலைக்கும்படி, காங்கிரஸ் கட்சியின் வாயிலாக சந்திரசேகர் அரசிடம், ஜெயலலிதா நெருக்கடி கொடுத்து வந்தார். இதில் அவர் வெற்றியும் பெற்றார்.

*1991*-இல் நிகழ்ந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் காங்கிரசுடன் கூட்டணி அமைத்து அ.தி.மு.க போட்டியிட்டது. இக்கூட்டணி *225* தொகுதிகளில் வெற்றி பெற்றது. அ.தி.மு.க. பெற்ற வாக்குகளின் விழுக்காடு *59.09%* ஆக அமைந்தது. இதுவரை அ.தி.மு.க. பெற்று வந்த வாக்குகளின் விழுக்காடை விட இது அதிகம். எம்.ஜி.ஆரின் வாரிசாக ஜெயலலிதாவை தமிழக மக்கள் ஏற்றுக் கொண்டதன் வெளிப்பாடாக இது அமைந்தது.

### ஜெயலலிதாவின் அரசியல் நுழைவு

இத்தகைய செல்வாக்கை ஜெயலலிதா திடீரென அடைந்துவிடவில்லை. *1982*-ஆவது ஆண்டில் அவர் அ.இ.அ.தி.மு.க.வில் சேர்ந்தார். அவரைக் கொள்கைப் பரப்புச் செயலாளராக எம்.ஜி.ஆர். நியமித்தார். இதற்கு முன்னர் இவர் அரசியலில் ஆர்வம் காட்டிய வரல்லர். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா என்ற இரு பெயர்களும் திரைஉலகில் இணைத்தே பேசப்பட்டு வந்தன. *1973*இலிருந்து *1982* வரையிலான காலம் ஜெயலலிதாவைப் பொருத்த அளவில் அமைதியான காலமாகவே இருந்தது. திரையுலகில் இருந்தும், எம்.ஜி.ஆரிடம் இருந்தும் அவர் விலகி நின்றமையால் பொதுமக்கள் பார்வையில் அவர் தென்படவில்லை.

எம்.ஜி.ஆர். அமெரிக்கா சென்றிருந்தபோது, ஜெயலலிதாவும் மருத்துவச் சிகிச்சைக்காக அங்கு ஏற்கெனவே தங்கியிருந்தார். இருவருக்கும் பொதுவாக தலைவர் வாயிலாக இருவரும் சந்தித்துக் கொண்டதாக எழுத்தாளர் வாசந்தி தமது ஆங்கில நூலில் குறிப்பிட்டுள்ளார்.

வளர்ச்சியடைந்திருந்த அ.இ.அ.தி.மு.க. விற்கு மக்கள் திரளை ஈர்க்கும் ஆற்றல் உடைய ஒருவர் தேவை என்று எம்.ஜி.ஆர் கருதினார். முதலமைச்சர் என்பதால் பொதுக்கூட்டங்களில் அதிக அளவில் பங்கேற்க எம்.ஜி.ஆரால் இயலவில்லை. மற்றொரு பக்கம் கருணாநிதியோ பொதுக் கூட்டங்களில் பங்கேற்று, மட்டுமீறிய தாக்குதல்களில் ஈடுபட்டு வந்தார். இச்சூழலில் பொதுக் கூட்டங்களில் உரையாற்ற ஜெயலலிதாவைப் பயன்படுத்திக் கொள்ள எம்.ஜி.ஆர். முடிவு செய்தார்.

கூட்டத்தைத் திரட்டுவதில் தொடக்கத்திலேயே ஜெயலலிதா வெற்றி பெற்றார். தி.மு.க.வினரின் குத்தல் பேச்சுக்களுக்கு சரியான பதிலடி கொடுத்தார்.

எம்.ஜி.ஆருடன் நெருக்கமானவராக இருந்த ஆர்.எம்.வீரப்பனும், வேறு சிலரும் ஜெயலலிதாவின் வருகையை எதிர்த்துத் தீவிரமாகச் செயல்படத் தொடங்கினர். சாதாரணமானவராக அவரை அவர்கள் கருதவில்லை. சில எதிர்பார்ப்புகளுடனேயே அவர் கட்சியில் நுழைந்துள்ளதாக அவர்கள் அஞ்சினர்.

எம்.ஜி.ஆரின் பல்வேறு திரைப்படங்களுக்கு தயாரிப்பு மேலாளராகவும், நிதி நிர்வாகத்தைக் கையாள்பவராகவும் இருந்து வந்தவர், ஆர்.எம். வீரப்பன். எம்.ஜி.ஆர். மன்றங்களின் புரவலராகவும் அவர் இருந்து வந்தார். இக்காரணங்களால் தலைமைக்கான போட்டியில் சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு ஆர்.எம்.வீரப்பனுக்கே இருக்கும் என்று கருதப்பட்டது.

ஆனால், தம் உரைகளால் கூட்டம் சேர்ப்பவராக ஜெயலலிதா காட்சியளித்த போது கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் கட்சிக்கு அவரது சேவை அவசியம் என்பதை உணர்ந்தார்கள். 1984-இல் எம்.ஜி.ஆர். அவரைப் பாராளுமன்றத்தின் மாநிலங்களவை உறுப்பினராக்கினார். இந்த வாய்ப்பை அவர் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு, ஓர் அறிவார்த்தமான அரசியல்வாதியாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். அவர் ஆற்றிய முதல் உரையே ஆளும் கட்சியாக இருந்த காங்கிரசின் மூத்த தலைவர்களை - குறிப்பாக, பிரதமர் இந்திராகாந்தி உட்பட அனைவரையும் ஈர்ப்பதாக இருந்தது. எதிர்பாராத முறையில் மாநிலங்களவையின் விவாதங்களில் குறுக்கிட்டுப் பேசும் ஆற்றல் அவருக்கிருந்தது. அவருடைய பதவிக் காலத்தில் குறிப்பிடத்தக்க அளவிலான தாக்கத்தை அவர் மாநிலங்களவையில் ஏற்படுத்தினார். இராஜீவ் காந்தியுடன் அவருக்கு நல்ல நட்புறவு இருந்தது.



### எம்.ஜி.ஆரின் நிலை

திராவிட இயக்கச் சிந்தனைகள் வலிமை குன்றி வருவதாக, எம்.ஜி.ஆர். கருதலானார். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கோரிக்கை விடுத்த எதிர்க்கட்சிகளிடம் இருந்து விலகி நின்றார். தேசிய வளர்ச்சிக் குழுவின் கூட்டத்தில் இருந்து எதிர்க்கட்சிகள் வெளி நடப்பு செய்தபோது அ.இ.அ.தி.மு.க. அதில் கலந்து கொள்ளவில்லை. ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் என்.டி.ராமராவின் ஆட்சி கலைக்கப்பட்டபோது, அதை அவர் கண்டிக்கவில்லை.

தன்னுடன் கூட்டணியில் தொடர்பவராகவே எம்.ஜி.ஆரை இந்திராகாந்தி கருதிவந்தார். இதற்காகத் திராவிட இயக்கம் சுயமரியாதை இயக்கம் என்ற அடையாளங்களை எம்.ஜி.ஆர். இழக்க வேண்டியிருந்தது.

### எம்.ஜி.ஆரின் உடல்நலக் குறைவு

இந்த நேரத்தில் எம்.ஜி.ஆரின் உடல்நலம் பாதிக்கப்பட்டது. அதிக அளவிலான நீரழிவு நோயால் அவர் பாதிக்கப்பட்டவர் என்றாலும் அவர் இனிப்புப் பிரியர். அதிகாரிகளுடனான கூட்டமானாலும் அமைச்சரவைக் கூட்டமானாலும் அவருக்கு மிகவும் பிடித்தமான பாசந்தி என்ற இனிப்பு அனைவருக்கும் பரிமாறப்படும். இது அதிக அளவில் சர்க்கரை கலக்கப்பட்ட பால் இனிப்பு.

இக்கட்டுப்பாடு மீறலானது அவரது உடல் நலத்தைப் பாதித்தது. 1984 அக்டோபரில் அவர் உடல்நலக் குறைவுக்கு ஆளானார். மூச்சுத்திணறலில் இருந்து அவரைக் காப்பாற்ற மருத்துவர்கள் போராடினர். அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவரைக் காண, பிரதமர் இந்திராகாந்தி வந்து சென்றார். சிகிச்சைக்காக அவர் அமெரிக்கா செல்ல விமானம் ஒன்றை ஒழுங்கு செய்தார். 1984-இல் இந்திராகாந்தி சுட்டுக்கொல்லப் பட்ட போது எம்.ஜி.ஆர். அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தார்.

•••

இரண்டாண்டுக் காலமாக ஜெயலலிதாவுக்குக் கட்சியில் முக்கியத்துவம் கொடுத்து வந்தார் எம்.ஜி.ஆர். பொதுநிகழ்ச்சிகளுக்கு ஜெயலலிதா வரும்போது எழுந்து நிற்கவேண்டுமென்று அமைச்சர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்தனர். இதனால் அவருடன் மேடையில் பங்கேற்பதில் அமைச்சர்கள் அசட்டையாக இருந்தனர்.

எம்.ஜி.ஆர். மருத்துவமனையில் இருந்தபோது அவரைக் காணச் சென்ற ஜெயலலிதாவுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அவருக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்த விவரங்களை ஜெயலலிதாவால் கேட்டறிய முடியவில்லை. ஜப்பான் நாட்டு மருத்துவ நிபுணர்களை மருத்துவர்கள் அழைத்துள்ளதாக அவர் அறிக்கை வெளியிட்டபோது, கட்சியின் பொதுச் செயலாளரான ப.உ. சண்முகம் அதை மறுத்து, அது கட்சி அலுவலகத்தால் வெளியிடப்படவில்லை என்று அறிக்கை வெளியிட்டார். எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றங்கள் ஜெயலலிதாவை ஆதரிக்க முன்வரவில்லை. அவரது அரசியல் வாழ்க்கை முடிந்து போனதாகக் கருத்து உருவானது.

எம்.ஜி.ஆர். உடல்நலம் பெற்றுத் திரும்பினார். 1984 தேர்தலில் அவரது கட்சி வெற்றி பெற்றது. 1985 முதல் 1987 வரையிலான காலகட்டத்தில் எம்.ஜி.ஆருக்கு நெருக்கமானவராகவே ஜெயலலிதா காட்சியளித்தார். இக்காலத்தில் எடுக்கப்பட்ட முக்கியமான முடிவுகளில் அவரது செல்வாக்கு இடம் பெற்றிருந்ததாக அதிகாரவர்க்கம் கருதியது.

### எம்.ஜி.ஆரின் மறைவுக்குப்பின்

எம்.ஜி.ஆர். இறந்தபோது அவரது உடல் ஏற்றப்பட்டிருந்த வண்டியில் ஜெயலலிதா ஏறுவதைத் தடுத்தனர். அ.இ.அ.தி.மு.க.வில் அவருக்கு இடமில்லாமல் செய்வதில் மூத்த தலைவர்கள் ஒன்றுபட்டிருந்தனர். அ.இ.அ.தி.மு.க.வின் சட்ட மன்றத் தலைவராக எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகியைத் தேர்வு செய்ய அவர்கள் முடிவெடுத்தனர். இது தொடர்பாக சட்டமன்றத்தில் அமளி ஏற்பட்டு, ஆட்சி கலைக்கப்பட்டு, ஆளுநர் ஆட்சி அறிமுகம் செய்யப்பட்டது.

1991இல் தமிழ்நாட்டின் முதல்வராக ஜெயலலிதா பொறுப்பேற்றார். திராவிட அரசியலில் இருந்து மாறுபட்டவராகவே அவர் காட்சியளித்தார். கடவுள் மறுப்புக் கொள்கைக்கு மாறாக, சமய நம்பிக்கை உடையவராகவும், சடங்குகளில் நம்பிக்கை கொண்டவராகவும், கோவில் புனரமைப்பில் ஆர்வம் கொண்டவராகவும் அவர் விளங்கினார்.

இடஒதுக்கீடு, சாதியச் சமன்பாடு, வாக்குச் சேகரிப்பு என்பன தவிர, சமூகநீதி, சமூக சீர்திருத்தம் என்பன குறித்து அவருக்கு நம்பிக்கை இருக்கவில்லை.

கையூட்டு, நிதிமுறைகேடு தொடர்பாக பல வழக்குகளை அவரும், உயர் அதிகாரிகளும் எதிர் கொள்ள நேரிட்டது. இதே காலத்தில் இவரது

“

**இரண்டாண்டுக் காலமாக ஜெயலலிதாவுக்குக் கட்சியில் முக்கியத்துவம் கொடுத்து வந்தார் எம்.ஜி.ஆர். பொதுநிகழ்ச்சிகளுக்கு ஜெயலலிதா வரும்போது எழுந்து நிற்கவேண்டுமென்று அமைச்சர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்தனர். இதனால்...**

”

அமைச்சரவையில் அங்கம் வகித்த அமைச்சர்கள் சிலரின் சிறப்பான செயல்பாடுகள் குறித்த செய்திகளையும் நூலாசிரியர் குறிப்பிடத் தவறவில்லை. குறிப்பாக, உணவு அமைச்சராக இருந்த ஜி. விசுவநாதன், மக்கள் நலத்துறை அமைச்சராக இருந்த முத்துச்சாமி ஆகியோரின் செயல்பாடுகளைப் பாராட்டியுள்ளார் நூலாசிரியர். நிர்வாகத்திறன் கொண்ட இவ்விரு அமைச்சர்களுக்கும் அவர்களது துறைகளின் செயலாளர்கள், ஊழியர்களின் ஆதரவு இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். இவ்விரு துறைகளின் செயல்பாடுகள் குறித்து சற்று விரிவாகக் கூறிப் பாராட்டியுள்ளார்.

போக்குவரத்துத் துறை அமைச்சராக முத்துச்சாமி பணியாற்றியபோது அவருக்கும் எம்.ஜி.ஆருக்கும் இடையிலான நெருக்கம் தொடர்பான ஒரு நிகழ்வையும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

கைக்கடிகாரங்கள், மின்னணுப் பொருட்கள் மீது எம்.ஜி.ஆருக்கு விருப்பம் அதிகம். ஒருமுறை எம்.ஜி.ஆருடன் முத்துச்சாமி ஜப்பான் சென்றுள்ளார். தொலைக்காட்சியுடன் கூடிய கைக்கடிகாரம் ஒன்று அப்போதுதான் அறிமுகம் ஆகி ஜப்பானில் கிடைப்பதாக எம்.ஜி.ஆர். அறிந்திருந்தார். டோக்கியோவில் கலந்துகொள்ள வேண்டியிருந்த சில அதிகாரப்பூர்வமான கூட்டங்களைத் தவிர்த்து விட்டு டோக்கியோ நகரில் அக்கைக்கடிகாரத்தைத் தேடி விலைக்கு வாங்கி எம்.ஜி.ஆரிடம் கொடுத்தார் முத்துச்சாமி. பிரமித்துப்போன எம்.ஜி.ஆர். அதைப் பெற்றுக் கொண்டதுடன் பல்வேறு நிகழ்வுகளில் அதை அணிந்து காட்சியளித்தார்.

எம்.ஜி.ஆரின் மறைவையடுத்து 1991க்குப் பின்னர் கட்சியில் ஜெயலலிதாவின் நம்பிக்கைக்கு உரியவராக முத்துச்சாமி விளங்கினார். பின்னர் அதை இழக்கவும் நேரிட்டது. அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துகளைக் கொள்முதல் செய்வதில், அவரும் மக்கள் நலத்துறையின் செயலாளராக இருந்த ஆர். பூரணலிங்கம் என்ற இந்திய ஆட்சிப் பணித்துறை அதிகாரியும் எதிர்கொண்ட சிக்கல்களையும், அவற்றில் இருந்து விடுபட அவர்கள் மேற்கொண்ட வழிமுறைகளையும் விரிவாகவே ஆசிரியர் கூறிச் செல்கிறார்.

இதனையடுத்து உணவுப்பொருள் வழங்கும் துறையின் செயல்பாடுகளையும், அத்துறையின் அமைச்சராக இருந்த ஜி. விசுவநாதனின் செயல்பாட்டையும் இத்துறையில் நிகழ்ந்த பயனுள்ள மாறுதல்களையும் குறிப்பிட்டுள்ளார்.

### மத்திய அரசுடனான உறவு

மத்திய அரசில் செல்வாக்குப் பெறுவது தொடர்பாக, தி.மு.க., அ.இ.அ.தி.மு.க என்ற இரு திராவிடக் கட்சிகளுக்கும் இடையே நிழல் யுத்தம் நிகழலாயிற்று.

1996, 1998 ஆண்டுகளில் மத்திய ஆட்சியில் தி.மு.க. அங்கம் வகித்தது. 1998இல் பி.ஜே.பி.யின் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் (என்.டி.எ.) அ.இ.அ.தி.மு.க இணைந்து கொண்டது. ஆனால் குறுகிய காலமே (1998-1999) இவ்வுறவு நீடித்தது. 1999 முதல் 2004 முடிய முரசொலி மாறன் மத்திய அமைச்சராக பி.ஜே.பி.யின் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பதவி வகித்தார்.

2001-இல் நடந்த சட்டமன்றத் தேர்தலில், காங்கிரசுடன் கூட்டணி வைத்துப் போட்டியிட்ட அ.இ.அ.தி.மு.க. தமிழ்நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியது. மத்தியில் இருந்த தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன் இருந்த நெருக்கம் காரணமாக மாநில அரசின் பழிவாங்கும் நடவடிக்கைகளில் இருந்து தி.மு.க. தன்னைப் பாதுகாத்துக் கொண்டது.

மத்தியில் நிகழும் ஆட்சி மாறுதல்களுக்கு ஏற்ப தி.மு.க. தன்னைத் தகவமைத்துக் கொண்டது. 2004 வரை தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன் நட்புறவு கொண்டிருந்த தி.மு.க. 2004 தொடங்கி 2014 முடிய காங்கிரசுடன் இணைந்து கொண்டு மூன்று மத்திய அமைச்சர் பதவிகளைப் பெற்றது.

### 2001 சட்டமன்றத் தேர்தல்

இத்தேர்தலில், ‘நல்ல நிர்வாகம்’, 1996இல் இருந்து மேற்கொண்ட ‘சாதனைகள்’ என்ற இரண்டையும் முன்வைத்து தி.மு.க. சட்டமன்றத் தேர்தலை எதிர்கொண்டது. வளர்ச்சியிலும், நல்லாட்சியிலும் ஆர்வம் கொண்டவர் என்ற அடையாளத்துடன் அக்கட்சியின் தலைவராகக் கருணாநிதி சித்திரிக்கப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்டார்.

மற்றொரு பக்கம் அவரது குடும்ப உறுப்பினர்கள், வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் அரசு நிர்வாகத்தில் தலையிடுவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதையே தனது தேர்தல் பரப்புரையில் ‘குடும்ப அரசியல்’ என்று குறிப்பிட்டார் ஜெயலலிதா. மேலும், 2000ஆவது ஆண்டில் தன் கட்சியின் மூத்த தலைவர்களின் பதவிகளைப் பறித்து கட்சி தன் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாக அவர் வெளிப் படுத்தியிருந்தார். இதனால் பொதுமக்கள் மத்தியில் ‘வாரிசு அரசியல்’ என்பது தி.மு.கவுடனேயே தொடர்புபடுத்திப் பார்க்கப்பட்டது.

மத்தியில் ஆட்சி புரிந்த பி.ஜே.பி.யை, அ.இ.அ.தி.மு.க. தன் தேர்தல் பரப்புரைகளில் விமர்சிக்கவில்லை. இத்தேர்தலில் 141 தொகுதிகளில் போட்டியிட்ட அ.இ.அ.தி.மு.க. 132 தொகுதிகளில் வெற்றிபெற்றது. கூட்டணி என்ற முறையில் 195 இடங்களில் வெற்றிபெற்றது என்றாலும் அதன் தனிப்பட்ட வெற்றியால் கூட்டணிக்கட்சிகளின் துணையின்றியே ஆட்சி அமைத்தது.

இந்த ஆட்சிக்காலத்தில் பல்வேறு அரசுத் துறைகளின் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. மதிய உணவுத்திட்டத்தில், உணவுப்பொருட்களை வழங்குவோர், அரசு ஊழியர், அரசியல்வாதிகள் ஆகியோருக்கு இடையே ஒருவகையான ஒப்பந்தம் நிலவுவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. அதிக விலைக்குத் தரமற்ற பொருட்களை வாங்குவதாகக் கூறப்பட்டது. அமைச்சர்கள், உயர்அதிகாரிகள் ஆகியோர் இக்குற்றச்சாட்டுக்கு ஆளாயினர். ஆயினும், நீதிமன்றத்தில் இது உறுதிப்படுத்தப்படவில்லை.

அரசுப்பணத்தைத் தவறாகப் பயன்படுத்தி ஊழல் செய்ததாக, இரண்டு மூத்த உயர் அதிகாரிகள் மீதும், அமைச்சர் ஒருவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டது.

வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்ததாக, முதல்வர் மீதும் அவரது தோழியான சசிகலா, அவரது உறவினர்கள் மீதும் வழக்குகள் தொடரப்பட்டன. பதினெட்டு ஆண்டுகள் நடந்த இவ்வழக்கின் தீர்ப்பு 2017 சனவரியில் உச்சநீதிமன்றத்தால் வழங்கப் பட்டது. குற்றம் சாட்டப்பட்ட அனைவருக்கும் சிறைத்தண்டனை விதித்து உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இத்தீர்ப்பு வழங்கப்பட்டபோது ஜெயலலிதா உயிருடன் இல்லை.

ஆட்சியிலும் நிர்வாகத்திலும் எப்படி இரு விதமான போக்குகள் ஒரே நேரத்தில் நிலவின என்பது கேள்விக்குரிய ஒன்று. ஒரு பக்கம் அமைச்சர்களும், அரசுச் செயலாளர்களும், சிறந்த திட்டங்களுக் காகவும், நிர்வாகத்திற்காகவும் செயல்பட்டமைக்குச் சான்றுகள் உள்ளன. மற்றொரு பக்கம், ஊழல் நடவடிக்கைகளை மேற்கொண்ட அமைச்சர்களும் அரசு அதிகாரிகளும் இருந்தனர். முதலமைச்சரின் அலுவலகம் குறித்தும் இதே பதிவைச் செய்ய முடியும். இன்றும் கூட இது பொருந்தும் தன்மையது தான்!

**நலத்திட்ட அரசியல்**

1996 வாக்கில் ஜெயலலிதா ஆட்சியின் மீதான நம்பிக்கையை வாக்காளர்கள் இழக்கத் தொடங்கினர். அவரது வளர்ப்பு மகன் சுதாகரனின் திருமணத்தில் வெளிப்பட்ட பகட்டு, ஊடகங்களால் மக்களிடையே பரவலாகச் சென்றடைந்தது. தலைமைச் செயலகத்தில் நடந்த வேலை நிறுத்தத்தை அரசு கையாண்ட முறை யானது அரசு ஊழியர்களின் எதிர்ப்பை ஈட்டிக் கொடுத்திருந்தது. கிராமப்புறங்களில் பணியாற்றிக் கொண்டிருந்த அரசு ஊழியர்கள் பலரும் குறைந்த அளவு ஊதியமே பெற்று வந்தனர். இவர்களது எதிர்ப்புணர்வு வாக்காளர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தியது. எம்.ஜி.ஆர். காலத்தியக் கட்சியின் மூத்த தலைவர்கள் சிலர், அவரது மறைவுக்குப் பின் ஜெயலலிதாவை அ.இ.அ.தி.மு.க.வின் தலைவராக்கு வதில் முக்கியப் பங்காற்றினர். இத்தேர்தலின்போது இவர்கள் ஓரங்கட்டப்பட்டிருந்தார்கள். முக்கிய அரசியல் புள்ளியாக உருவாகியிருந்த சசிகலா, மக்களால் ஒரு தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட வில்லை.



திரைப்பட உலகின் செல்வாக்கு மிகுந்திருந்த தமிழ்நாட்டில், தி.மு.க.- காங்கிரஸ் கூட்டணியை இத்தேர்தலில் ரஜினிகாந்த் ஆதரித்தார்.

இச்சூழலில் 1996 தேர்தலில் தி.மு.க. 221 தொகுதிகளில் வெற்றி பெற்றது. அ.தி.மு.க.வின் முக்கிய தொகுதிகள் நொறுங்கிப் போய் நான்கு சட்ட மன்ற உறுப்பினர்களை மட்டுமே அக்கட்சி பெற்றது. பர்கூர் தொகுதியில் போட்டியிட்ட ஜெயலலிதா தோல்வி அடைந்தார்.

கருணாநிதி முதல்வரானதும் அரசு நிர்வாகத்தைச் சரிசெய்வதிலும், வளர்ச்சிக்கான திட்டமிடுதலிலும் அக்கறை காட்டினார். அத்துடன் முந்தைய ஆட்சியின் ஊழல்கள், வருவாய்க்கு அதிகமாகப் பொருளீட்டியது என்பனவற்றை மையமாகக் கொண்ட குற்றச்சாட்டுக் களைப் பதிவு செய்வதிலும், வழக்குத் தொடுப் பதிலும் அக்கறை காட்டினார்.

இதன் விளைவாக தமிழ்நாடு உயர் அதிகார வர்க்கத்தினர், கொள்கை முடிவுகள் எடுப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் விழிப்புடன் செயல் படலாயினர். மற்றொரு பக்கம் முந்தைய ஆட்சியின் ஆதரவாளர்கள், தற்போதைய ஆட்சியின் ஆதர வாளர்கள் என உயர் அதிகார வர்க்கம் பிளவுண்டு போனது. இது நிலைபெற்றுப் போய் அடுத்த இருபதாண்டுகளில் அரசுத் திட்டங்களையும் நிர்வாகத்தையும் பாதித்தது என்பது ஆசிரியரின் கருத்தாக உள்ளது.

•••

இக்காலத்தில்தான் ‘உழவர்சந்தை’, ‘சமத்துவ புரம்’ என்ற இரு புதியத் திட்டங்களை கருணாநிதி அறிமுகப்படுத்தினார். மழைநீரைச் சேகரிக்கும் வகையில் புதிய குளங்கள் வெட்டப்பட்டன. குடிமைப் பொருள் வழங்கல், மதிய உணவுத் திட்டம் என்பன விரிவுபடுத்தப்பட்டன. இவை மாவட்ட ஆட்சித்தலைவர், முதலமைச்சர் ஆகியோரின் பார்வையில் நிகழ்ந்தன. கிராமப்புற மக்களிடையே இவை ஆதரவைப் பெற்றன.

## 2001 தேர்தல்

2001-இல் தமிழக சட்டமன்றத்திற்கான பொதுத் தேர்தல் வந்தபோது, தனது சாதனைகளையும் மேற் கொண்ட நல்ல நிர்வாகத்தையும், தி.மு.க. மக்களிடையே சுட்டிக்காட்டியது.

கருணாநிதியின் மகன் ஸ்டாலின் சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்ததையும், தி.மு.க.வில் கருணாநிதியின் மகள் கனிமொழியும், மூத்த மகன் அழகிரியும், கட்சியில் செல்வாக்குடன் இடம் பெற்றிருப்பதையும் சுட்டிக்காட்டி ‘குடும்ப ஆட்சி’ என்று கூறி ஜெயலலிதா பகடி செய்யலானார். இது, தாக்குதல் தொடுப்பவர் என்ற நிலையில் இருந்து, தாக்குதலில் இருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிலைக்குக் கருணாநிதியை ஆளாக்கியது.

இத்தேர்தலில் திராவிட சித்தாந்தங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டன. மத்தியில் ஆட்சிபுரிந்து வந்த பி.ஜே.பி.யை விமர்சனம் செய்வதை அ.தி.மு.க. தவிர்த்தது. 234 உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்நாடு சட்டமன்றத்தில் 141 தொகுதிகளில் போட்டியிட்ட அ.தி.மு.க. 132 தொகுதிகளில் வெற்றி பெற்றது. அதன் கூட்டணிக்கட்சிகள் 64 தொகுதி களில் வெற்றி பெற்றன. கூட்டணிக் கட்சிகளின் துணை யின்றியே அக்கட்சி ஆட்சி அமைத்தது. மூன்றாவது அணிக்குத் தமிழகம் ஆயத்தமாகவில்லை என்பதையும் இத்தேர்தல் வெளிப்படுத்தியது.

அத்துடன் ‘நல்ல நிர்வாகம்’, ‘வளர்ச்சி’ என்பன மட்டும் வாக்குகளை ஈர்க்க உதவாது என்பதையும் இத்தேர்தல் உணர்த்தியது.

ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஜெயலலிதா வழக்குகள் பலவற்றை கருணாநிதி மேல் பதிவு செய்ததுடன் அவரைக் கைது செய்தார். குற்றப்பத்திரிகையில் பல அதிகாரிகளின் பெயர்களும் இடம் பெற்றன. ஆனால் போதுமான சான்றுகள் இல்லாமையால் இவை வெற்றி பெறவில்லை.

## 2004 பாராளுமன்றத் தேர்தல்

மத்தியில் பா.ஜ.க.வின் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம் பெற்றிருந்த தி.மு.க. இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது. தி.மு.க. 16, காங்கிரஸ் 10, பாட்டாளி மக்கள் கட்சி 5 என தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றதுடன் முக்கியத் துறைகளில் அமைச்சர் பதவியையும் பெற்றது. இக்காலக் கட்டத்தில் குற்றவியல் குற்றச்சாட்டுகளுக்கு இதன் அமைச்சர்கள் ஆளாகி இன்றுவரை வழக்குகள் நடந்து வருகின்றன.

•••

2006இல் நிகழ்ந்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற தி.மு.க. 2011-இல் அ.தி.மு.க.விடம் ஆட்சியை இழந்தது.

இப்படி அய்ந்தாண்டுகளில் ஒருமுறை தம் ஆதரவை வாக்காளர்கள் மாற்றிக் கொள்வதானது வாக்காளர்களின் அறிவு முதிர்ச்சியைக் காட்டு வதாகவும், திராவிட, சுயமரியாதை சித்தாந்தச் சார்பு நீர்த்துப் போனதாகவும் ஆசிரியர் கருதுகிறார்.

வாக்குகளுக்கான இலவசங்கள் (2006-2016)

தி.மு.க.விடம் இருந்து 2001-இல் ஆட்சியைக் கைப்பற்றிய அ.தி.மு.க. தன் முந்தைய ஆட்சிக் காலத்தில் (1991-1996) வரம்பு மீறி நடந்து கொண்டது போல் நடந்து கொள்ளவில்லை. பொறுப்புணர்வு கொண்டவராக ஜெயலலிதா காட்சியளித்தார். அரசு ஊழியர்களிடம் கடுமையாக நடந்து கொள்ள வில்லை; அவர்களது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டார். நலத்திட்டங்களை விரிவுபடுத்தி, மதிய உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வற்றை அதிகரித்தார். இதனால் பெண்கள், கர்ப்பிணிகள், முதியோர்கள் பயன்பெற்றனர். 2004 சுனாமியின் போது நிவாரண வேலைகளை அவர் கையாண்ட முறை பாராட்டைப் பெற்றது.

இக்காரணங்களால் ஜெயலலிதாவே மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவார் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. கருத்துக்கணிப்புகளும் இதையே வெளிப் படுத்தின.

67 விழுக்காடு மக்கள் ஜெயலலிதாவை ஆதரிப்பதாக ஒரு கருத்துக்கணிப்பு கூறியது.

ஆனால், கருணாநிதி தன் கட்சியின் தேர்தல் அறிக்கையை வெளியிட்ட பின்னர் இவ் எதிர்பார்ப்பு களில் மாற்றம் தோன்றியது.

குடும்ப அட்டை வைத்திருக்கும் அனைவருக்கும் கிலோ இரண்டு ரூபாய்க்கு அரிசி வழங்கப்படும் என்று அவர் வெளியிட்ட தேர்தல் அறிக்கை குறிப்பிட்டது. அத்துடன் பின்வரும் செய்திகளும் அத்தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றிருந்தன.

- ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி
- ஏழைப்பெண்களுக்கு எரிவாயு அடுப்பு
- விவசாயிகளுக்கும் நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம்
- கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்யும்
- பேறுகால உதவியாக ஆறுமாத கால அளவுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.
- ஆறாவது ஊதியக்குழு தன் பரிந்துரைகளை அறிவித்தவுடன் அது நடைமுறைப் படுத்தப்படும்.
- அ.தி.மு.க. அரசால் அகற்றப்பட்ட கண்ணகி சிலை மீண்டும் அதே இடத்தில் நிறுவப் படும்.
- எம்.ஜி.ஆர். பெயரிலான திரைப்பட நகரம் மீண்டும் நிறுவப்படும்.

**“**

**முந்தைய ஆட்சியின் ஆதரவாளர்கள்,**
**தற்போதைய ஆட்சியின் ஆதரவாளர்கள்**
**என உயர் அதிகார வர்க்கம் பிளவுண்டு போனது.**
**இது நிலைபெற்றுப் போய்**
**அடுத்த இருபதாண்டுகளில்**
**அரசுத் திட்டங்களையும்**
**நிர்வாகத்தையும் பாதித்தது.**

**”**

தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை வெளியான பின்னர், தன்னுடைய அரசின் சாதனைகளையும், இயற்கைப் பேரிடர்களை எதிர்கொண்ட முறையையும், ஏழை மாணவர்களுக்கு இலவசப் பாடநூல்கள், சைக்கிள் வழங்கியதையும், ஜெயலலிதா தன் தேர்தல் பரப்புரையில் குறிப்பிட்டார்.

இத்தேர்தலில் தி.மு.க. 96 தொகுதிகளிலும், அ.தி.மு.க. 61 தொகுதிகளிலும், காங்கிரஸ் 34 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன.

நலத்திட்டங்கள், சமூகநீதி, ஆட்சி உரிமை என்பனவற்றில் இருந்து விலகி, இலவசங்கள் குறித்த மேற்கூறிய வாக்குறுதிகளில் திராவிட சித்தாந்தம் சார்ந்த திட்டங்கள் எவையும் இல்லை, சோர்வடைந்த நிலையில் கருணாநிதியின் கடைசி முயற்சியே இத்திட்டங்கள் என்பது ஆசிரியரின் கருத்தாக உள்ளது. **சமத்துவம், சமூக நீதிக்கான கோரிக்கை களை முன்வைக்காது, யார் அதிக அளவில் இலவசங்களை வழங்குகிறார்களோ அவர்களை ஏற்றுக் கொள்ளும் மனநிலையில்தான் மக்கள் உள்ளார்கள் என்கிறார்.** அரசியல்வாதிகள் தம் சொந்த ஆதாயத்தையே முன்னிலைப்படுத்துவதால் சித்தாந்தம் தொடர்பான வாக்குறுதிகளை முன்வைக்காது, தனிமனித ஆதாயங்களை முன்வைப்பதாகவும் குற்றம் சாட்டுகிறார்.

அவரது கருத்துப்படி 2006, 2011, 2016 ஆண்டு களில் நிகழ்ந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்களில் திராவிட சித்தாந்தம் தொடர்பான எந்தத் திட்டங் களும் முன்வைக்கப்படவில்லை. இப்போக்கு 1991-இல் ஜெயலலிதாவின் வருகைக்கு முன்பே தோன்றி விட்டது. தொடர்ந்து, இந்தப் போக்கு தேர்தல் முடிவுகளை மாற்றியமைப்பதாக 2006-இல் மாறி விட்டது என்றாலும் தி.மு.க.வுக்கு அறுதிப் பெரும்

பான்மையை இது வழங்கவில்லை. காங்கிரஸ் ஆதரவுடனேயே ஆட்சி நடத்த முடிந்தது. இதனாலேயே 'சிறுபான்மை அரசு' என்று அ.தி.மு.க.வினர் கூறி வந்தனர்.

•••

இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி பெற்ற மாநிலங்களில் இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு இருந்தது. வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்களின் எண்ணிக்கையும் குறைந்து வந்தது. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது தமிழக வாக்காளர்கள், கற்றவர்களாகவும், வேலைபார்ப்பவர்களாகவும் நல்லநிலையில் இருந்தார்கள். அத்துடன் திமுக, அதிமுக என்ற இரண்டு கட்சிகளில் எந்தக் கட்சியில் எத்தகைய ஆதாயம் கிடைக்கும் என்பது குறித்த தெளிவு அவர்களுக்கிருந்தது. **திராவிட உணர்வைவிட பொருளாதார ஆதாயத்தையே வாக்காளர்கள் விரும்புவதை இருகட்சிகளும் உணர்ந்திருந்தன.**

### 2011 தேர்தல்

இத்தேர்தலில் ஜெயலலிதா பின்வரும் வாக்குறுதிகளை வாக்காளர்களுக்கு வழங்கினார்.

- ஒரு குறிப்பிட்ட அளவுக்கும் குறைவான வருவாய் உடையவர்களுக்கு இலவசமாக அரிசி வழங்கப்படும்.
- ஏனையோருக்கு 20 கிலோ அரிசி இரண்டு ரூபாய் விலையில் வழங்கப்படும்.
- +2 படிக்கும் பெண் குழந்தைகளுக்கும் இலவசமாக மடிக்கணினி வழங்கப்படும்.
- குடும்பம் ஒன்றுக்கு நான்கு வெள்ளாடு, கறவைமாடு, மின்விசிறி, குக்கர்கள் இலவசமாக வழங்கப்படும்.

இத்தேர்தலில் 150 தொகுதிகளில் அ.தி.மு.க. வெற்றி பெற்றது. தி.மு.க.வால் 23 இடங்களில்தான் வெற்றி பெறமுடிந்தது. அவ்வப்போது தன்னிச்சையான அறிவிப்புகள் வாயிலாக பல்வேறு நலத்திட்டங்களை ஜெயலலிதா அறிவித்து வந்தார். இவற்றுள் ஒன்று 'அம்மா உணவகம்' ஒரு ரூபாய்க்கு ஓர் இட்லி, அய்ந்து ரூபாய்க்கு புளியோதரை, தயிர்ச் சாதம் எனக் குறைந்த விலையில் இங்கு உணவு வழங்கப்பட்டது. சென்னை நகரில் மட்டும் 500 அம்மா உணவகங்கள் திறக்கப்பட்டன. தமிழ்நாடு முழுவதும் 1,500 உணவகங்கள் வரை உள்ளன. இதன் நுழைவாயிலில் பெரிய அளவிலான ஜெயலலிதா படம் மாட்டப்பட்டிருக்கும். 'அம்மா நீர்' என்ற பெயரில் ஒரு லிட்டர் தண்ணீர் பத்து ரூபாய்க்கு பேருந்து நிலையங்களிலும் இரயில் நிலையங்களிலும் விற்கப்பட்டது.

•••


அதே நேரத்தில் சமூக சீர்திருத்தம், திராவிட சித்தாந்தம் என்பனவற்றில் ஜெயலலிதாவுக்கு நம்பிக்கையில்லை. தேர்தலில் வெற்றி பெறுவதை நோக்கமாகக் கொண்டே அவரது செயல்பாடுகள் இருந்தன. பெரும்பான்மையான வாக்காளர்களுக்கு நேரடியாகப் பயன்தரும் திட்டங்களிலேயே அவர் அக்கறை காட்டினார். அவர்களது அன்றாடப் பயன்பாட்டில் இடம்பெறும், அம்மா உணவகம், மிக்சி, கிரைண்டர் என்பனவற்றின் வாயிலாக அவரது அரசு நினைவு கூரப்பட்டு அவரது கட்சியின் அரசியல் தளத்தை வலுப்படுத்தியது.

அய்ந்தாண்டுகளுக்கு ஒருமுறை வழங்கும் தேர்தல் வாக்குறுதிகளுக்கு மாறாக, ஆண்டுதோறும் ஏதாவது ஒரு திட்டத்தை அறிவிப்பதை வழக்கமாகக் கொண்டார். இது அவரது வெற்றிக்குத் துணை நின்றது.

### எதிர்காலம்

தற்போதைய மத்திய அரசிடம் இருந்து தனக்கு உரிய பங்கை, தமிழ்நாடு பெறவில்லை என்ற உணர்வு மேலோங்கி வருகிறது. ஜல்லிக்கட்டு, நீட் தேர்வு முறை என்பனவற்றில் மத்திய அரசின் நிலைப்பாடு தமிழகத்திற்கு ஆதரவாக இருக்கவில்லை என்ற கருத்தும் உள்ளது. தொழில் முதலீடுகள் குறைந்து வருகின்றன. தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட சேவைத் துறைகளில் தேக்கநிலை உருவாகியுள்ளது. அரசின் வருவாயில் பெரும்பகுதி நலத்திட்டங்களில் செலவாகிறது. வளர்ச்சித் திட்டங்களில் முதலீடு செய்யப்படவில்லை. ஜி.எஸ்.டி. வரி அறிமுகம் தமிழ்நாட்டின் வருவாயைப் பாதிக்கும் நிலையுள்ளது. வேளாண் துறையும் பாதிக்கப்பட்டுள்ளது. இட ஒதுக்கீட்டிற்கான பின்தங்கியோர் பட்டியலில் 95 விழுக்காட்டினரும் முன்னேற்றமடைந்த சாதியினராக அய்ந்து விழுக்காட்டினரும் இடம் பெற்றுள்ளனர். சாதி அடிப்படையிலான அமைப்புகள் அரசியல் கட்சிகளாக உருப்பெற்றுள்ளன, அல்லது சில குறிப்பிட்ட நிலப்பகுதிகளில் தேர்வு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மீது அழுத்தம் கொடுக்கும் ஆற்றல் உடையனவாய் இயங்குகின்றன.

இவற்றையெல்லாம் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இன்றையத் தமிழ்நாடு உள்ளது. ●




காவ்யாவின்
புதிய வெளியீடுகள்
ரூ.650/-
கா.சு.பிள்ளை சைவப்பெருமக்கள்
ரூ.600/-
வைகைக் கதைகள்
ரூ.420/-
அறிவரங்கம் ஆய்வுக் கட்டுரைகள்
ரூ.150/-
வையாபுரியாரின் கால ஆராய்ச்சி
ரூ.650/-
நெல்லைக் கோயில்கள்
ரூ.300/-
சிதறால் திருச்சாரணத்துமலை சமணப்பள்ளி
ரூ.170/-
அன்று ஆறு ஆறாயிருந்தது
ரூ.200/-
இராமநாதபுரம் வரலாற்றுக் குறிப்புகள்
ரூ.100/-
நதியும் நதிசார்ந்த கொள்ளையும்
ரூ.230/-
கவிக்கோ அப்துல் ரகுமான் படைப்புப் பின்புலங்கள்
ரூ.130/-
தொல்காப்பியப் புலப்பாட்டு நெறி
ரூ.200/-
என் இனிய வண்ணத்துப்பூச்சியே
ரூ.170/-
குமரியில் கம்பர்
ரூ.100/-
ரூ.150/-
காலந்தோறும் கவிதை
ரூ.120/-
கல்லு வீடு
ரூ.420/-
குமரி
ரூ.270/-
மானுடம் பாடும் கவிதைகள்
ரூ.140/-
நினைவெல்லாம்
ரூ.100/-
பகல் வான மேகங்கள்
16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024
பேச : 044 - 23726882 , 9840480232
மின்னஞ்சல் : kaavyabooks@gmail.com இணையம் : www.kaavyaa.com



## அஞ்சலி

26-11-2018, திங்கள் அன்று அமரரான
புகழ்பெற்ற தொல்லியல் அறிஞரும்,
கல்வெட்டியல் ஆய்வாளருமான
**ஐராவதம் மகாதேவன்**
அவர்களின் மறைவுக்கு
**'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்'**
இதழின் சார்பாக அஞ்சலி செலுத்துகிறோம்.


## நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடுகள்




**குழந்தைகளுக்கான ஆப்பிரிக்கக் கதைகள்**
**தமிழில் : எம். பாண்டியராஜன்**
விலை : ₹ 99/-
ஆப்பிரிக்க நாட்டில் புழங்கி வரும்
செவிவழிக் கதைகள் சிறார்கள் விரும்பிப் படிக்கும்வண்ணம்
எளிமையாகவும் சிறப்பாகவும் தொகுக்கப்பட்டுள்ளன.
இந்நூலில் இடம்பெற்றுள்ள கதைகளுக்கேற்ப
தீட்டப்பட்டுள்ள சித்திரங்களும் சிறப்புற அமைந்துள்ளன.




**பெண்ணியம் வரலாறும் கோட்பாடும்**
**சாரா காம்பிள் - டோரில் மோய்**
விலை : ₹ 90/-
கருத்துக்களை எளிதாய்ப் புரியவைக்கும்
வகையிலான தமிழாக்கமாக அமைந்துள்ள
இந்நூல் பெண்ணியம் என்பது பெண்களுக்கான
அறிவாக மட்டுமில்லை, அது ஆண், பெண்...
முதலான அனைத்து மனிதப் பிறவிகளுக்கும் உரியதாக
இருக்கின்றது என்ற கருத்தை உரத்துச் சொல்கிறது.



# தமிழர் வரலாற்றில் புதிய கண்டுபிடிப்பை மேற்கொண்டவர் அறிஞர் ஐராவதம் மகாதேவன் (1930-2018)

**கி.இரா.சங்கரன்**

**19** ஆம் நூற்றாண்டில் உலகவரலாற்றில் என்றும் இல்லாத அளவிற்கு புதிய புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளும், தத்துவ கோட்பாடுகளும், பாட இயல்களும் உருவாயின. இக்காலக்கட்டத்தில் மூன்று அறிஞர்கள் முக்கியமானவர்கள்: சார்லஸ் டிக்கன்ஸ் (எழுத்தாளர்), சார்லஸ் டார்வின் (உயிரியல் பரிணாம அறிஞர்), கார்ல்மார்க்ஸ் (சமூக விஞ்ஞானி). இக்காலத்தின் அறிஞர்கள் பெரும்பாலும் பல்துறை வல்லுநராய் இருந்தனர். இது ஒருபுறமிருக்க, 19 ஆம் நூற்றாண்டு நெடுக ஐரோப்பிய நாடுகளிடையே நிலத்தின் மீதும், கடலின்மீதும் நாடுபிடிக்கும் போட்டிகளும் தொடர்ந்து, அதற்கான போர்களும் நிகழ்ந்தன. இதற்கான தொழில்நுட்பத்தினை இங்கிலாந்தின் தொழில்புரட்சி வழங்கியது; கருத்தியல் புரட்சியினை பிரான்ஸ் வழங்கியது. தொழில்புரட்சி வளர வளர, அடிமை தேசங்களும் அடிமைகளும் கூடினர். இச் சூழலில் பாதிரி - அறிஞர்கள் ஒருபுறமும், ஆட்சி - அலுவலர் - அறிஞர் ஒருபுறமும் காலனிய நாடுகளின் வரலாறு, மொழி, சமூகம், உற்பத்திமூலங்களான நதிகள், வனங்கள் பற்றிய ஆய்வுகளை செய்தனர். இந்தியத் துணைக்கண்டத்திலும் அப்போக்கு நிகழ்ந்தது.

இங்கு நடந்த மைசூர் போர்கள், கர்நாடகப் போர்கள் போன்றன தென்னிந்திய உற்பத்தி மூல வளங்களை இங்கிலாந்தும் பிரான்ஸும் கைப்பற்றுதற்கே. உள்நாட்டு ஆட்சியாளர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட நிலப்பிரதேசங்களைச் சட்டப்படி தம் ஆட்சிக்குள் நிறுவிக்கொள்வதற்கு காலனிய நிலப்பிரதேச இலக்கியங்களில் பரிந்துரைக்கப்பட்ட சமூக சட்டங்களைக் கொண்டே ஆளும் முயற்சியினை உருவாக்க ஐரோப்பிய அரசுகள் முயன்றன. இந்தியாவின் வடமொழி இலக்கியங்களில் உள்ள *நீதிசாஸ்திரம், மனுசாஸ்திரம்* போன்றவையும், கீதையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன; தெற்கில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டது. தமிழகத்தில் இந்நூல்தான் ஓலைச்சுவடி வடிவில் அதிக இடங்களில் கிடைத்தது.

இது ஒருபுறமிருக்க, ஐரோப்பாவில் முதலாளித்துவ வளர்ச்சியையும், அது உருவாக்கிய தொழிலாளர் அமைப்புகளையும் புரிந்துகொள்வதற்கு ஒவ்வொரு ஐரோப்பிய நாட்டின் மொழி, வரலாறு, மானிடவியல் போன்ற அறிவியல் பாடங்களை கார்ல்மார்க்சும் பிரடரிக் எங்கல்சும் கற்கத்தொடங்கினர். பிரடரிக் எங்கல்ஸ் அந்தந்த நாட்டின் வரலாற்றினை அந்தந்த நாட்டின் மொழியிலேயே கற்றார். பண்டைய-கிரேக்கம், லத்தீன், ருஷ்யா, ஸ்காண்டிநேவியன்-மொழிகள், ருமேனிய, பல்கேரியா, ஜெர்மன், பிரஞ்ச், டச்சு - மொழிகளிலும் நன்கு பயிற்சி பெற்றிருந்தார். இத்துடன் வேதியல், இயற்பியல், உடற்கூறியல், பொருளியல், மொழியியல் போன்ற துறைகளையும் கற்றுத்தேர்ந்தார். அயர்லாந்தின் விவசாயிகளின், ஆலைத்தொழிலாளர்களின் நிலைமைகளை நேரில் அறிந்துகொள்வதற்கு கார்ல்மார்க்சும், பிரடரிக் எங்கல்சும் நேரிடையாக கள ஆய்வினை மேற்கொண்டனர். இப்படி சமூக ஆய்விற்கு கள ஆய்வு, கற்றல் ஆய்வு இரண்டையும் மேற்கொண்டனர். பிரடரிக் எங்கல்ஸ்1853 இல் அரபிய வரலாற்றையும், பழையஏற்பாட்டில் குறிக்கப்பட்டுள்ள தந்தைவழி குலமரபினையும் சரியாகப் புரிந்துகொள்ள அரபு மொழி கல்வெட்டு பற்றி அண்மையில் வெளியிடப்

பட்ட நூலொன்றைத் தாம் படித்ததாக கார்ல் மார்க்சுக்குக் கடிதம் எழுதினார். கல்வெட்டுகள் மூலம் பண்டைக் காலத்து புவியியலைச் சரியாகப் புரிந்துகொள்ள முடிகிறது என்றார். அசோகரின் தென்னெல்லையினை கல்வெட்டுகள்தான் முடிவு செய்கின்றன. ராபர்ட் கால்டுவெல் மொழியியல் ஆய்வுடன் சமூகவியல் ஆய்வினையும் செய்தார். தென் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் நூலினை 1856 இல் வெளியிட்டார். 1857 இல் பிரடரிக் ஏங்கல்ஸ் 'பாரசீகமும் சீனாவும்' என்ற நூலினை வெளியிட்டார். இவரைத் தொடர்ந்து பெ.சுந்தரம் பிள்ளை திருஞானசம்பந்தரின் வரலாற்றுக் காலத்தினை முன்வைத்து தமிழிலக்கிய வரலாற்றினை (1895) ஆயும்போது சாசனச் சான்றுகளைப் பயன்படுத்தினார்.

தென்னிந்திய கல்வெட்டுகளை ஆய்வுசெய்த கீல்ஹான், ஹல்ஸ்க், வெங்கய்யா போன்ற அறிஞர்களுக்குப்பின் சென்ற நூற்றாண்டின் முதல் கால் கூற்றில் கல்வெட்டறிஞர் கே.வி.சுப்ரமணிய அய்யர் தென் தமிழகத்தின் குகைத்தளங்களிலுள்ள கல்வெட்டுகளின் மொழியமைப்பு இந்தியாவின் பிறமொழிகளினின்றும் வேறுபடுகின்றது என்றும், அது தமிழ் மொழியாக இருப்பதற்கு வாய்ப்பு அதிகம் என்றும் தம் கருத்தை முன்வைத்தார். அக்காலக்கட்டத்தில் தமிழகத்தில் திராவிடம் என்ற கருத்தியலின் ஊடே தமிழறிஞர்கள் மத்தியில் தமிழ், இனம், மொழி, பண்பாடு என்ற குரலும் உரக்க ஒலித்தன. ஆனால், இவ்வுரத்த குரல்களுக்குச் சொந்தக்காரர்கள் இத் துறையில் ஆய்வுகளை மேற்கொள்ளவில்லை. மாறாக, கே.வி.சுப்பிரமணிய அய்யர், டி.என்.சுப்ரமணியன், டி.வி.மகாலிங்கம் போன்றவர்களே சாதித்தனர். இவ் வரிசையில்தான் அண்மையில் மறைந்த ஐராவதம் மகாதேவன் இடம்பெறுகிறார். இவரும், அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி போன்று கல்வி புலத்திற்கு அப்பாற்பட்டு இயங்கிய தன்னியல்பான ஆய்வாளர். ஐராவதம் மகாதேவனின் குறிப்பிடப் பட்ட கண்டுபிடிப்பு 1965 இல் மொழியினை முன்னிறுத்தி ஒரு தழல் போல் தமிழகத்தில் போராட்டம் கொதித்துக்கொண்டிருந்தபோது சேரர் அரசகுலத்து மூன்றுதலைமுறை மன்னர்களின் பெயர்களைத் தொடர்ந்து பதித்துள்ள புகளூர் கல்வெட்டினை முழுமையாகப் படித்து வெளியிட்டதாகும். இக்கல்வெட்டின் மன்னர் பெயர்கள் பதிற்றுப்பத்து இலக்கியத்தின் சேரர் மன்னர்களுடன் ஒப்பிடப்பட்டது தமிழர் வரலாற்றில் ஒரு புதிய கண்டுபிடிப்பு. பழந்தமிழ்க் கல்வெட்டுகள் என்ற ஆய்வுநூலினை உருவாக்குதற்கு அவர் எடுத்துக் கொண்ட முயற்சியும் அதனை வெளியிட்டதும் தமிழ் வரலாற்றினை உலக வரலாற்றில் ஒரு கல்வெட்டாகப் பொறித்துள்ளது. இந்நூலிற்கான ஆய்வுத்திட்டத்திற்கு அப்போது அவரைவிட அதிக வயது இளையவர்களான அதே நேரத்தில் பிராமி கல்வெட்டுகளைப் படித்தறிந்து பொருள்சொல்வதில் துறைபோகிய அறிஞர்களான திருவாளர்கள் சு.இராஜகோபால், சொ.சாந்தலிங்கம், வெ.வேதாசலம், சு.இராஜவேலு, அளக்குடி. சீதாராமன் போன்றோர் பெரிதும் துணை நின்றனர். வயது பேதமின்றி சமமாக அவர்களுடன் அமர்ந்து வாதிட்டு தம் ஐயங்களை சரிசெய்து கொள்வார். சிறு சிறு சந்தேகங்களையும் மிகவும் தெளிவாக்கிக்கொள்வார். மட்கலத்துண்டுகளிலுள்ள பழந்தமிழ் கீறல் (இது அவர் சொல்) சொற்களின் வரலாற்றுத்தன்மையினை மண்ணடுக்கு-காலத்தின் பின்புலத்தில் உறுதிசெய்துகொள்ளப் பேராசிரியர் கா.ராஜன் அவர்களிடம் உரையாடுவார். கருத்தியல் தொடர்பானவற்றைப் பேராசிரியர் எ.சுப்பராயலு அவர்களிடம் கலந்துகொள்வார். ஆனால், இவர்கள் முன்வைக்கும் மாற்றுக்கருத்துகளை மெல்லிய புன்னகையுடனோ, பலத்த சிரிப்புடனோ மறைத்துக் கொள்வார் என்று அறிந்திருக்கிறேன்.

இவருடைய நூல் வெளிவந்தவுடன் பழந் தமிழிலக்கியத்தின் கால அடுக்குகள் மாற்றப்பட வேண்டுமென்ற தேவையை பேரா.கார்த்திகேசு சிவத்தம்பி வலியுறுத்தினார். மேலும் சிலர் சிறப்புக் கட்டுரைகளை மொழியியல் பின்புலத்தில் வெளியிட்டனர்.

இவர் நூலிற்கான களஆய்வில் கல்வெட்டுகளைப் படியெடுக்கையில் கல்வெட்டுக் குழிவுகளின் மேல் வேதிவர்ணம்பூசி வாசித்தது ஆய்வுமுறையில் செய்யப்பட்ட பெருந்தவறு. தவறான முன்னுதாரணம். அப்புகைப்படத்தினை தமிழ் இந்து வெளியிட்டிருந்தது. பிறகு, ஒருசில இளந்தலைமுறையினரும் இதனைச் செய்தனர். உ.வே.சா. அவர்கள் பெரும்பாலான சங்க இலக்கியத்தினை சுவடிகளில் இருந்து நூல்வடிவாக்கித் தந்தார்; ஐராவதம் மகாதேவன் அவர்கள் பாறைகளின்மேல் வரிவடிவமாயிருந்த பழந்தமிழ்க் கல்வெட்டுகளைப் படியெடுத்து நூலாக்கித் தந்தார். இந்நூல் வாயிலாக தமிழிலக்கியத்தின் காலக்கணிப்பிற்கு பழந்தமிழ்க் கல்வெட்டுகளின் உறுதித்தன்மை முன்வைக்கப்பட்டதை ஆய்வாளர்கள் அடுத்த கட்டத்திற்கு நகர்த்த வேண்டும். அவரிடம் கற்றுக்கொள்ளவேண்டியது: ஆர்வம், விடாமுயற்சி, சுறுசுறுப்பு, கலந்துரையாடல், கருத்துமோதலை வன்மமாக வளர்க்காமை, கலகலப்பாக இயங்குதல், சான்றுகளை நேரிடையாகச் சேகரித்தல், துறைபோகிய அறிஞரிடையே உரையாடுதல், அதற்காகப் பயணித்தல், திட்டமிட்ட ஆய்வுரை. ●

# சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும்

ஐராவதம் மகாதேவன்

கரூரை அடுத்த புகளூரில் ஆறுநாட்டான் குன்றின் மீது பொறிக்கப்பட்டுள்ள சேரல் இரும்பொறை மன்னர்களின் கல்வெட்டுகளைக் கண்டறியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததும், அதை ஒட்டி உலகத் தமிழ்க் கருத்தரங்குகளில் தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகளைப் பற்றி எழுந்த சுவையான விவாதங்கள் என் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்ச்சிகள் ஆகும். அவற்றுள் சில நினைவுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

1962-ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டு காலம் நான் கைத்தறித் துறை இயக்குநர் ஆகப் பணியாற்றி வந்தேன். தமிழகத்தில் மாவட்டத்திற்கு ஒரு நூற்பு ஆலை அமைக்கும் பொறுப்பையும் ஏற்றிருந்தேன். அதே நேரத்தில்தான் ஓய்வு கிடைக்கும்பொழுது மலைச் சாரல்களிலும் சிறு குன்றுகளிலும் காணப் படும் பிராம்மிக் கல்வெட்டுகளைச் சேகரிக்கும் சொந்த முயற்சியிலும் ஈடுபட்டிருந்தேன். எனக்கு அப்பொழுது இரண்டு ஆசைகள் இருந்தன. ஒன்று, பொருள் விளங்கவில்லை என்று அறிஞர்களால் அநேகமாகக் கைவிடப்பட்டிருந்த தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகளைச் சரிவர வாசிக்கும் முறையைக் கண்டறிய வேண்டும்; மற்றொன்று, சங்க காலத் தமிழ் மன்னர்களைப் பற்றிய எவ்விதமான புறச் சான்றுகளுமே தமிழகத்தில் கிடைக்கவில்லை என்ற குறை நீங்குமாறு அவர்களுடைய பெயர்களையோ மற்ற குறிப்புக்களையோ இக்கல்வெட்டுகளில் காண வேண்டும் என்பனவாகும். இவ்விரு ஆசை களும் நிறைவேறியது எனக்குக் கிடைத்த பெரும் பேறுகள் என்றே கருதுகிறேன். தமிழ் நாட்டிலுள்ள பிராம்மிக் கல்வெட்டுகள் தமிழிலேயே எழுதப் பட்டவை என்றும், அவைகளைப் பொருள் சிறக்க வாசிக்க ஒரு முறை இருக்கிறது என்றும் நான் கண்டறிந்த ஆராய்ச்சிகளைப் பற்றி இங்குக் கூற இடமில்லை. சங்க காலத் தமிழ் மன்னர்கள் முதன் முதலாகத் தமிழகக் கல்வெட்டுகளில் தோன்றிய கதையை மட்டும் இங்குக் கூறலாம் என்று நினைக்கிறேன்.



இந்திய அரசின் தொல்பொருள் துறையினர் ஆண்டுதோறும் வெளியிட்டு வந்த தென்னிந்தியக் கல்வெட்டுக்களைப் பற்றிய அறிக்கைகளில் 1927-28 ஆம் ஆண்டுகளின் தொகுதியில் புகளூர்க் கல்வெட்டு களைப் பற்றிய செய்திகள் முதன் முதலாகக் கிடைக்கின்றன. இவ்வறிக்கையில் ஆறுநாட்டான் குன்றின் மீதுள்ள குகைகளுள் ஒன்றில் நான்கு வரிகளில் எழுதப்பட்டுள்ள ஒரு பிராம்மிக் கல்வெட்டு இருப்பதாகவும், அது மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதால் அதைச் சரிவரப் படிக்க முடியவில்லை என்றும், அதில் **ஆதன்** என்ற சொல் காணப்படுவதால் அக்கல்வெட்டு சேர மன்னர் களைப் பற்றியதாக இருக்கலாம் என்றும் கூறப் படுகிறது. தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகள் பெரும் பாலும் மிகச் சுருக்கமாக ஒரே வரியில் மூன்று அல்லது நான்கு சொற்களைக் கொண்டு மட்டுமே பொறிக்கப்பட்டவை. இந்நிலையில், நான்கு

வரிகளாலான மிக நீளமான கல்வெட்டு அதிலும் சேர மன்னர்களைக் குறிக்கக் கூடிய ஒரு கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்ட பிறகும் நாற்பது ஆண்டுகளாக வாசிக்கப்படாமல் இருந்து வந்தது எனக்கு வருத்தமாக இருந்தது. என்றாவது ஒரு நாள் நேரில் போய்ப் பார்த்து இக்கல்வெட்டைத் தீர ஆராய வேண்டும் என்று எண்ணியிருந்தேன்.

அந்த நாளும் 1965-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் தேதியன்று வந்தது. அன்று கரூருக்கருகில் கட்டப் பட்டு வந்த கூட்டுறவு நூற்பாலையைப் பார்வையிடச் சென்றிருந்தேன். என் வழக்கப்படி கையுடன் அருகாமை யிலுள்ள பழங்கல்வெட்டுகளைப் பற்றிய குறிப்பு களையும் எடுத்துச் சென்றிருந்தேன். அவற்றுள் ஒரு குறிப்பு மேற்கூறிய ஆறுநாட்டான் குன்றிலுள்ள கல்வெட்டுகளைப் பற்றியது ஆகும். நூற்பு ஆலையில் என்னுடைய அலுவல்களை முடித்துக் கொண்டு மாலை நேரத்தில் நானும் மற்றும் சில நண்பர்களுமாகக் காரில் ஆறுநாட்டான் குன்றின் அடிவாரம் வரை சென்றோம். அதற்குமுன் எங்களில் எவரும் அச்சிற்றூருக்குப் போனது இல்லை; மலையின் மீது ஏறக் கிழக்குப் பக்கத்திலிருந்து படிக் கட்டுகள் இருப்பது கூட எங்களுக்கு அப்பொழுது தெரியாது. பெரும்பாலும் தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுக்கள் மனித சஞ்சாரம் அற்ற முள் புதர்கள் நிறைந்த குன்றுகளில்தான் இருக்கின்றன! அதே நினைவில் எவரையும் வழி கேட்காது குன்றின் தென்புறம் இருக்கும் ஒரு கரடுமுரடான சரிவின் வழியாக வியர்க்க விறுவிறுக்க குன்றின் மீது ஏறி உச்சியின் தெற்குச் சாரலை அடைந்தோம். மேலைக் கோடியில் தென்முகமாக இருந்த குகையின் உயரமான வாயிலுக்கு மேலாக வெட்டப்பட்டிருந்த பிராம்மிக் கல்வெட்டு மஞ்சள் நிறமான மாலை வெய்யிலில் பளிச்சென்று தெரிந்தது. கல்வெட்டு மிகவும் தேய்ந்துபோய் அங்கொன்றும் இங்கொன்றும் ஆகச் சில எழுத்துக்கள் மட்டும்தான் தெரியும் என்று எதிர்பார்த்து ஏமாற்றம் அடையத் தயாராகத்தான் வந்திருந்தேன். ஆனால் நான் கண்டது வேறு; மிகப் பெரிய எழுத்துக்களில் நான்கு நீண்ட வரிகளில் தெளிவாகப் பொறிக்கப்பட்டிருந்தது அக்கல்வெட்டு. முதலிலும் முடிவிலும் ஓரிரு எழுத்துக்கள் நீங்கலாக ஏனைய எழுத்துக்களைப் படிப்பதும் எனக்குக் கடினமாகவே இல்லை. இந்தக் கல்வெட்டையா நாற்பது ஆண்டுகளாகப் படிக்க முடியவில்லை என்று விட்டுவிட்டார்கள் என்ற வியப்பு அன்று மேலோங்கியது; இன்றும் தணியவில்லை.

கையுடன் எடுத்து வந்திருந்த நோட்டுப் புத்தகத்தைப் பிரித்து கல்வெட்டை எழுத்துக் கூட்டி வாசித்த வண்ணம் படியெடுக்கலானேன். முதல் வரியில் புதுமை எதுவும் இல்லை: **யாற்றூர்** என்னும் இடத்தைச் சேர்ந்த சமணத் துறவியான **செங்காயபன்** வசிக்கும் உறையுள் இது என்று குறிப்பிடப் பட்டிருந்தது. இது பெரும்பாலும் ஏனைய தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகள் தரும் செய்திகள் போலவே யிருந்தது. அடுத்த வரிக்குப் போனேன்: இரண்டாவது வரியில் **கோ** என்ற முதல் சொல்லைக் கண்டவுடன் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது; சங்க காலத் தமிழ் மன்னரின் கல்வெட்டுகள் இது என்பது உறுதியானது. மேலும் படித்தேன் இரண்டாம் வரியை.

'கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்'

என்ற சொற்களைப் படித்தவுடன் எனக்கு ஏற்பட்ட வியப்பையும் மகிழ்ச்சியையும் சொல்லி மாளாது! ஆனாலும் தமிழிலும் வரலாற்றுத் துறையிலும் ஈடுபாடு உள்ள அன்பர்களுக்கு எனக்கு ஏற்பட்ட உணர்ச்சி வெள்ளத்தை விளக்க அவசியம் இல்லை என்றே நினைக்கிறேன். அடுத்தடுத்து **'பெருங் கடுங்கோன்', 'இளங்கடுங்கோ', 'இளங்கோ'** என்ற பெயர்களைப் படித்தபொழுது என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. சங்க நூல்களில் மட்டும் இதுவரை காணப்பட்ட பண்டையத் தமிழ் மன்னர்களின் பெயர்களைத் தமிழகத்தில் முதல் முறையாக ஒரு கல்வெட்டில் கண்டுவிட்ட ஆனந்தத்தில் நோட்டுப் புத்தகத்தை தலைக்கு மேல் தூக்கிப் பிடித்துக் கொண்டு கூத்தாடினேன். என்னுடன் வந்தவர்கள் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள்!

என்னை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திய அக்கல்வெட்டின் முழு வாசகம் பின் வருமாறு:

"...அமண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய்
கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்
பெருங் கடுங்கோன் மகன் (இ)ளங்
கடுங்கோ (இ)ளங்கோ ஆக அறுத்த கல்"

இது கருவூரிலிருந்து ஆட்சி செய்த சேரல் இரும் பொறை மன்னர்கள் பொறித்தது: பதிற்றுப்பத்திலும், ஏனைய சில சங்க நூல்களிலும் பாடப்பெற்ற பழந்தமிழ் மன்னர்கள் இவர்கள்: இக்கல்வெட்டு ஏறத்தாழ கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது: இச்செய்திகள் மட்டும் எனக்கு அப்பொழுதே விளக்கமாகத் தெரிந்தன. அதற்குள் இருட்டி விட்டதால் மற்ற கல்வெட்டுகளை இன்னொரு முறை பார்த்துக் கொள்ளலாம் என்று (கீழ்ப்புறம் இருந்த படிக்கட்டுகள் வழியாக!) இறங்கிக் கரூருக்குத் திரும்பினோம்.

நான் சென்னை வந்த அன்றே வரலாற்றுப் பேராசிரியர் திரு. நீலகண்ட சாஸ்திரி அவர்களின் வீட்டுக்குச் சென்று நான் எடுத்துவந்த கல்வெட்டுப் படியைக் காட்டினேன். அவர் அப்பொழுது

என்னிடம் கேட்ட கேள்வி இன்றும் நினைவில் இருக்கிறது. ''கையால் தானே எழுதியிருக்கிறீர்கள்; ஒழுங்காகப் படியெடுத்தீர்களா?'' என்று கேட்டார்! ஆராய்ச்சி முறைகளில் அவருக்கு இருந்த அழுத்தத் தையும் உண்மைப் பற்றையும் படிப்பினைகளாகக் கொண்டேன் அன்று. அதற்கு அடுத்த சில நாட் களிலேயே கரூரிலிருந்த நண்பர்களின் உதவியால் அந்தக் குகை வாயிலில் மூங்கிலால் சாரம் கட்டி அதன் மீது ஏறி நின்று பாறையின் மீது மெல்லிய தாட்களைப் பரப்பி கல்வெட்டை எழுத்தெழுத்தாகக் கவனமாகப் படியெடுக்க ஏற்பாடு செய்தேன் (அப்பொழுது எடுக்கப்பட்ட படியின் நகல்தான் இக்கட்டுரையுடன் தரப்பட்டுள்ளது). அதற்குப் பிறகு ஒவ்வொரு முறையும் கரூருக்குச் செல்லும் பொழு தெல்லாம் புகளூருக்கும் 'தலயாத்திரை' சென்று ஆறுநாட்டான் குன்றிலிருந்த எல்லா பிராம்மிக் கல்வெட்டுகளையும் ஒன்றொன்றாகப் படியெடுத்து முடித்தேன். அதே ஆண்டு மார்ச் மாதம் ஹிந்து தினத் தாளில் புகளூர்க் கல்வெட்டுகளைப் பற்றி ஒரு சிறு குறிப்பையும் வெளியிட்டேன்.

பிறகு ஒரு நாள் என் ஆராய்ச்சிக் குறிப்புக்களை எடுத்துக்கொண்டு கோவையில் அப்பொழுது வசித்து வந்த திரு. கே.வி. சுப்பிரமணிய அய்யர் அவர்களைக் காணச் சென்றேன். அய்யரவர்கள்தாம் தமிழ்நாட்டிலுள்ள பிராம்மிக் கல்வெட்டுகளின் ஆராய்ச்சிக்கு அடிகோலியவர். இக்கல்வெட்டுகளில் தமிழுக்கே உரிய எழுத்துக்களான ழ, ள, ற, ன ஆகியவை வருவதை முதன் முதலாகச் சுட்டிக்காட்டி இக்கல்வெட்டுகள் பிராகிருத மொழியில் ஆனவை என்ற தவறான கருத்தை மறுத்து, இவை தமிழில் தான் எழுதப்பட்டவை என்று நிறுவிய சீரிய ஆராய்ச்சி யாளர் அய்யரவர்கள். வயது மிகவும் முதிர்ந்து, உடல் தளர்ந்து, கண் பார்வை சரியாக இல்லாத நிலையிலும் புகளூர்க் கல்வெட்டைப் பற்றிய செய்திகளை தினத் தாள்களில் படிக்கக் கேட்டுத் தெரிந்து வைத்துக்கொண்டிருந்தார் அவர். நான் அவர் முன் அமர்ந்தவுடன், 'சேரல் இரும்பொறை மன்னர்களின் கல்வெட்டைப் பற்றி எழுதியவர் நீங்கள் தானா?' என்று கேட்டார். நான் 'ஆம் என்றவுடன் தன் கை விரல்களால் என் முகத்தைத் தடவிப் பார்த்தார்; அப்பொழுது அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது; 'நீங்கள் கொடுத்து வைத்தவர்!' என்று ஆசி கூறினார். அப் பெரியவரின் கல்விப்பற்றையும் தூய உள்ளத்தையும் அன்பையும் நினைத்து நினைத்து என் உள்ளம் நெகிழ்கிறது.

நன்றி : 'கல்வெட்டு' இதழ்

## மார்க்ஸ், அம்பேத்கர் ஓர் உரையாடல் நூலை முன்வைத்து கருத்தரங்கம்




நாடாளுமன்ற உறுப்பினர் டி.ராஜா, பேரா.ந.முத்துமோகன் இணைந்து எழுதிய 'மார்க்ஸ், அம்பேத்கர் ஓர் உரையாடல், (Marx and Ambedkar Continuing the Dialogue) என்னும் நூலை முன்வைத்து தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில் சென்னை, மகாகவி பாரதி நகரில் கருத்தரங்கம் நடைபெற்றது. கீ.சு.குமார் (த.நா.ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம்), மோ.ஜேம்ஸ் (த.நா. கலை இலக்கியப் பெருமன்றம்), தீக்கதிர் முன்னாள் ஆசிரியர் வே.மீனாட்சி சுந்தரம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு மாநிலத் துணைச்செயலாளர் மு.வீரபாண்டியன், தோழர்கள் ஜி.மனோகரன், வெற்றி சங்கமித்ரா, சி.முருகன் ஆகியோர் உட்பட பலர் இக்கருத்தரங்கத்தில் கலந்து கொண்டனர்.

# திருவள்ளுவரின் திருமேனி தாங்கிய தங்கக் காசு


ஐராவதம் மகாதேவன்

திருவள்ளுவப் பெருமானின் திருவுருவம் பொறித்த ஒரு தங்க நாணயம் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினி அரசால் 16-ஆம் நூற்றாண்டில் சென்னையிலிருந்து வெளியிடப்பட்டது என்பது இதுவரை எவருக்கும் தெரிந்திராத ஒரு வியப்பான செய்தியாகும்.

### கும்பினியார் வெளியிட்ட காசு

கல்கத்தாவில் உள்ள இந்திய அருங்காட்சியகத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள தங்க நாணயங்களின் பட்டியலில் முதல் தொகுதியில் இந்தத் தங்க நாணயத்தைப் பற்றிய ஒரு சிறுகுறிப்பு முதன் முதலாகக் காணப்படுகிறது. இரட்டை வராகன் என்று அழைக்கப்பட்ட ஒரு தங்க நாணயத்தின் முன்புறத்தில் அமர்ந்த நிலையில் 'விஷ்ணு'வின் திருவுருவமும், பின்புறத்தில் ஐந்துமுனை நட்சத்திரமும் பொறிக்கப்பட்டுள்ளன என்று இக்குறிப்பு தெரிவிக்கிறது. இக்காசு ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினியின் சென்னை அரசால் 1819க்கு முன்னர் வெளியிடப் பட்டது என்றும், இது புத்தம் புதியதாகக் காணப் படுவதால் அச்சிடப்பட்டும் புழக்கத்திற்கு வெளியிடப் படாத நாணயமாக இருக்க வேண்டும் என்றும், இதே போன்று நான்கு நாணயங்கள் மட்டுமே கிடைத்துள்ளன என்றும், அவற்றில் இரண்டு லண்டனில் பிரிட்டிஷ் மியூசியத்திலும், மற்ற இரண்டு கல்கத்தாவில் இந்திய அருங்காட்சியகத்திலும் சேகரித்து வைக்கப் பட்டுள்ளன என்றும் இக்குறிப்பிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. மேற்கண்ட குறிப்பில் இக்காசில் காணப்படும் உருவம் 'விஷ்ணு' என்று தவறாக அடையாளம் காட்டப்பட்டதாலும், நாணயத்தின் படம் அந்த நூலில் தரப்படாததாலும், சென்னையிலிருந்து கும்பினி அரசு வெளியிட்ட பல 'நட்சத்திர பகோடா' காசுகளில் இதுவுமொன்று என்று கருதி நாணயவியல் அறிஞர்கள் இந்த அரிய நாணயத்தைப் பற்றி மேலும் ஆய்வு செய்யாமலே விட்டுவிட்டனர் என்று தோன்றுகிறது.


பல ஆண்டுகளுக்குப் பிறகு அண்மையில் கல்கத்தா பல்கலைக்கழகத்து வரலாற்றுப் பேராசிரியர் பி.என். முகர்ஜி கல்கத்தா அருங்காட்சியகத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள தங்க நாணயங்களின் பட்டியலை



திருவள்ளுவர் திருவுருவம் தாங்கும் தங்கக்காசுகள்
(கல்கத்தா அருங்காட்சியகம்)



திருவள்ளுவர் திருவுருவம் தாங்கும் தங்கக்காசுகள் (முன்புறம்)
(பிரிட்டிஷ் அருங்காட்சியகம், லண்டன்)



திருவள்ளுவர் திருவுருவம் தாங்கும் தங்கக்காசுகள் (பின்புறம்)
(பிரிட்டிஷ் அருங்காட்சியகம், லண்டன்)

மட்டும் தெளிவான வண்ணப்படங்களுடன் வெளியிட்டுள்ளார். இந்நூலில்தான் முதன்முதலாக இங்குக் குறிப்பிடப்படும் தங்க நாணயத்தின் வண்ணப்படம் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இந்திய நாணய வரலாற்றிலேயே மிகச் சிறந்த தங்க நாணய வெளியீடுகளில் இதுவுமொன்று என்று இந்த நூல் சுட்டிக் காட்டியிருக்கிறது. காசின் முன்புறம் அமர்ந்த

நிலையில் காணப்படும் திருவுருவம் 'முனிவராகவோ அல்லது தெய்வமாகவோ' இருக்கலாம் என்று முகர்ஜி கருத்துத் தெரிவித்துள்ளார்.

**நாணயத்தைப் பற்றிய விவரங்கள்**

காசின் முன்புறத்தில், அமர்ந்த நிலையில் ஒரு முனிவரின் திருவுருவம் காணப்படுகிறது. அவர் ஒரு பீடத்தின்மீது பத்மாசனமிட்டுத் தியான நிலையில் அமர்ந்திருக்கிறார். தொடையின் மேல் உள்ள வலது கை விரல்கள் மூடி ஒரு எழுத்தாணியை வைத்துள்ள பாவனையிலும், இடது கை ஒரு சுவடியை ஏந்தி உள்ள பாவனையிலும் உள்ளன. இடையில் தட்டுச் சுற்றாக வேட்டியும், இடது தோளில் மடித்துப் போட்ட துண்டும் அணிந்துள்ளார். மழித்த தலை; தலைக்கு மேலே ஒரு குடை; பீடத்துக்கு முன் ஒரு தீர்த்த பாத்திரம் காணப்படுகிறது. காசின் பின் புறத்தில் ஐந்துமுனை நட்சத்திரம் புள்ளிகளாலான வட்டத்துக்குள் பொறிக்கப்பட்டுள்ளது.

**யார் இந்த முனிவர்?**

காசின் முன்புறம் காணப்படும் உருவத்தின் மேனியில் எந்தவிதமான ஆபரணங்களும் இல்லாத தாலும், சுற்றிலும் கொடி, ஆயுதம் போன்ற எந்த விதமான சின்னங்களும் காணப்படாததாலும் இவ் வுருவம் எந்த ஒரு தெய்வத்தையோ அல்லது அரசனையோ குறிக்கவில்லை என்று தெளிவாகத் தெரிகிறது. மேலே உள்ள குடை, அமர்ந்துள்ள பீடம், தீர்த்த பாத்திரம், பத்மாசனத்தில் தியான நிலை, எளிய உடை ஆகியவற்றிலிருந்து இத்திருவுருவம் ஒரு முனிவரைக் குறிக்கிறது என்று நிச்சயமாகக் கூறலாம். மேலும் அவருடைய இடையில் உள்ள வேட்டி தட்டுச் சுற்றாக இருப்பதினாலும், தோளில் துண்டை மடித்துப் போட்டுள்ள பாங்கிலிருந்தும் இவர் ஒரு தமிழ் முனிவர் என்று அடையாம் காண முடிகிறது. இவர் சுவடியை ஏந்தியுள்ள பாவனையில் சித்திரிக்கப் பட்டுள்ளது. இவர் ஒரு ஆசானாகவோ பெரும் புலவராகவோ இருக்க வேண்டும் என்று உணர்த்துகிறது. யார் இந்த முனிவர்? இவருடைய திருவுருவம் கும்பினியார் போட்ட தங்கக் காசில் எப்படி இடம் பெற்றது? காசில் எழுத்துக்கள் இல்லாத நிலையில் இக்கேள்விகளுக்குப் பலதரப்பட்ட அகச்சான்று களையும் புறச்சான்றுகளையும் கொண்டுதான் விடை காண முடியும்.

எளிய உடையுடன் தியான நிலையில் ஒரு குடையின் கீழ் அமர்ந்து ஒரு நூலை ஏந்தியுள்ள பாவனையில் சித்திரிக்கப்பட்டுள்ள இத் திருவுருவம் திருவள்ளுவப் பெருமானுடையதாக இருக்கலாமோ என்ற ஓர் எண்ணம் என் மனதில் பளிச்சிட்டது. இந்த யூகத்தை உறுதிப்படுத்திக் கொள்ளச் சென்னை ஆவணக் காப்பகத்தில் சேகரித்துப் பாதுகாக்கப்பட்டு வரும் கும்பினி அரசாணைகளையும், அக்கால நாணய சாலையின் அறிக்கைகளையும் பார்வையிட்டதில் சில முக்கியமான தடயங்கள் கிடைத்துள்ளன. இவ் வாய்வுக்கு எல்லா வசதிகளையும் செய்து உதவிய ஆவணக் காப்பகத்தின் ஆணையர் திரு. எம்.பரமசிவம் ஐ.ஏ.எஸ். அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**காசின் காலம்**

இக்காசின் பின்புறத்தில் பொறிக்கப்பட்டுள்ள ஐந்து முனை நட்சத்திரச் சின்னத்திலிருந்து, ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினி அரசு சென்னையிலிருந்து 19-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் வெளி யிட்ட "நட்சத்திரப் பகோடா" அல்லது "வராகன் என்று அழைக்கப்பட்ட பல தங்க நாணயங்களில் இதுவும் ஒன்று என்று தெரிகிறது. மேலும் இக்காசு இயந்திரத்தின் மூலம் மிகவும் நேர்த்தியாக அச்சடிக்கப் பட்டுள்ளது. கும்பினி அரசு சென்னை ஜார்ஜ் கோட்டையில் முதன் முதலாக 1807-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இயந்திர நாணய சாலையை நிறுவித் தங்கம், வெள்ளி மற்றும் செப்புக் காசுகளை வெளியிடத் தொடங்கியது. 1817-ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் தங்க வராகன்கள் அச்சடிப்பது நிறுத்தப்பட்டு விட்டது. ஆகையால் இக்காசு 1807-ஆம் ஆண்டு முதல் 1817-ஆம் ஆண்டு வரையிலான பத்தாண்டு காலத்துக்குள் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். மேலும், 1616-ஆம் ஆண்டு ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினியார் கல்கத்தாவில் வணிக மையம் நிறுவி 200 ஆண்டுகள் ஆனதைக் கொண்டாட 1816-ஆம் ஆண்டு சில சிறப்பு நாணயங்களை வெளியிட்டார்கள். அவற்றுள் இதுவும் ஒன்றாக இருக்கலாம்.

**எல்லிஸ் துரையும் திருக்குறளும்**

அக்கால கட்டத்தில் ப்ரான்சிஸ் வைட் எல்லிஸ் என்னும் ஆங்கிலேய அதிகாரி சென்னை மாவட்டக் கலெக்டராகப் பணியாற்றி வந்தார். 1796-ஆம் ஆண்டு ஆட்சிப் பணியில் சேர்ந்த அவர் சில ஆண்டுகளி லேயே தமிழ் முதலிய தென்னிந்திய மொழிகளிலும் வட மொழியிலும் பெரும் புலமை பெற்றுவிட்டார். தமிழ் நூல்கள் அச்சேறியிராத அக்காலத்திலேயே அவர் ஏட்டுச் சுவடிகளிலிருந்து முறையாகத் தமிழைக் கற்றுத் தேர்ந்தார். தமிழ் முதலிய திராவிட மொழிகள், சம்ஸ்கிருதம் போன்ற இந்தோ-ஆரிய மொழிகளிலிருந்து வேறுபட்டவை என்ற உண்மையை முதன்முதலாக உலகுக்கு அறிவித்த பெருமை இவரையே சாரும்.

எல்லிஸ் துரைக்குத் திருவள்ளுவர் மீதும் திருக்குறள் மீதும் அளப்பரிய பற்று இருந்தது. திருக்குறளிலிருந்து பல குறள்களைத் தேர்ந்தெடுத்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தெளிவான உரை யுடன் ஓர் அரிய நூலை இவர் எழுதினார். இதுவே திருக்குறளின் முதல் ஆங்கில மொழி பெயர்ப்பாகும். துரதிருஷ்டவசமாக அந்நூல் முற்றுப் பெறும் முன்னரே எல்லிஸ் துரை இராமநாதபுரத்தின் அருகே முகாமிட்டு இருந்த போது தற்செயலாக விஷ உணவை அருந்தி அகால மரணமடைந்தார். அவர் இறந்த பின் வெளிவந்த அந்த நூலை மீண்டும் சிறந்த முறையில் ரா.பி. சேதுப்பிள்ளை பதிப்பித்துள்ளார். இந்நூலில் எல்லிஸ் துரை முந்நூறுக்கும் மேற்பட்ட பழந்தமிழ் நூல்களிலிருந்து காட்டியுள்ள மேற்கோள் களிலிருந்து அவருடைய ஆழ்ந்த புலமை வெளிப் படுகிறது. இன்று காணாமற் போய்விட்ட வளையாபதி போன்ற சங்க நூல்களிலிருந்தும் இவர் மேற்கோள் களைக் கையாண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### கல்வெட்டில் திருக்குறள்

எல்லிஸ் துரை திருவள்ளுவர் மீதும் திருக்குறளின் மீதும் கொண்டிருந்த பற்றுக்கு எடுத்துக்காட்டாக இரு அரிய கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. சென்னை நகரில் 1818-இல் கடும் குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டது. அப்போது சென்னைக் கலெக்டராகப் பணியாற்றிய எல்லிஸ் துரை பெரு முயற்சி செய்து நகரில் 27 இடங்களில் குடிநீர்க் கிணறுகளைத் தோண்ட ஏற்பாடுகள் செய்தார். அக்கிணறுகளில் ஒன்று இராயப் பேட்டை பெரியபாளையத்தம்மன் கோயிலில் இன்றும் உள்ளது. இக்கிணற்றின் கைப்பிடிச் சுவரில் பதிக்கப்பட்டிருந்த ஒரு கல்லில் எல்லிஸ் துரை 1818-ஆம் ஆண்டில் ஒரு நீண்ட கல்வெட்டை வெட்டி வைத்தார் (இக் கல்வெட்டு இப்பொழுது தமிழ்நாடு தொல்லியல் துறையின் மதுரை அருங்காட்சி யகத்தில் உள்ளது). அதில்,

> ... சயங்கொண்ட தொண்டிய சாணுறு நாடெனும்
> ஆழியிலிழைத்த வழகுறு மாமணி
> குணகடல் முதலாக குடகட லளவு
> நெடுநிலந் தாழ நிமிர்ந்திடு சென்னப்
> பட்டணத் தெல்லீச னென்பவன் யானே
> பண்டார காரிய பாரஞ் சுமக்கையிற்
> புலவர்கள் பெருமான் மயிலையம் பதியான்
> தெய்வப் புலமை திருவள் ளுவனார்
> திருக்குற டன்னிற் றிருவுளம் பற்றிய
> "இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
> வல்லரணு நாட்டிற் குறுப்பு"
> என்பதின் பொருளை யென்னுளாய்ந்து...

என்ற வரிகளில் ஓர் அழகிய குறளை மேற்கோளாகக் கையாண்டிருக்கிறார் (குறள் 737). மேலும் எல்லிஸ் துரை அக்காலத்தில் சென்னப்பட்டணத்துப் பண்டார காரிய பாரம் சுமந்திருந்ததையும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. அக்காலத்தில் நாணய சாலை (treasury) பண்டாரத்தின் மேற்பார்வையில் செயல்பட்டு வந்தது என்பதையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

மற்றொரு கல்வெட்டு திண்டுக்கல் நகரில் உள்ள எல்லிஸ் துரையின் கல்லறையின் மீது பொறிக்கப் பட்டுள்ளது. இதில் 'எல்லீசன் என்னும் இயற் பெயருடையோன்'

> ...திருவள்ளுவப்பெயர்த் தெய்வஞ் செப்பி
> யருள்குற ணூலு ளறப்பா லினுக்குத்
> தங்கு பலநூததாரண கடலைப்பெய்
> திங்கி லீசுதனி லிணங்கமொழி பெயர்த்தோன்...


என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகளிலிருந்து எல்லிஸ் துரையின் ஆழ்ந்த தமிழ்ப் புலமையும் அவருக்குத் திருவள்ளுவர் மீதும், திருக்குறள் மீதும் இருந்த மிகுந்த ஈடுபாடும் தெளிவாகத் தெரிகின்றது.

எனவே எல்லிஸ் துரை 1810-19 ஆம் ஆண்டு களில் சென்னைக் கலெக்டராகப் பணியாற்றி வந்த போது பண்டார காரியத்தையும் செய்து வந்தார் என்றும், அதே சமயத்தில் திருக்குறளை முற்றிலும் ஓதி உணர்ந்து அதன் அருமை பெருமைகளை அறிந்து அதற்கு ஆங்கிலத்தில் ஓர் உரை எழுதினார் என்றும் மேற்குறிப்பிட்ட கல்வெட்டுச் சான்றுகள் மூலம் தெரிய வருகின்றது. எல்லிஸ் துரை தமது அரசுப் பணியில் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தாம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த திருக்குறளை இயற்றிய திருவள்ளுவப் பெருமானின் திருவுருவத்தைக் கும்பினி அரசின் பெரிய தங்க நாணயமான இரட்டை வராகனில் பதிப்பிக்க ஏற்பாடுகள் செய்தார் என்று நம்ப இடமிருக்கிறது.

சென்னையில் உள்ள ஆவணக் காப்பகத்தில் நான் ஆய்வு செய்த போது, சென்னை நாணய சாலையில் அச்சடிக்கப்பட்ட தங்க நாணயங்களின் மாதிரிகள் பெட்டிகளில் வைக்கப்பட்டு, சென்னை அரசு மூலமாகக் கல்கத்தாவிலிருந்த மத்திய அரசுக்கும் லண்டனில் செயல்பட்ட கும்பினி டைரக்டர்களின் ஆணையத்திற்கும் அனுப்பப்பட்ட குறிப்புகள் கிடைத்தன. ஆயினும் அக்கடிதங்களுடன் இணைக்கப் பட்டிருந்த பட்டியல்களின் நகல்களோ, காசுகளின் வரைபடங்களோ கிடைக்காததால் இவ்வாண்டு களில் அச்சிட்ட இரட்டை வராகன்களில் இதுவும் ஒன்றா என்று கண்டுபிடிக்க முடியவில்லை. என்றாலும் இக்காசுகள் லண்டனிலும் கல்கத்தா விலும் உள்ள அருங்காட்சியகங்களில் மட்டுமே



திருவள்ளுவர் சிலை
மயிலாப்பூர், சென்னை



திருவள்ளுவர் ஓவியம்
(தமிழ்நாடு அரசு வெளியீடு)

கிடைப்பதால் அவை மேற்கூறியவாறே அந்த இடங்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்க வேண்டும் என்பது தெளிவு.

அச்சிடப்பட்டும் இந்தத் தங்க நாணயம் புழக்கத்திற்காக ஏன் வெளியிடப்படவில்லை என்ற கேள்விக்கு இப்பொழுது விடை காண்பது கடினமே. ஒருக்கால் இக்காசின் மாதிரிகள் கல்கத்தாவில் இருந்த மத்திய அரசுக்கும், லண்டனில் இருந்த கும்பினி ஆணையத்துக்கும் போய்ச் சேரும் முன்னர், இனிமேல் வராகன்களை அச்சடிப்பது இல்லை என்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கலாம்; அல்லது திருவள்ளுவப் பெருமானின் அருமை பெருமைகளை உணராது, மத்திய அரசும் கும்பினி நிர்வாகமும் இக்காசை வெளியிடும் திட்டத்தை நிராகரித்திருக்கலாம். மேலும் ஆவணங்கள் கிடைத்தால்தான் இப்பிரச்சினைக்குத் தெளிவான விடை கிடைக்கக் கூடும்.

அக்காலத்திய நாணய சாலை ஆவணங்கள் இப்பொழுதும் மிகவும் சிதிலமாகவும் இன்னும் சீர்படுத்தப்படாமலும் இருப்பதால் அவற்றை முற்றிலும் ஆய்வு செய்ய இயலவில்லை. எனினும் கிடைத்துள்ள எல்லாச் சான்றுகளையும் தொகுத்து ஒருங்கே நோக்கினால் திருக்குறளுக்கு உரை கண்ட எல்லிஸ் துரையின் செல்வாக்கால் திருவள்ளுவப் பெருமானின் திருவுருவம் இத்தங்க நாணயத்தில் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. சென்னை ஆவணக் காப்பகத்தில் மேலும் தேடினால் இம்முடிவுகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

இக்காசில் காணப்படும் திருவுருவத்தையும் சென்னை மயிலையில் உள்ள திருவள்ளுவர் கோயிலில் அண்மையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட திருவள்ளுவர் சிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். சுமார் 14-15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படும் இக் கற்சிலையைப் பற்றித் தமிழ்நாடு தொல்லியல் துறை ஆய்வாளர் ச. கிருஷ்ணமூர்த்தி பின்வருமாறு கூறுகின்றார்:

“இச்சிலையின் உருவம் பீடத்தின் இரு கால்களையும் மடக்கி அமர்ந்த நிலையில் காணப் படுகிறது. தியான நிலையில் வலக்கை சின்முத்திரையுடன் அக்கமாலை ஏந்தியும், இடக்கை ஓலைச்சுவடி ஏந்தியும், இச்சிலை காணப்படுகிறது. இவ்வுருவத்தின் தலையை முடிந்த கொண்டையும், முகத்தில் நீண்ட தாடியும் உடலில் ஓடும், பட்டையான அங்கியும், இடையில் ஆடையும் அணி செய்கின்றன.”

இன்று தமிழக அரசின் மூலம் பிரபலமாகி இருக்கும் திருவள்ளுவரின் திருவுருவப் படமும் ஏறத்தாழ இக்கற்சிலையின் அமைப்பை ஒத்துள்ளது எனலாம்.

இக்காசில் காணப்படும் திருவுருவத்திற்கும் மற்ற இரு உருவங்களுக்கும் இடையில் பல ஒற்றுமைகள் கண்கூடாகத் தெரிகின்றன. ஆயினும் ஒரு முக்கிய வேறுபாடும் பளிச்சென்று தெரிகிறது. காசில் உள்ள முனிவரின் திருவுருவத்தில் தலை மழித்தும், முகத்தில் தாடி மீசை இன்றியும் இருப்பது குறிப்பிடத்தக்க வேறுபாடாகும்.

### திருவள்ளுவர் சமணரா?

இக்காசில் முனிவரின் தலை மீதுள்ள குடையையும், மழித்த தலையையும், முகத்தையும் காணும் போது இவரை உருவகப்படுத்தியவர்கள் இவர் ஒரு சமண முனிவர் என்று கருதியுள்ளார்கள் எனத் தெளிவாகத் தெரிகிறது. திருக்குறளில் ‘ஆதி பகவன்’, ‘மலர்மிசை ஏகினான்’, ‘அறவாழி அந்தணன்’ போன்று வரும் சொல் தொடர்கள் வள்ளுவப் பெருமான் சமண சமயத்தினர் என்று கொள்ளுவதற்கு வலுவான சான்றுகள் ஆகும்.

### வேண்டுகோள்

வள்ளுவப் பெருந்தகையின் திருவுருவத்தைத் தாங்கி நிற்கும் பொற்காசு ஓர் அரிய கலைப் பொக்கிஷம் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. திருவள்ளுவப் பெருமானின் திருவுருவம் பொறிக்கப்பட்டிருக்கும் நான்கு தங்க நாணயங்களில் இரண்டு லண்டன் பிரிட்டிஷ் மியூசியத்தில் நமக்கு எட்டாக்கையில் உள்ளன. நம் நாட்டிலேயே கல்கத்தாவில் இந்திய அருங்காட்சியகத்தில் உள்ள மற்ற இரு காசுகளில் ஒன்றையாவது நிரந்தரக் கடனாகப் பெற்று அக்காசை திருவள்ளுவப் பெருமான் வாழ்ந்த சென்னையிலுள்ள அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கத் தமிழக அரசு ஆவன செய்ய வேண்டுமெனக் கோருகின்றேன்.

### துணை நூல்கள்

Mukherjee B.N. The Indian Gold: An Introduction to the Cabinet of Gold Coins in the Indian Museum, Calcutta, 1990. p. 85, No. 195, Pl. IXA & B: No. 195 Pl. X, n.

Sethupillai, R.P. (ed.) Tirukkural: Elli's Commentary, University of Madras, 1955.

Vincent A. Smith, Catalogue of Coins in the Indian Museum, Calcutta, Vol. Oxford, 1906, p. 319, Nos.: I. M.2 & 3.

*கிருஷ்ணமூர்த்தி, ச. திருக்குறள் பழைய உரை, 1993 (ஆராய்ச்சி முன்னுரை), தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை.*

*நன்றி : தமிழியல் / ஜூன், 2008*

## நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடுகள்





**போர்த்தொழில் பழகு**

**வெ. இறையன்பு**

விலை : ₹ 250/-

வரலாறு கண்ட போர்களிலிருந்தும், அவற்றில் கடைபிடிக்கப்பட்ட உத்திகளிலிருந்தும் இன்றைய வாழ்க்கையை நாம் கற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தவேண்டியவை எவை என்பதைப் பகிர்ந்துகொள்கின்றன இந்நூற் கட்டுரைகள்.




**பத்தாயிரம் மைல் பயணம்**

**வெ. இறையன்பு**

விலை : ₹ 265/-

பயணங்களால் தேசங்கள் இணையும், தடுப்புச் சுவர்கள் உடையும், அன்பு பெருகும், பண்பாடு பரிமாறப்படும், விஞ்ஞானம் செழிக்கும், வாழ்க்கைத்தரம் உயரும் என்பதை விவரிக்கும் இந்நூல், பயணங்களால் மனித நாகரிகம் மேம்பட்ட வரலாற்றைப் பேசுகிறது.

கட்டுரை

# தமிழ்ப் பண்பாட்டுப் பின்புலத்தில் தோழர் ஜீவாவின் அரசியல்

ந. முத்துமோகன்

### தோழர் ஜீவாவின் வாழ்க்கைப் பயணம்

தமிழ் நாட்டு இடதுசாரி இயக்கத்தின் சுமார் ஒரு நூறு ஆண்டுக் கால வரலாற்றில் தோழர் ஜீவா (1907-1963) வகிக்கும் இடம் தனித்துவம் மிக்கது. குறிப்பிட்ட அக்காலத்திய தமிழ் அரசியலின் உயிரோட்டமான போக்குகளை அடையாளப்படுத்துவதற்கு ஜீவாவின் அரசியல் ஒரு திசைகாட்டியாக அமைய முடியும். ஜீவாவை மையமாகக் கொண்டு 20 ஆம் நூற்றாண்டின் தமிழ் அரசியல் போக்குகளை புதிய அர்த்தங்களோடு அடையாளப்படுத்த முடியும். காலனிய ஆட்சி, நாட்டு விடுதலைக்கான போராட்டங்கள், சுயமரியாதை மற்றும் திராவிட இயக்கங்களின் தோற்றம், திராவிட இயக்கத்தின் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்கள் (நீதிக்கட்சி, பெரியார், பின்னர் அண்ணா, கலைஞர் ஆகியோரின் முன்னேற்றக் கழக அரசியல்), திமுக தலைவர்களின் மொழி வழி தேசியம், இலக்கியவழி தேசியம், அயோத்திதாசர் முதலாகத் தமிழில் சாதி அமைப்பு குறித்த விமர்சனம், தலித் எழுச்சிகள் போன்ற பல வகையான அரசியல் பண்பாட்டுப் போக்குகளைத் தமிழ் மண்ணில் காணமுடிகிறது. மிகச் செழுமையான அரசியல், கருத்தியல் சந்திப்புகளைத் தமிழகம் குறிப்பிட்ட இக்காலத்தில் உற்பத்தி செய்துள்ளது. தோழர் ஜீவா மேற்குறித்த எல்லா இயக்கங்களின் ஊடாகவும் பயணித்து வந்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

தோழர் ஜீவா இளமையில் காந்திய இயக்கத்தால் ஈர்க்கப்பட்டுள்ளார். சிராவயலில் தாழ்த்தப்பட்ட குழந்தைகளுக்காகப் பள்ளி ஒன்றை நடத்தியுள்ளார். 1930 களில் பெரியாரின் பகுத்தறிவு, நாத்திகம், சாதி எதிர்ப்பு ஆகிய நிலைப்பாடுகளால் கவரப்பட்டு உள்ளார். காந்தியம், பெரியாரியம் ஆகியவற்றின் செல்வாக்கால் பெண் விடுதலை சார்ந்த தனது கருத்துக்களை ஜீவா கவிதைகளாகவும், புதுமைப் பெண்ணுக்கு எழுதிய கடிதங்களாகவும் வெளிப்படுத்தியுள்ளார். இதனிடையே ரஷ்யப் புரட்சி மற்றும் சோசலிசக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு சிங்காரவேலர் மற்றும் பெரியார் ஈவேரா ஆகியோருடன் இணைந்து சுயமரியாதைச் சமதர்மம் என்ற ஓர் அரசியல் கட்சியை உருவாக்க முயன்றுள்ளார். அந்த முயற்சியில் பின்னடைவு ஏற்பட்டபோது, காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியிலும் பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியிலும் இணைந்து வேலை செய்தார். தொழிற்சங்கத் தலைவராகவும் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளராகவும் ஜனசக்தி பத்திரிகையின் ஆசிரியராகவும் நீண்ட காலம் பணியாற்றியுள்ளார். தமிழ்ச் சூழல்களில் கட்சியின் கோட்பாட்டு நிலைப்பாடுகள், வேலைத்திட்டங்கள் ஆகியவற்றை உருவாக்குவதில் முதன்மையிடத்தை வகித்துள்ளார். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களின் மொழி வழி மற்றும் இலக்கிய வழி அரசியலுடன் மிகப் பெரும் உரையாடலை நடத்தியவர் என்று தோழர் ஜீவாவைச் சொல்ல வேண்டும். மொழிவழி மாநிலம் உருவாவதற்கான போராட்டங்கள், தேவிகுளம், பீர்மேடு பகுதிகளைத் தமிழகத்துடன் இணைப்பதற்கான போராட்டங்கள், தமிழ் ஆட்சி மொழி, பயிற்று மொழி, நீதிமன்ற மொழி, இவற்றோடு மாநில சுயாட்சி ஆகியவற்றுக்கான இயக்கங்களிலும் தோழர் ஜீவா முன்னின்றார். 1963இல் அவரது அகால மரணத்திற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக தமிழ்நாட்டுக்கெனவே தனித்த வடிவில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் என்ற அமைப்பினை உருவாக்கியுள்ளார். தோழர் ஜீவாவின் காலத்தில், தமிழ் மண்ணில் பொது உடமை இயக்கம், அதன் கோட்பாட்டு நிலைப்பாடுகள் முழுமையை நோக்கிய வடிவத்தை எட்டின எனக் கூறலாம். தீவிர செயல்பாட்டுப் பண்பு கொண்ட தமிழ்ப் பண்பாட்டுச் சூழல்களுடன் தோழர் ஜீவா “ஒன்றாகி, வேறாகி, உடனாகி” நின்று ஒரு மிகப்பெரும் பயணத்தை மேற்கொண்டுள்ளார் என்பதைக் காணுகிறோம். அத்தகைய ஒரு பயணத்தில் ஒரு செழுமையான மார்க்சியக் கோட்பாட்டிற்கான அடித்தளங்களையும் ஜீவா உருவாக்கியுள்ளார்.

### தமிழின் தனித்த பண்புகளும் இடதுசாரி இயக்கமும்

இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கம் தோன்றி வளர்ந்த வங்காளம், பஞ்சாப், தமிழகம் ஆகிய மூன்று வட்டாரங்களை ஓர் ஒப்பீட்டுக்காக எடுத்துக் கொள்வோமெனில், அவற்றுக்கிடையில் தமிழகம் சில குறிப்பிடத்தக்க தனித்த பண்புகளைக் கொண்டு உள்ளது என்று கூறலாம். வங்காளம் ஆழமான நகர்ப்புறப் பண்புகளையும் நவீனமயமாக்கத்தின் விளைவுகளையும் கொண்டது. மறுபுறம், வைதீக மரபுகளை மையப்படுத்தி இந்தியப் பண்பாட்டைச் சித்திரித்துக் காட்டிய பழமைச் சக்திகளின் ஆதிக்கத் திற்கும் அது இருப்பிடமாக அமைந்திருந்தது. பஞ்சாப் விவசாயப் பண்பு கொண்ட அரசியலுக்குப் பெயர் பெற்றது. பஞ்சாபிலும் சமயச் சார்பு கொண்ட இயக்கங்கள் வலுவாகத் தொழில்பட்டன. பகத்சிங் போன்றோரை முன்னிறுத்திய தீவிரவாத இயக்கங் களும் அங்கு உண்டு. இந்தியாவின் பல்வேறு பகுதி களில் பல்வேறு பண்புகளை முன்னிலைப்படுத்தி அரசியல் இயக்கங்கள் உருவாகின. தமிழகத்தைப் பொறுத்தமட்டில், மிகப்பழங்காலம் தொட்டே மொழி சார்ந்த ஒரு பண்பாட்டுக்குச் சொந்தமான பிரதேசமாக இது இருந்து வந்திருக்கிறது. திராவிட மரபுகள் சார்ந்த ஒருவகை அணுகுமுறை தென்னகத்தில் துலக்கமாக வெளிப்படுகிறது. அது மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றில் தனது வேர்களைத் தேடும் (Embeddedness) அரசியலாகவே அமைந்திருக்கிறது என்பதைக் காணமுடிகிறது. பண்பாட்டில் பொதிந்த அரசியல் என்றும் இதனைக் கூறலாம். இத்தகைய சூழல்களின் அழுத்தத்தைத் தன்னில் அனுபவித்தவர் தோழர் ஜீவா என்று இந்த இடத்தில் கூறிச் செல்லுவோம். இது குறித்து விரிவான ஓர் ஒப்பீட்டு ஆய்வை மேற்கொள்ளுவது கூட பயனுள்ளதாக இருக்கும்.

### தமிழின் பண்பாட்டு அரசியல்

தமிழகத்தின் பண்பாடு சார்ந்த அரசியல் என்பதனை வரலாற்றுரீதியாகவும் அணுக வேண்டி யுள்ளது. தமிழின் பண்பாட்டு அரசியல் மிகப் பழங்காலம் தொட்டே நன்கு பதிவாகியுள்ளது. அது ஒரு மறுக்கமுடியாத தொடர்ச்சியுடனும் பதிவாகி யுள்ளது. தமிழ் மண் முழுவதிலும் பரவிக்கிடந்த பல நூற்றுக்கணக்கான பழம் பாடல்கள் சங்கப் பாடல்கள் எனத் தொகுக்கப்பட்ட காலம் தொட்டே தமிழின் பண்பாட்டு அரசியல் தொடங்கி விட்டது எனலாம். பல புலவர்களின் பாடல்களைத் திணை வகுத்து தொகுப்பதில் ஓர் அரசியல் உண்டு என்பதை நினைவுறுத்துவோம். தொல்காப்பிய நூல் பழம்



தமிழ்ப் பாடல்களைத் திணை, பால், குடிகள், அவற்றின் வினை, பண்புகள் சார்ந்து பகுத்தும் தொகுத்தும் எடுத்துக்காட்டியும் இலக்கணம் வகுத்த காலங்களில் பண்பாட்டு அரசியல் உறுதியாக நிலை கொண்டது எனலாம். சமண பௌத்த முனிவர்கள் தமிழ் மொழியையும் இலக்கியங்களையும் வகைப் படுத்தி இலக்கணம் வகுப்பதில் பங்கேற்றனர் என்ற செய்தி தமிழின் பண்பாடு சார்ந்த அரசியலின் பின் புலத்தை எடுத்துக்காட்டுகிறது. இலக்கணம் என்பதே அதன் சொந்த வரையறையின் படி (By Definition) மொழியையும் இலக்கியத்தையும், சில வேளைகளில் வாழ்வையும் ஒழுங்குபடுத்துவது (Disciplining), ஒரு கட்டமைப்புக்குள் (கட்டுப்பாட்டுக்குள்) கொண்டு வருவது என்று எடுத்துக்கொண்டால், அது எவ்வாறு பண்பாட்டு அரசியலில் பங்கேற்றது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். சமண, பௌத்தப் பின்புலத்தி லிருந்து தமிழின் காப்பியங்கள் இயற்றப்பட்டன என்ற செய்தியும் அவை தமிழ் மரபுகளில் வேர் கொண்ட வடிவத்தையே ஏற்றன என்ற நிகழ்வையும் காணமுடிகிறது. தொடர்ந்து வந்த அற இலக்கியங்களும் பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் அசைவுகளை சில அரசியல் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு

பதிவு செய்துள்ளன என்பதையும் காணுகிறோம். இவ்வாறாக, தமிழ் மண்ணின் மொழியும் இலக்கியங்களும் இலக்கணமும் காப்பியங்களும் அறமும் பண்பாடும் சார்ந்த அரசியலை மிக நுட்பமாக வளர்த்தெடுத்துள்ளன என்பதைக் காணுகிறோம். தமிழின் பண்பாட்டு அரசியலுக்கு அவை முதல் எடுத்துக்காட்டாக, மிக விரிவான முதற் களமாக அமைந்துள்ளன என்பதையும் உணர முடிகிறது.

அடுத்துவந்த நூற்றாண்டுகளில், சைவமும் வைணவமும் பக்தி இயக்கங்களின் வழியாக தமிழில் வேர்கொண்டபோது சங்கம், சங்கம் மருவிய காலங்களின் பண்பாட்டு வேலைத்திட்டத்தையே மறு பதிப்பு செய்தன என்பதையும் காணமுடிகிறது. மொழி, இலக்கியம், இலக்கணம், காப்பியம், அறம் ஆகிய பண்பாட்டுப் பரப்புகளைக் கையகப் படுத்துவது என்ற வேலைத்திட்டமே மீட்டுக் கொணரப்பட்டது என்பதைக் காணமுடிகிறது. 19-20 ஆம் நூற்றாண்டுகளிலும் கூட பண்டைத் தமிழகத்தின் மொழி இலக்கிய இலக்கண அரசியலே புதிய சூழல்களில் மீண்டு வந்தது என்று கூற முடிகிறது. மொழி, இலக்கியம், இலக்கணம், அறம், பக்தி எனும் பண்பாட்டு வடிவங்கள் ஒவ்வொன்றுமே இங்கு அரசியலில் ஈடுபட்டு வந்திருக்கின்றன என்பதைக் காணுகின்றோம். தோழர் ஜீவாவின் அரசியல் கருத்துருவாக்கம் மேலே குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலின் அழுத்தத்தைத் தன்னில் கொண்டுள்ளது என்று கருத முடிகிறது.

### சர்வதேச அளவிலான சில சூழல்கள்

1950, 60 களில் ஜீவா தனது அரசியல் நிலைப் பாடுகளை உருவாக்கிக் கொண்டபோது நிலவிய சர்வதேசச் சூழல்களையும் இங்குக் குறிப்பிட வேண்டும். குறிப்பிட்ட இக்காலம் ஆசிய ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளில் தேசிய விடுதலை இயக்கங்கள் காலனிய ஆட்சிகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்காக உச்சக்கட்ட போராட்டங்களில் ஈடுபட்ட காலம் ஆகும். அந்த நாடுகளின் முற்போக்கு சக்திகள் தமது நாடுகளின் சமூகச் சூழல்களில் மார்க்சியம் என்ற கோட்பாட்டைப் பொருத்திப் பார்த்துக் கொண்ட காலமாகவும் அது அமைந்திருந்தது. 1948இல் சீனப் புரட்சி நடந்தேறியது. ஓர் ஆசிய நாட்டில், விவசாயிகளை அறுதிப் பெரும் பான்மையாகக் கொண்ட நாட்டில் சோசலிசப் புரட்சி வெற்றி பெற்றது என்பது கிழக்கு நாடுகளுக்குக் கணிசமான ஒரு செய்தியாகும். சீனப் புரட்சி சீன நாட்டின் பிரத்தியேகச் சூழல்களுக்கு ஏற்ற ஒரு சோசலிசத்தைக் கட்டமைக்க முன்வந்தது என்பதும் குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வாகும். உலகின் பல நாடுகளில் அந்தந்த நாடுகளின் பண்புகளுக்கு உகந்த சோசலிசத்தைக் கண்டறிய வேண்டும் என்ற அவா அக் காலத்தில் பெருகி வந்தது என்பதையும் குறிப்பிட வேண்டும். பிரான்ஸ் பனோன் என்ற கறுப்பினச் சிந்தனையாளர் ஆப்பிரிக்க கறுப்பின மக்களின் விடுதலையை முன்னிறுத்தும் சோசலிசம் எமது மக்களுக்கு வேண்டும் என்ற குரலை ஒலித்தார். சேகுவேரா, ஃபிடல் காஸ்ட்ரோ போன்ற புரட்சி யாளர்கள் லத்தீன் அமெரிக்க நிலமைகளுக்கு ஏற்ற புரட்சியின் வடிவத்தைத் தேடினர். அந்தந்த நாடுகளின் சொந்தப் பிரச்சினைகளிலிருந்தும் அந்தந்த நாடு களுக்கே சொந்தமான போராட்ட மரபுகளிலிருந்தும் அந்தந்த நாடுகளின் விடுதலை ஏக்கங்கள் மற்றும் கனவுகளிலிருந்தும், அந்நாடுகளுக்குரிய சோசலிச மாதிரிகளையும், புரட்சியின் வடிவங்களையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்ற கருத் தோட்டம் வலுப்பட்டு வந்த காலம் அது. சர்வதேசச் சூழல்களை ஒத்த நிலையிலோ, அல்லது வேறு வகையான கட்சி மற்றும் உள்ளூர்ச் சூழல்களால் உந்தப்பட்டோ தோழர் ஜீவா அவ்வகைப்பட்ட திசையில் பயணப்பட்டார் என்பது தமிழுக்கு வாய்த்த பெரும் பேறு எனக் கருதுகிறேன்.

### தோழர் ஜீவாவின் பண்பாட்டு அரசியல் நிலைப்பாடுகள்

தொழிலாளர் வர்க்கத்தை முதன்மையாகக் கொண்ட உழைக்கும் மக்களின் நலன்களை தோழர் ஜீவாவின் அரசியல் தன்னில் மையப்படுத்தி யிருந்தது. கோவையில் ஜீவா அவ்வகைப் பணிகளில் ஈடுபட்டிருந்த வேளைகளில்தான் "காலுக்குச் செருப்புமில்லை, கால்வயிற்றுக் கூழுமில்லை, பாழுக்கு உழைத்தோமடா..." என்ற பாடலையும் "கோடிக்கால் பூதமடா..." என்ற பாடலையும் இயற்றி அவை தமிழகமெங்கும் ஒலித்தன. தொழிலாளர் முதன்மை, வர்க்க அரசியல் ஆகியவை பொதுவான மார்க்சிய நிலைப்பாடுகள். ஆயின் மார்க்சியம் தோற்றம் பெற்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்து பல அம்சங்களில் விலகிய சமூகப் பொருளாதார அமைப்பைக் கொண்ட நாடு இந்தியா என்ற கவனம் ஜீவாவிடம் அமைந்திருந்தது என்பதைக் காண முடியும். குறிப்பாக, தமிழ்ச் சமூகத்தில் சாதி அமைப்பு, ஆணாதிக்கம் போன்ற குறிப்பான வடிவங்களின் செல்வாக்கு குறித்த கவனம் ஜீவாவிடம் வலுவாகவே உள்ளது. அதனை வரலாற்றுரீதியாகவும் அவர் அணுகுகிறார்.

பழம்தமிழ் சமூகத்தின் இலக்கியச் சான்றுகள் சாதியில்லாத, ஆணாதிக்கம் இல்லாத பழங்குடிகளின்

கூட்டு வாழ்க்கையை முன்னிலைப்படுத்துவதை ஜீவா கவனப்படுத்துகிறார். இயற்கை சார்ந்த, நிலத்தையும் பொழுதையும் முதல் பொருட்கள் என அறிவிக்கின்ற, நிலமும் பொழுதும் நீரும் உணவும் சார்ந்த தமிழரின் பழங்குடிச் சமூகத்தை தோழர் ஜீவா ஓர் அற்புதம் என வருணிக்கிறார். ஐம்பெரும் பூதங்களும் "கலந்த மயக்கமே" உலகு எனக் கூறும்போது பழந்தமிழருக்கு எவ்விதமான புராணக் கதைத்தலும் அவசியமில்லாத உலகநோக்கு அமைந்திருந்ததைக் காணமுடிகிறது. புராணிய மாந்திரீக கதைத்தல்கள் இல்லாத பழங்குடிச் சித்திரிப்புகளை வடமொழி இலக்கியங்களிலோ ஹீப்ரு, கிரேக்கம், லத்தீன் போன்ற பிற நாடுகளின் பழம் இலக்கியங்களிலோ காணமுடிவதில்லை. அது தமிழுக்குக் கிடைத்துள்ளது. அந்த அடிப்படைகளி லிருந்தே தமிழரின் பண்பாட்டு வாழ்வு தோற்றம் பெற்று எழுந்தது என்பதைத் தோழர் ஜீவா சுட்டிக்காட்டுகிறார்.

மார்க்சிய வரலாற்றுக் கோட்பாட்டில், வர்க்க சமூகங்களின் வரலாற்றை விமர்சிப்பதற்கும் மறுதலிப் பதற்கும் புராதன இனக்குழு சமூகம் ஓர் ஒப்புமை எதார்த்தமாக, முன்னோடி எதார்த்தமாக (Reference Point) அமைந்தது போல் பழந்தமிழரின் வாழ்க்கை முறையும் உலக நோக்கும் சாதி, ஆணாதிக்கம் ஆகியவை கொண்ட இடைக்காலத் தமிழ்ச் சமூகத்தை விமர்சிப்பதற்கும் மறுதலிப்பதற்கும் ஒப்புமைச் சான்றாதாரங்களாக அமைகின்றன. எல்லா மொழிகளிலும் இத்தகைய பழம்சமூகச் சான்றுகள் எளிதில் அமையக் கிடைப்பதில்லை. ஆயின் அத்தகையச் சான்றுகளைத் தமிழ் மிக ஏராளமாகக் கொண்டுள்ளது. ஜீவா அவற்றை அமோகமாகப் பயன்படுத்துகிறார்.

பழம் தமிழ் இலக்கியங்களிலிருந்து தோழர் ஜீவா ஒரு விமர்சன மரபையும் கண்டடைகிறார். "பாடறிந்து ஒழுகும்" சீரூர் மன்னர்களிலிருந்து வேந்தர்கள் எனும் முடிமன்னர்கள் தோன்றும் போது பகுத்துண்டு வாழும் புராதன வாழ்க்கை மறைந்து ஏற்றத்தாழ்வான வாழ்வியல் தோற்றம் பெறும் போது, அதனைப் பதிவு செய்யவும் விமர்சிக்கவும் தமிழ் மரபு தயங்கவில்லை என்பதைத் தோழர் ஜீவா தெளிவாக எடுத்துரைக்கிறார். இன்றைய புதுமைப் பெண் ஒத்துக்கொள்ளாத, பழமை சார்ந்த சில வரையறைகள் தொல்காப்பியத்தில் உள்ளன என்பதையும் ஜீவா சுட்டிக்காட்டுகிறார். பழந்தமிழ் மரபை ஒற்றைப்படையாக, வெறுமனே தமிழ்ப்

**"**

**பழந்தமிழ் மரபை ஒற்றைப்படையாக, வெறுமனே தமிழ்ப் பெருமிதத்தைக் காட்டுவதற்காக மட்டும் பயன்படுத்துதல் கூடாது என்ற எச்சரிப்பை ஜீவாவின் எழுத்துக்கள் கொண்டுள்ளன. காப்பியங்களிலும் அற இலக்கியங்களிலும் (குறிப்பாக திருக்குறளில்) தமிழின் விமர்சன மரபு மேலும் கூர்மையடைகிறது என்ற உண்மையையும் ஜீவா எடுத்துக்காட்டுகிறார்.**

**"**

பெருமிதத்தைக் காட்டுவதற்காக மட்டும் பயன் படுத்துதல் கூடாது என்ற எச்சரிப்பை, ஜீவாவின் எழுத்துக்கள் கொண்டுள்ளன. காப்பியங்களிலும் அற இலக்கியங்களிலும் (குறிப்பாக திருக்குறளில்) தமிழின் விமர்சன மரபு மேலும் கூர்மையடைகிறது என்ற உண்மையையும் ஜீவா எடுத்துக்காட்டுகிறார். ஒரு பழம் மரபை நாம் கொண்டுள்ளோம் என்பது மட்டுமல்ல, அதனுள் ஒரு விமர்சன மரபைக் கண்டறிந்துள்ளோம் என்பது மிகப்பெரும் சாதனை யாகும். ஜீவாவுக்கு முன்னதாக அதனை யாரும் முன்னிருத்தியதில்லை. ஆயின் ஜீவா தமிழின் விமர்சன மரபை முறையியல் ரீதியாக வளர்த்தெடுத்தார்.

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பதிவாகி யுள்ள ஏழ்மையையும் அது குறித்த துயரங்களையும் ஜீவா கவனிக்காமல் இல்லை. அத்துயரங்களிலிருந்து வெளிவரும் நோக்குடன் அம்மக்கள் உருவாக்கிய மாற்று வடிவங்களைப் பற்றியும் அவர் எழுதி யுள்ளார். கிருதயுகம், ராமனின் அயோத்தி ஆகிய வற்றை அம்மக்களுக்கு சுபிட்சமான வாழ்வை வழங்கும் கனவு தேசங்களாக, கற்பனையூர்களாக (Utopias) ஜீவா சித்திரிக்கிறார். சமீபகாலங்களில் Utopia Studies, Memory Studies போன்ற ஆய்வு வட்டாரங்கள் பெருகிவருகின்றன. நாமும் கூட அது போன்ற ஆய்வுகளில் ஈடுபடுவதற்கு அவசியங்கள் உள்ளன. பழந்தமிழகமும் இடைக்காலத் தமிழகமும் அம்மாதிரியான ஆய்வுகளுக்கு இடமளிக்கும் இலக்கியங்களை ஏராளமாகக் கொண்டுள்ளன.

*1961*இல் தமிழ்நாடு கலை இலக்கியப் பெரு மன்றத்தை நிறுவும் முயற்சியில் ஈடுபட்ட வேளையில் தோழர் ஜீவா நாட்டுப்புற இலக்கியங் களை, வழக்காறுகளைச் சேகரித்தல், அச்சுக்குக்

கொண்டு வருதல், ஆய்வு செய்தல் ஆகிய பணிகளில் ஈடுபடுமாறு கலை இலக்கியப் பெருமன்ற அன்பர்களுக்கு அழைப்பு விடுக்கின்றார். இது போன்ற வேலைகளை (பேராசிரியர் நா.வா. முதலான) "நெல்லைத் தோழர்கள்" ஏற்கெனவே செய்து வருகின்றனர் என அவர்களைப் பாராட்டவும் செய்கின்றனர். "தாமரை" பத்திரிகையில் "கிராமீயக் கலை வளர்ப்போம்" எனத் தலைப்பிட்டு தலையங்கம் எழுதுகிறார். ஜீவாவின் கலை இலக்கியக் கொள்கையில் நாட்டார் வழக்காறுகள் இடம் பெறுகின்றன என்ற விடயம் மிக முக்கியமான ஒன்றாகும். ஏனெனில் எழுதப்பட்ட இலக்கியங்களுக்கு மட்டுமே இலக்கிய அந்தஸ்து வழங்கி வந்த மேட்டுக்குடிச் சூழலிலிருந்து விலகி, அல்லது அவற்றோடு, உழைக்கும் மக்களின் இலக்கியங்களையும் வழக்காறுகளையும் நோக்கி ஜீவாவின் கவனம் திரும்பும்போது, உழைக்கும் மக்களின் உலகநோக்கு, அறவியல், அழகியல், உளவியல், ஆடல் பாடல், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், நீர் பராமரிப்பு, வீடு கட்டுதல், அணை கட்டுதல், படகு கட்டுதல், மண்ணின் சாமிகள், மருத்துவம் என ஏராளமான விடயங்கள் ஆய்வு அரங்கிற்கு வந்து சேரும் வாய்ப்பு ஏற்படுகிறது. நாட்டார் சமயம் மற்றும் இலக்கியங்களில் வலுவான விமர்சன மரபு உண்டு என்பதும் கவனத்திற்கு உரியது. எளிய மக்களின் கேலி, கிண்டல், பகடி ஆகியவற்றிலிருந்தே வெகுமக்கள் அரசியல் உருவாகிறது. நாட்டார் வழக்காற்றியல் என்பது கலை இலக்கியம் பண்பாடு குறித்த அடிப்படையான மாறுதல்களை, அறிவுப் புரட்சிகளை ஏற்படுத்தும் ஆற்றல் கொண்ட வட்டாரமாகும்.

தமிழ்ச் சமூகத்தின் ஒவ்வொரு நுட்பமான அசைவையும் ஜீவா பதிவு செய்கிறார். அந்த அசைவுகள் தமிழ்ச் சமூகத்தின் ஓய்வில்லாத (Dynamics) இயக்கத்தைக் குறித்து நிற்கின்றன. ஒவ்வொரு நெருக்கடியின் போதும் தமிழ்ச் சமூகம் அதன் வரலாற்றில் அவற்றை எவ்வாறு எதிர்கொண்டது? தன்னை எவ்வாறு தற்காத்துக் கொண்டது? அல்லது தன்னை எவ்வாறு புனரமைத்துக் கொண்டது? என்ற பரிமாணங்களை ஆய்வு செய்ய தோழர் ஜீவா தூண்டுகிறார். மரபும் புதுமையும் என்பது தோழர் ஜீவாவின் தத்துவார்த்தரீதியான சேர்க்கை, இணைவாக்கம். தமிழ்ச் சமூகம் மரபுகளில் முழுகி உறைந்து போய் விடவில்லை என்பதை ஜீவா மிக அற்புதமாக எடுத்துக் காட்டுகிறார். அது என்றென்றும் பழமையிலிருந்து புதுமையாக்கத்தை நோக்கி நகரவேண்டும், நகருகிறது என்பதைத் தோழர் ஜீவா வலியுறுத்துகிறார். தோழர் ஜீவா அவர்களுக்குப் பாரதியார் நவீன யுகத்தில் மரபுகளுக்கும் புதுமைக்கும் இடையில் பாலங்களைக் கட்டிய மிகப்பெரிய புரட்சிக் கவி. பாரதியில் மரபும் புதுமையும் சந்திப்பதை தோழர் ஜீவா மிக விரிவாக எழுதியுள்ளார்.

**ஜீவாவின் இயங்கியல்**

ஜீவா, தமிழ்ச் சூழல்களுடனும் 20 ஆம் நூற்றாண்டின் சமூகப் பண்பாட்டு இயக்கங்களுடனும் மிக உயிர்ப்பான விவாதங்களில், உரையாடல்களில் பங்கேற்றார். தமிழ்ச் சூழல்களில் உருவாகி எழுந்த ஓர் இயங்கியல் பரப்பு அது. தமிழ்நாட்டு இடதுசாரி இயக்கத்தின் மிக அற்புதமான, மிகச் செழுமையான சிந்தனைப் பரப்பு என்று அதனைச் சொல்ல வேண்டும். தமிழில் மார்க்சியம், பொது உடைமைச் சிந்தனை ஆகியவற்றின் மிக விளைச்சலான ஒரு வட்டாரம் என்று இதனைச் சொல்ல முடியும். நமது சொந்தச் (Indigenous) சூழல்களிலிருந்து உருவான மார்க்சியச் சிந்தனை, பொது உடமைச் சிந்தனை என்று அதனைச் சொல்ல வேண்டும்.

இன்று: தமிழர் சிந்தனை வெகுதூரம் நகர்ந்திருக்கிறது. வெற்றுப் பெருமிதங்களாகத் தமிழர் மரபைச் சித்திரிக்கும் ஒரு காலக்கட்டத்தை அது இன்று கடந்து விட்டது. மாறாக, தமிழ் மக்களின் நிலம், நீர், கனிம வளங்கள், சுற்றுச் சூழல், இயற்கை ஆகியவற்றைக் கார்ப்பரேட்டுகளிடமிருந்து எவ்வாறு காப்பாற்றுவது? என்ற மிகப்பெரும் நெருக்கடியை தமிழ்ச் சிந்தனை சந்தித்து வருகிறது. தமிழ்ப் பண்பாட்டின் இன்றைய கவலைகள் விவசாயிகள், கடற் தொழிலாளர்கள், ஒடுக்கப்பட்ட சாதியினர், பெண்கள் ஆகியோரின் வாழ்வை நோக்கியனவாக உருவாகி வருகின்றன. இது அடித்தள மக்கள் நோக்கிய நகர்வு. தமிழரின் போர்க்குணம் அதிகரித்து வருகிறது. இப்புதிய நகர்வுகளை அரசியல் படுத்துவதற்கு தோழர் ஜீவா குறித்து நாம் மீண்டும் பேசுவது அவசியமாகிறது.

*(இவ்வுரையின் முன்வரைவு 27. 11. 2018 அன்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் இலக்கியத் துறையில் தோழர் ஜீவா நூற்றாண்டு நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவாக வழங்கப்பட்டது.)*

●

கட்டுரை

# காலனி ஆட்சியில் மகப்பேறு மருத்துவமும் - சமூகச் சூழலும்

டாக்டர் சு. நரேந்திரன்

இந்து சமூகத்தின் பெண்களின் பிறப்பிலிருந்து இறப்பு வரை 19ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் துன்பமான, வருத்தத்துடன் கூடிய நீண்ட நெடிய கதை. பெண்கள் பூப்பெய்வதற்கு முன்னரே இளம் வயதில் மிக அரிதான சமயங்களைத் தவிர 5-10 வயதுக்குள்ளேயே பெரும்பாலும் திருமணம் நடைபெற்றது.

பெண்களுக்குக் கல்வி அளிக்கப்படவில்லை. ஏனெனில், படித்தால் விதவையாகி விடுவார்கள் என்ற அக்காலத்திய ஒரு குருட்டு மூட நம்பிக்கையே ஆகும்.

19ஆம் நூற்றாண்டின் முதல் அரைப்பாதியில் சில செல்வந்தர்களின் குடும்பத்தினர் தங்கள் எஸ்டேட்டுகளைப் பராமரிக்க, தங்கள் பெண்களை அனுமதித்தனர். இது தவிர, கிறித்தவ மிஷனரிகள் பெண் கல்வி முன்னேற்றத்திற்குப் பாடுபட்டனர். இந்நிலையில், கல்வி கற்ற குடும்பத்தினர் பெண்களுக்கு ஆதரவு அளித்தாலும், பழைமையை நம்புகிறவர்கள் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்தனர். 19ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலம் வரை மிகக் குறைந்த அளவே பெண்கள் கல்வி பயின்றனர். கிழக்கிந்தியக் கம்பெனியின் சமூக முன்னேற்றத்திற்கான செயல்பாடுகளில் பெண் கல்வியும் ஒன்றாக இருந்தாலும் அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை; எந்த நடவடிக்கைகளையும் நடைமுறைப் படுத்தவில்லை.

பெண்கள் நோய்வாய்ப்பட்டபொழுது, பெண் மருத்துவர் இல்லாதபொழுது, நோயின் அறிகுறிகளைத் தங்கள் உறவினர் அல்லது தெரிந்த ஆண் மருத்துவரிடம் எடுத்துச்சொல்லி மருத்துவம் பெறுவர். பெண் நோயாளி, ஆண் மருத்துவரைப் பார்க்க சம்மதித்தாலும் ஒரு திரைக்குப்பின் அமர்ந்து கையை மட்டும் தெரியும்படி நீட்டியபடி இருக்க, நோயாளியின் நாடி பார்க்கப்பட்டது. ஒரு கண் மருத்துவர் கண் புரையை அகற்ற பெண்ணின் உடலை முழுவதுமாகத் துணியால் மறைத்த நிலையில் கண்ணைச் சுற்றி ஓட்டையிட்டு அதன் வழியாகக் கண் புரைக்கான அறுவை புரிந்தார்.

### பர்தா முறை

இதைவிட பர்தா முறையில் மிகவும் பரிதாபமானது. கருவுற்ற பெண் பிரசவ நேரத்தில் எவ்வளவு துன்புற்றாலும் ஆண் மருத்துவரால் மருத்துவம் அளிக்க மறுக்கப்பட்டு, கருவுற்றவர் இறந்து போவது நாளும் நடைபெறும் காட்சியாக இருந்தது.

பர்தா வழக்கத்தைத் தாண்டி, மூட நம்பிக்கையும் பெரும் விளைவுகளை ஏற்படுத்தியது. சான்றாக, குழந்தை பிறக்கும் காலம் ஒரு பேய்க்கு உடைமையானது என்பதாகும். பிரசவத்திற்குப் பிறகு குழந்தை பெற்ற தாய்க்கோ அல்லது சேய்க்கோ நோய் வந்தால் அது துப்புரவு இன்மையாய் இருந்தாலும், அது பேயினால் என்று நினைத்து மருத்துவம் அளிக்கப்படமாட்டாது. இதனால் அதிக அளவு மரணம், தாய்க்கும் சேய்க்கும் ஏற்பட்டது.

மகளிர் மரணம் மூட நம்பிக்கையுடன், கருவுற்றவர் வாழும் நிலையையும், அவர் பழக்க வழக்கங்களையும் சார்ந்தும் இருந்தது. எடுத்துக்காட்டாக, உடற்பயிற்சி இன்மை, சத்துணவு இன்மை, சூரிய ஒளியின்றி வாழும் இல்லம், சுத்தமற்ற காற்று இல்லா சூழ்நிலை ஆகியவற்றினால் உடலில் இரத்தச் சோகை, வைட்டமின் குறைபாடுகளினால் அதுவும் குறிப்பாக, வைட்டமின் 'டி' குறைபாடுகளினால், எலும்பு நலிவு கருவுற்ற காலங்களில் ஏற்பட்டது. சில நேரங்களில் வலிப்பு, கை, கால்களில் வீக்கம், இரத்தக் கொதிப்புடன் சன்னி கண்டு இறக்க நேரிட்டது.

மேலும் பிரசவ நேரத்தில் அப்பெண் வீட்டின் ஒரு தூய்மையற்ற மோசமான மூலையில் யாரும் அவருக்குப் பணிவிடை செய்யாத நிலையில், தனிமையில் கிடத்தப்படுவார். யாராவது பணிவிடை செய்ய முன்வந்தாலும், அவர் தூய்மையற்றுக் காணப்படுவார். இந்நிலையில், கருவுற்றவரும் குளிக்காது, தன் உடைமைகளைக் குழந்தை பிறக்கும்வரை மாற்றாது இருப்பதென்பது வழக்கமாக இருந்தது.

கருவுற்றவர் பிரசவிக்க அரசு அல்லது நகராட்சி மருத்துவமனைகளில் எந்தவிதத் தடையும் இல்லாதபொழுதும் அங்குப் பிரசவம் பார்க்க பெண் மருத்துவ

உதவியாளர் இல்லாமையால் கருவுற்றவர்கள் செல்வது கிடையாது. மேலும் இவர்கள் பெண் தாதி, மருத்துவர்களைவிட தங்கள் வீட்டிற்கு வரும் உள்ளூர் மருத்துவச்சிகளிடம் பெரும் நம்பிக்கை வைத்திருந்தனர்.

பிரசவத்தின்போது இத் தாதிகள் பிரசவம் பார்க்கும் முறைகள் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு விதமாக இருந்தன. மேரி பிரான்சிஸ் பில்லிங்கன் என்ற இதழாசிரியர் இதைப்பற்றி 19ஆம் நூற்றாண்டு இறுதியில், "முதலாவதாக கருவுற்ற பெண்ணைச் சுவருக்கு அருகில் நிற்க வைத்து, தாதி தன் தலை யினாலோ அல்லது மடக்கிய தன் கால் முட்டி யினாலோ அடிவயிற்றில் தன் முழு பலத்துடன் அழுத்துவார்கள். இதனால் கருப்பை சுருங்கி விரிய முனையும். இத்துடன் சில மருந்துப் பட்டைகளின் கசாயத்தையும் கொடுப்பார்கள். முதிரா குழந்தை இறந்து பிறந்தாலும், மூங்கில் இலைக் கசாயத்தில் செப்புக்காசை முக்கி எடுத்தபின் குடிக்கக் கொடுப் பார்கள்," என்று எழுதுகிறார்.

இதேபோல ஆர்.ஜெ. பிளாக்மேன் தன் "Indian House Nursing (1913)" என்ற நூலில் "தன்னுடைய சாதாரண உடையை மாற்றி, ஓர் அழுக்குத் துணியைக் கட்டிக்கொண்டு, தாதி பிரசவம் பார்க்க வருவார்கள். கருவுற்றவருக்கு வலி வந்த ஆரம்ப காலத்திலேயே தாதி வந்துவிட்டால் கருவுற்ற தாய்க்கு மிக ஆபத்தாக அமையும். இதுவே சற்றுத் தாமதமாகப் பிரசவத்தின் கடைசி கட்டத்தில் வந்தால் தாய் தப்பிக்க வழி உண்டு. ஏனெனில், பிரசவத்தின் ஆரம்ப கட்டத்தில் தாதி வந்தால் கருவுற்றவரை அறைக்குள் ஓடவிட்டு, பாரமானதைத் தூக்க வைத்து, மண் தரையில் சம்மணமிட்டு உட்கார வைப்பார். இதில் பிரசவ வலி தோன்றி குழந்தை வெளிவராவிட்டால், வயிற்றின்மேல் கனமான பொருளை வைத்து புணர்வாயில் (யோனியில்) கந்தலான துணியைத் தக்கைபோல அடைப்பார்கள். இந்தச் செயல்களினால் கருப்பை சுருங்கி, பிரசவம் நிகழும். ஆனால் மேற்குறித்த செயல்களால் குழந்தை களுக்குக் காயம், தாய்க்கு இரத்த ஒழுக்கு மற்றும் புட்டம் கிழிவு ஆகியவை ஏற்படும் (State Medicine and Epidemic Disease in 19th century, 1933, p. 257).

இத்தனை இடர்பாடுகள் இருந்தும் கருவுற்ற பெண்களுக்காக அரசு, மருத்துவமனைகள் காலனி ஆட்சியில் இருந்தபோதிலும் அதில் பெண்கள் குறைந்த அளவே சிகிச்சை பெற்று பயன் பெற்றனர். இதற்கான காரணம். 'அன்றைய பர்தா முறையும் மற்றும் அரசு மருத்துவமனைகளில் பெண் மருத்துவர், செவிலியர் இல்லாததுமாகும்.' இதன் காரணமாகவே பெரும்பாலும் கருவுற்ற பெண்கள் முறையான பயிற்சி பெறா பாரம்பரியத் தாதிகளிடம் முரட்டுத் தனமான, பழம் பாணியான மருத்துவ முறையாய் இருப்பினும் சிகிச்சை பெற்றனர்.

இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கும் முயற்சி யினால் மகளிர் மேலை மருத்துவம் கற்க மதராஸ் ராஜதானியில் பெண்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. இதனை முதன் முதலில் மதராசில் பெற்ற பெருமை ஸ்கர்லிப் என்ற இங்கிலாந்து பெண்மணியைச் சாரும். இதற்குப் பேருதவி செய்தவர் டாக்டர் டி. பால் போர் (Bal Four). ஆனால் சென்னை பொது ஜன செயல் துறை இயக்கம் அனுமதி அளிக்காது, இது "முதிர்ச்சியற்ற செயல்" என்று கூறி அனுமதி மறுத்தது. இருப்பினும், டாக்டர் பால் போர் விடா முயற்சியினாலும், மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் எம்.சி பர்நெல் ஆதரவுடனும் 1875இல் ஸ்கர்லிப் மதராஸ் மருத்துவக் கல்லூரியில் படிக்க அனுமதிக்கப்பட்டு மருத்துவப் பட்டயம் பெற்றார்.

**கோஷா மருத்துவமனை**

1878-1882இல் ஸ்கர்லிப் இங்கிலாந்திற்கு மேல் படிப்பிற்காகச் சென்ற பொழுது, விக்டோரியா ராணியைச் சந்தித்து, இந்தியப் பெண்மணிகளுக்குத் தகுந்த பெண் மருத்துவர் இல்லை என்று எடுத்துக் கூறி, பிறகு இளவரசர் வேல்ஸ் மற்றும் இளவரசி வேல்ஸ் ஆகியோரிடமும் இதைப்பற்றிக் கூறினார். இந்தியாவிற்கு வந்து, தனது மருத்துவத் தொழிலை ஆரம்பித்து அளவுக்கு மிஞ்சிய நோயாளிகளுக்கு மருத்துவம் செய்தாலும், அதில் தான் மனநிறைவு கொள்ளாது பெண்களுக்காக மட்டும் ஒரு மருத்துவ மனை தொடங்குவதிலேயே நாட்டம் கொண்டார். இதற்கு உதவிட, மதராஸ் கவர்னர் மனைவி லேடி கிராண்ட் டஃபரின் (Grant Dufferin) மற்றும், சர்ஜன் ஜெனரலிடம் உதவி நாடினார். இவர்கள் துணையுடன் மதராசில் முக்கியப் பிரமுகர்களுடன் ஒரு கூட்டம் நடைபெற்றது. இம்மருத்துவமனையை எப்படித் தொடங்குவது என்பது பற்றியும் மற்றும் அதற்கான செலவினங்கள் குறித்தும் பேச மேதகு லேடி கிராண்ட் டஃபரின் தலைமையில் 1885 மார்ச் 6ஆம் தேதி ஒரு கூட்டம் நடைபெற்றது. இதில் கஸ்தூரி பாஸ்யம் அய்யங்கார், திவான்பகதூர் ஆர். ரெங்க நாதராவ், விஜயநகர ராஜா, வெங்கடகிரி ராஜா, நீதியரசர் முத்துசாமி அய்யர், ராஜா சர் செவாலியர் ராமசாமி முதலியார் ஆகியோர் உயர்சாதி மற்றும் கோஷா பெண்களுக்காக மருத்துவமனை உருவாக்கக் கூடினர். இம்மருத்துவமனையை உருவாக்க அக் கூட்டத்திலேயே ரூ. 70 ஆயிரம் திரட்டப்பட்டு, 1885 டிசம்பர் 7ஆம் தேதி மேதகு லேடி கிராண்ட் டஃபரினால் மருத்துவமனை திறக்கப்பட்டது. இம்மருத்துவமனையை நிறுவ முயற்சி எடுத்த

டாக்டர் ஸ்கர்லிப் முயற்சியால் இம்மருத்துவ மனைக்கு இராணி விக்டோரியா பெயர் வைத்திட இராணியின் அனுமதி பெற்று சூட்டப்பட்டது.

இம்மருத்துவமனை தொடங்க, திருவாங்கூர் ராஜா, புதுக்கோட்டை ராஜா, ஆற்காடு இளவரசர் ஆகியோரும் தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

(The Madras Centenary Commemoration, volume, New Delhi, Asia Education Service, 1994)

**சேப்பாக்கத்தில் மருத்துவமனை**

இம்மருத்துவமனை தொடக்கத்தில் நுங்கம் பாக்கத்தில் மூர்கார்டனில் உள்ள மாண்புமிகு மிர் ஹுமாயூன் ஷா பகதூரின் வீட்டில் வாடகையின்றி ஆரம்பிக்கப்பட்டது. பிறகு, திருவல்லிக்கேணியிலிருந்து சேப்பாக்கத்திற்குச் சிறிது தெற்கில் அரசு 1890இல் இடத்துடன், மருந்து வாங்க ரூ. 10 ஆயிரம் அளித்த பிறகு, மருத்துவமனைக்கான கட்டடங்கள் நிரந்தர மாகக் கட்டப்பட்டன. கண்காணிப்பாளர் வீடு கட்ட விஜயநகர ராஜா ரூ. 32 ஆயிரம், உள்நோயாளிகள் பிரிவு கட்டடங்கள் கட்ட மதராஸ் விக்டோரியா மகாராணியின் மகளிர் சேமநல நிதியிலிருந்து ரூ. 50 ஆயிரம் பெறப்பட்டு அவற்றின் பிரசவக்கூடம் மற்றும் தொற்றுள்ளவருக்குப் பிரசவம் பார்க்க ஒரு கூடம், லேடி பாஸ்யம் அய்யங்காரினால் கட்டப் பட்டு மருத்துவமனை திறக்கப்பட்டது. அப்போது கண்காணிப்பாளராகப் பொறுப்பேற்றவர் குமாரி ஹென்றிக் (Hendric).

ஆரம்பத்தில் இம்மருத்துவமனை டஃபரின் நிதியத்தின் கண்காணிப்பில் இருந்து வந்ததை, அரசு 1921 ஏப்ரல் 16ஆம் தேதி தனக்குக் கீழ் கொண்டு வந்தது. இதன் முதல் கண்காணிப்பாளராக மேரி பியூடன் (Mary Beadon) பொறுப்பு வகித்தார். பிறகு குமாரி மேதகு லசாரஸ்சும், மதுரமும் முதல் இரண்டு இந்தியக் கண்காணிப்பாளர்கள் என்ற பெருமை பெற்றனர்.

இம்மருத்துவமனை செயல்பாடுகளில், குறிப் பிடும் படியான ஒரு செய்தி. பிராமணர், சூத்திரர், இஸ்லாமியர் ஆகியோருக்குத் தனித்தனியான படுக்கைக்கூடங்களும் இருந்தன. உயர்சாதிக்கென்று உயர்சாதிக்காரர்களால் தனிச் சமையலும் நடை பெற்றது. (Billington Women in India, p. 107)

பிரசவத்திற்காகத் தொடங்கிய இம்மருத்துவ மனையில் பொதுவாக மற்ற நோய்களுக்கும் தனித் தனிப் பகுதிகள் தற்பொழுது இயங்கி வருகின்றன.

வேல்ஸ் இளவரசர் இந்திய வருகையை நினைவுகூர, 1922இல் பொது மக்களிடமிருந்து திரட்டப்பட்ட பணத்தால் குழந்தைகள் மருத்துவ மனை, பழைய மருத்துவமனையை ஒட்டியபடி கட்டப்பட்டு, 1936 ஏப்ரலில் 52 படுக்கைகளுடன் திறக்கப்பட்டது.

ஆண்டுக்கு ஆண்டு நோயாளிகளின் வருகை பெருகிய இன்றைய காலகட்டத்தில் ஓர் ஆராய்ச்சிக்கான மருத்துவமனையாகக் கஸ்தூரிபாய் மருத்துவமனை என்று பெயர்மாற்றம் பெற்று நடைபெற்று வருகிறது.

**வேலூரில் மகளிர் மருத்துவமனை / சி.எம்.சி. தோற்றம்**

டாக்டர் இடா ஸ்கட்டருக்கு முன் அவர் தந்தை டாக்டர் எச்.என்.ஸ்கட்டர் நடத்திய மருத்துவ மனையில், ஆரம்ப காலத்தில் மருத்துவம் பெற மிக கவனத்துடன், கொஞ்சம் வெட்கத்துடன் மற்றும் பீதியுடனே கீழ்மட்ட சாதியினரே வந்தாலும், பிறகு இந்நிலை படிப்படியாக மாறியது. குறிப்பாக, உயர்மட்ட இந்துக்களும், இஸ்லாமியர்களும்கூட எந்தத் தயக்கமுமின்றி மருத்துவம் பெற்றனர். இதில் ஒரு செய்தி என்னவெனில், மருத்துவமனையில் மருத்துவம் பெற்ற பலர், மருத்துவமனைக்குள்ளேயே கிறித்தவ சமயத்தைத் தழுவினர். இது அம்மருத்துவ மனையை நடத்திய ஆங்கில மிஷனரிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. இந்நிலையில், டாக்டர் ஸ்கட்டர் ஒவ்வொரு மிஷனரியும் ஒரு கையில் வேதத்தை வைத்துக்கொண்டு, மருத்துவம் செய்ய மற்றொரு கையைத் தயாராக வைத்திருக்க வேண்டும் என்று கூறினார். ஆனால், பல மிஷனரிகள் (1830) இது போல் மருத்துவ சேவை செய்யாது உள்ளனர் என மனம் வருந்தினார். இதற்குப் பிறகே தந்தையுடன் டாக்டர் இடா ஸ்கட்டர் 1900இல் இந்தியாவிற்கு வருகையுற்ற காலத்தில் மிகச்சில இந்திய, மேலை நாட்டு மகளிர் மருத்துவர் மற்றும் பயிற்சி பெற்ற தாதிகள் ஆகியோரால் பிரசவம் பார்க்கப்பட்டது. என்னென்ன உத்திகளைக் கையாண்டால் மகளிர் மருத்துவத்தை மேம்படுத்தலாம் என்ற நோக்கோடு இந்தியாவின் சிறந்த மருத்துவ மேதைகளுடன் இடா ஸ்கட்டர் நட்பு கொண்டாடினார். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் வட இந்தியாவில் வசித்த அமெரிக்க மிஷனரியான சி. ஸ்வெய்ன் (C. Swain), ஐரிஷ் திருச்சபையைச் சேர்ந்த சூசன் பிரவுன் (Susan Brown), பூனே டாக்டர் லென்டிஸ் பெர்னார்ட் (Lentice Bernard), டாக்டர் பிராட்லி (Dr Bradley), ரெபெகா வாக்கர் (Rebecca Walker), டாக்டர் ஃபென்னி காமா (Dr Fenny Cama), முதன்முதலில் இந்தியாவில் மருத்துவப் பட்டம் பெற்ற டாக்டர் ஆனந்தபாய் ஜோஷி, பிறகு வெளிநாட்டில் பட்டம் பெற்ற மருத்துவப் பெண்மணி, மற்றும் ராயபுரம் மருத்துவ மனையைத் திறக்கக் காரணமாக மால்டிடா மாக்ஹெல் (Maltida Mchail) ஆகியோர்களாவர். (Improvement of the Conditions of Child Birth in India, p. 2)

**டாக்டர் இடாவிற்கு ஏன் இந்த ஆர்வம் தோன்றியது?**

*1820இல் டாக்டர் ஜான் ஸ்கட்டர் இந்தியாவில் மதுரை மற்றும் சென்னையில் துயருற்றவர்களுக்குத் தன் பணியை அர்ப்பணித்து வந்தார். பிறகு இராணிப்பேட்டையில் வசித்தபோது 1870 டிசம்பர் 9இல் இவருக்கு இடா ஸ்கட்டர் பிறந்தார். இடா சிறுமியாகத் தன் பெற்றோருடன் வசித்தபோது, ஓர் இரவு மூன்று முறை உள்ளூர்வாசிகள் தங்கள் வீடுகளுக்குப் பிரசவம் பார்க்க அழைத்தனர். இடாவிற்குப் பேறு கால மருத்துவம் பற்றிய பயிற்சி இல்லை. ஆகவே, ஏதும் செய்ய முடியவில்லை. தந்தை ஒரு டாக்டராக இருப்பினும், சமூகத்தில் இருந்த சில சமூகக் கட்டுப்பாடுகளின் காரணமாக, ஆண் டாக்டர் என்பதால் பிரசவம் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. விடிந்தவுடன் இடாவிற்குப் பேரதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது. இரவில் இடாவை மருத்துவம் பார்க்க அழைக்கப்பட்ட வீடுகளில் இருந்த மூன்று கருவுற்ற பெண்களும் இறந்து விட்டனர். அப்போது, "இதுவே இந்திய மகளிரைக் காப்பாற்ற, மருத்துவ நிறுவனங்களை நிறுவ, கடவுள் கட்டளையிட்ட நாள்!" என்று இடா நினைத்தாராம்.*

*இதன்பிறகு, அமெரிக்காவிற்குச் சென்று, பிளடெல்பியாவில் உள்ள கார்நெல் (CORNEL) பல்கலைக்கழகத்தில் உள்ள மகளிர் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து, 1895இல் மருத்துவப் பட்டம் பெற்று இந்தியாவிற்குத் திரும்பினார்.*

*முதன்முதலில் மருத்துவத் தொழிலைத் தன்னுடைய தந்தையின் வீட்டிலேயே தொடங்கினார். இதுவே பிறகு மேரி தாபர்செல் மருத்துவமனை ஆனது. அதன் பிறகு, ஒரு மருத்துவ ஆலோசனைக்கூடம் 1906இல் ஆரம்பிக்கப்பட்டு, அங்குப் போய்வர குதிரை வண்டி பயன்படுத்தப்பட்டது. இவருக்கு உதவியாக இருவர் வேலைக்கு அமர்த்தப்பட்டு ஒருவர் ஆவணங்களை ஒழுங்குபடுத்தவும், மற்றொருவர் மருந்து தயாரித்துக் கொடுக்கவும் உதவி வந்தார்கள். பிறகு இது 1924இல் தொட்டிப்பாளையத்திற்கு மாற்றலானது.*



டாக்டர் இடா ஸ்கட்டர்

*வேலூரில் கிறித்தவ மருத்துவக் கல்லூரி 1918இல் டாக்டர் இடா ஸ்கட்டரால் ஆரம்பிக்கப்பட்டது. இவரே இதன் முதல் முதல்வர். ஆரம்பத்தில் மகளிர் மருத்துவர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்கப் பட்டது. ஆரம்பத்தில் எல்.எம்.பி. 1933 வரை நடைபெற்று, பிறகு டி.எம். & எஸ். படிப்பும் நடைபெற்றது. 1942இல் மதராஸ் பல்கலைக்கழகத்துடன் இணைந்தது.*

*முதல் தொகுதியில் 25 மாணவர்கள் படித்தனர். இடா ஸ்கட்டர் 1944-இல் ஓய்வு பெற்றார். பிறகு, சிறப்பு நிலை முதல்வராக 1947 வரை நீடித்தார். இவ்வாண்டு 10 ஆண்கள் படிக்க தேர்வு ஆனார்கள். இக்கல்லூரி அமெரிக்கன் காலேஜ் ஆப் ஏசியா நிதி மூலம் நடைபெற்றது. இதற்குப் பெரும் உதவியாகப் பணியாற்றியவர் திருமதி ஹென்றி வபிய போடி.*

*இது தவிர, 8 வட அமெரிக்க மிஷனரிகளும், 5 பிரிட்டிஷ் மிஷனரிகளும் உதவிக் கரம் நீட்டின. தற்பொழுது 39 இந்திய தேவாலயங்களுடனும் மிஷனரி சபைகளுடனும் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, டென்மார்க் தேசத்தின் மிஷனரிகளும் உதவுகின்றன.*

*1907இல் ஸ்கட்டர் வேலூர் செவிலியர் பயிற்சி நிலையத்தைச் செல்வி யூக்டனை* (Houghton) *தலைமை மருத்துவராகப் பணியமர்த்தி ஆரம்பித்தார். இதன்மூலம் முதன்முதலில் வீடுகளுக்குச் சென்று, மேலை மருத்துவ முறையில் செவிலியர்கள் பிரசவம் பார்க்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, டாக்டர் ஸ்கட்டரால் பள்ளி கொண்டாவிலும், குடியாத்தத்திலும் மருந்தகங்கள் தோன்றின.*

*இவருடைய மகத்தான மருத்துவசேவையைப் பாராட்டி இந்திய அரசு 1939இல்* "Kiser I India" *என்ற விருதுடன் தங்கப்பதக்கமும் வழங்கியது.* (Growth of Medical Education, p. 59)

**கல்யாணி மருத்துவமனை: (மெதோடிஸ்ட் மதராஸ் மிஷனரி சங்கம்)**

*கல்யாணி மருத்துமனையைத் தொடங்கியவர் திவான்பகதூர் நாராயணய்யர் சுப்பிரமணியம். இவர் பாரிஸ்டர் படித்து வழக்கறிஞராக மதராஸ் உயர்நீதி மன்றத்தில் பணியாற்றியபிறகு அட்மினிஸ்ட்ரேடிவ் ஜெனரல் மற்றும் மதராஸ் ஆபிஸ் டிரஸ்டியாகப் பணி யாற்றியவர். இவர் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். என்றாலும், பிறகு கிறித்துவமதத்தைத் தழுவியவர். இவர் மதராஸ் மைலாப்பூரில் தன் தாய் கல்யாணி நினைவாக மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவமனையை உருவாக்கி லண்டன் மெதோடிஸ்ட் மிஷனரியிடம் இதனை நடத்துமாறு ஒப்படைத்தார்.*


பின்னர் இம்மருத்துவமனை தென்னிந்தியக் கிறித்துவ சபையினரால் நடத்தப்பட்டது. இம்மருத்துவ மனையை 1909இல் திறந்தவர் மெதோடிஸ்ட் மிஷனரியைச் சார்ந்த லேடி ஒயிட். அந்நிலையில் 24 படுக்கைகளுடன் மிகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் செவிலியர்களால் நடத்தப்பட்டது. இம்மருத்துவமனை இன்றும் பெரிய அளவில் மிகச் சிறப்பாக நடந்து வருவது குறிப்பிடத்தக்கது. (Improvement of the Conditions of Child Birth, P. 122, V. Gayathri thesis. o. 213)

**ஆர்.எஸ்.ஆர்.எம். மகளிர் மருத்துவமனை**

சர் ராமசாமி முதலியாரின் தங்கிப் பார்க்கும் பிரசவ மருத்துவமனை வட சென்னையில் மணியக் காரச் சத்திரத்தில் 1880இல் டியூக் பக்கிங்ஹாமினால் தொடங்கி வைக்கப்பட்டது. இம்மருத்துவமனையின் பராமரிப்புக்காக, ராமசாமி முதலியாரின் அறக் கட்டளை ரூ. 15 ஆயிரம் வழங்கியது.

பொது மருத்துவமனைகளில் சேர்ந்து பிரசவம் பார்க்க விரும்பாத மேல்குடி மக்களும், தங்கள் ஆசாரத்தையும், சமூகப் பழக்க வழக்கங்களையும் விட்டுக் கொடுக்காது இருப்பவர்களும் அப்படி விட்டுக்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படு மானால் இறப்பதற்குக் கூடத் தயாராக இருந்தவர் களும் இந்த மருத்துவமனையில் சேர்ந்து மருத்துவம் பெற்றனர். இதன் காரணமாக மருத்துவமனை தொடங்கிய முதல் ஆண்டு 150 பெண்கள் பிரசவம் பார்த்துக் கொண்டார்கள். 32 படுக்கைகளே கொண்ட இம்மருத்துவமனையில் நோயாளிகளைக் கவரும் வண்ணம் ஸ்பிரிங் கட்டில், படுக்கைத் தலையணைக்கு உறைகள், சுவருக்கு வண்ணப் பூச்சு, அறை நடுவில் அலங்காரப் பூச்செடிகள் ஆகியவை - அதாவது ஒரு சராசரி மருத்துவமனையில் கிடைப்பதை விடக் கூடுதலான வசதிகள் - இங்குத் தரப்பட்டன. மருத்துவமனையும் சற்று விசாலமாக, காற்றோட்டமாக இருந்தது. இதில் ஒரு விதியாக உழைக்கும் பெண்கள், ஊட்டம் குறைவானவர்கள், 19 வயதுக்குக் குறைந்தவர்கள் பிரசவமாவதற்கு முன்பு 15 நாட்கள் தங்க அனுமதிக்கப்பட்டார்கள். (Billington, Women in India, p. 10)

இங்கிலாந்து ராணியின் 50ஆவது பிறந்த நாள் நினைவாக, மற்றொரு உள்நோயாளி தங்கும் பகுதி திறக்கப்பட்டு, பின்னர் மேலும் ஒன்று அவர் இந்திய வருகையை முன்னிட்டும் திறக்கப்பட்டது. ஏனெனில், இம்மருத்துவமனையின் அருமை பெருமைகளை அறிந்த மக்கள் நெடுந்தொலைவிலிருந்து ஏராளமாக வந்து மருத்துவம் பெற்றனர். இதன் காரணமாக சர் செவாலியர் ராமசாமி முதலியாரால் தொடங்கப் பட்ட இம்மருத்துவமனை இந்தியாவில் சிறந்த ஒரு மருத்துவமனையாக இயங்கியது. 1914இல் ராமசாமி முதலியார் இம்மருத்துவமனையை முனிசிபாலிடி யிடம் ஒப்படைத்தார். இம்மருத்துவமனையே ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனை என்று இன்றும் நடைபெற்று வருகிறது.



சர்.ஆ.இராமசாமி முதலியார்

இப்பெண்களுக்கான மருத்துவமனையைக் கட்டிய சர் ராமசாமி முதலியாரைப் பற்றிய சில கூடுதல் செய்திகள்: சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷன் அருகில் பழைய மூர் மார்க்கெட் எதிரில் ஸீக்ஷதராடனம் செய்யக்கூடிய யாத்ரிகர்கள் இலவசமாகத் தங்கு வதற்கான சத்திரம், 1899இல் திருப்பாப்புலியூரில் தாய் சேய் மருத்துவமனை, காஞ்சிபுரத்தில் இன்னொரு மருத்துவமனை ஆகியவற்றையும் திறந்த வள்ளல் ஆர்.எஸ். ராமசாமி முதலியார் ஆவார்.

**முடிவுரை**

காலனி ஆட்சியில் பயிற்சிபெறா தாதிகளிட மிருந்து வீட்டில் பிரசவம் பார்ப்பதைத் தவிர்க்க, தங்கிச் சிகிச்சை பெறக்கூடிய லையிங்-இன்-ஹாஸ்பிடல் (Lying - in - Hospital) மதராசில் மே 1844இல் துவங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1868 அக்டோபர் 17ஆம் நாள் மதராஸ் பொது மருத்துவமனையிலிருந்து பிரிந்து தாய் சேய் மருத்துவமனை எழும்பூரில் தொடங்கப்பட்டது.

இருப்பினும், இப்பொது மருத்துவமனைகளில் பெண் மருத்துவர், செவிலியர் மட்டும் பணிபுரியாத காரணத்தாலும், மேட்டுக்குடி மக்கள் எல்லோருக்கும் சமமான சிகிச்சை மற்றும் உணவை இதுபோன்ற மருத்துவமனைகளில் ஏற்றுக்கொள்ளாத காரணத் தாலும் சர். ராமசாமி முதலியார் மகளிர் மருத்துவ மனை மற்றும் கோஷா மருத்துவமனை ஆரம்பிக்கப் பட்டுள்ளதை வரலாறு தெரிவிக்கிறது. ஆனால், இதற்கு மாறாக எல்லோருக்கும் என்ற நிலையில் வேலூர் மகளிர் மருத்துவமனை தொடங்கப்பட்டு உள்ளதும் ஒரு செய்தியாகும். ●

கட்டுரை

# கண்ணீரும் செந்நீரும் பாய்ச்சி...

## ப.ஜீவானந்தம்

சுதந்திரம் வந்துவிட்டது, பாரதி கண்ட கனவு நனவாகிவிட்டது என்று எழுதாத பத்திரிகை இல்லை. பேசாத மக்கள் இல்லை. இன்று எந்தப் பக்கம் திரும்பினாலும் கேட்கிறது "சுதந்திரப் பள்ளு."

பாரதியை, அவர் வாழ்ந்த காலத்தில் அனேக வைதிக விமர்சகர்கள், தற்கால நல உரிமைகளைக் குறிக்கோளாகக்கொண்டே கவி புனைந்திருக்கிறார் என்று குறை கூறினர்.

இலக்கணம் அறியாத கவிஞன் என்று நன்னூல் பண்டிதர்கள் அகம்பாவ வெறியில் வாய்க்கொழுப் போடு ஆதாரமின்றி அர்த்தமற்றுப் பேசினர். வெறும் தேசியக் கவி என்று பலர் அவமதிப்போடு பார்த்தனர்.

பெண் விடுதலைப் பித்தன் என்று சிலர் ஆத்திரப் பட்டனர். கஞ்சாப் புலவன் என்று இளக்காரமாக ஏசினவர்களும் உண்டு.

அவர் காலஞ்சென்றபின், கொஞ்ச காலத்திற்கு முன் கூட, பாரதி மகா கவியா? என்ற விவாதம் அமர்க்களப்பட்டது எழுத்தாளர்களிடையில்.

**மக்களின் முன்னோடி**

"பாரதியார், பார்ப்பான்தானே?" என்று பழிக்கக் கூட தூய தனித்தமிழ்க் குருதி நரம்புகளில் பீறிட்டுப் பாய்கிற, 'செங்குட்டுவன், வளவன், செழியன்' வழிவழி வந்தோரும் தமிழகத்தில் இல்லாமலில்லை.

பாரதி தேசியக் கவியாக இருந்து, மகாகவியாக மாறி, புதுமைக் கவியாகப் பொலிந்து, புரட்சிக் கவியாகவும் பொதுமக்கள் கவியாகவும் புகழ்மாலை சூட்டப்படுகிறார் இன்று. அன்று ஒதுக்கப்பட்டவர் இன்று துதிக்கப்படுகிறார் - மக்களின் அரசியல், பொருளாதார, சமூக அறிவு வளர்ச்சியின் விளைவாக.

பாரதியின் எழுத்துக்கள் நமது தேசிய இயக்கத்தின் பல திறப்பட்ட போக்குகளையும் நடமாட்டங் களையும் கருத்தோட்டங்களையும் சிறந்த முறையில் படம்பிடித்துக் காட்டுகிறது. ஒவ்வொரு தலைசிறந்த கலைஞனையும்போல் தன் காலத்தில் ஏற்பட்ட சமூக, அரசியல் மறுமலர்ச்சியையும் புது விழிப்பையும் கூர்மையாகக் கவனித்தான் பாரதி.

நிகழ்கால நலன்களைப் பற்றித்தானே பெரு மிதமாப் பாடியிருக்கிறார் என்று, மதிப்பீட்டில் பாரதியாருக்குக் குறைவாக 'மார்க்' போடுகிறவர் களுக்கு ஒரு உண்மை விளங்கவில்லை. தற்காலிகமாகத் தோன்றும் அல்லது காட்சியளிக்கும் சமுதாய, அரசியல் பிரச்சினைகளுக்கு அப்பாற்பட்ட, நிரந்தர உண்மைகளென்று சொல்லத் தக்கவை ஒன்றுமில்லை யென்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

பாரதியின் பெருமை - தனிச்சிறப்பு - தேசிய இயக்கத்தின் மகத்துவத்தை அல்லது விரிந்து பரந்த தேசிய இயக்கத்தை - அதனுடைய பன்முகங் களிலும் கண்டதிலேயே அடங்கியிருக்கிறது.

அரசியல் சுதந்திரத்தைப் பற்றி அருமையாகப் பாடிய கவிஞன் என்றே, பொதுப் படையாக அடிக்கடி பாராட்டப்படுகிறான் பாரதி. அவனுடைய எழுத்துத் திருப்பணியில் ஒரு பகுதிதான் இது.

பாரதியைப் பற்றி அறிய வேண்டுமானால், தேசிய இயக்கம் பூராவையும், அதன் எல்லாத் துறைகளையும் சகல அம்சங்களையும் அதன் வலு, வலுவின்மைகளையும் இறுதியாக அது எத்திக்கை நோக்கி முன்னேறி வந்துள்ளதென்பதையும் அறிந்து தீரவேண்டும்.

ஒரேயடியாக, காலத்தைத் தாண்டி எந்த மனிதனும் வாழமுடியாது. எத்துணை தீர்க்கதரிசி யாயினும் கால வரம்புகளை முற்றும் மீறிச் சென்று விட முடியாது. கவிஞனும் மனிதன்தானே! இந்த உண்மையை மறந்து விடாமல் பாரதியை ஆராய்ந்தால், பாரதியின் பெருமை இன்னும் அதிகரிக்கும்.



மகாகவி பாரதியாரின்

136வது பிறந்த நாள் : 11-12-2018

ஆதிகபவன் முதற்றே உலகு

என்று தொங்கினான் வள்ளுவன்.

அலகிலா விளையாட்டுடையாரவர்
தலைவரன் னவர்க்கே சரணங்களே

என்று வணங்கினான் கம்பன்.

எங்கள்
மாநிலத் தாயை வணங்குது மென்போம்

என்று பாரதி ஆரம்பித்தான். தெய்வ பக்தியின் இடத்தில் தேச பக்தியை ஏற்றி வைத்துப் போற்றி நின்ற முதல் தமிழ்க்கவி பாரதிதாசன்.

"நாட் டன்பில்லா நடைப்பிணம்" என்று 'மனோன்மணியம்' சுந்தரம் பிள்ளை கூறுகிறாராயினும்,

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனிசிறந்தனவே

என்று தேசபக்திக்கு முதல் வரிசை அளித்தவன் பாரதியே.

பாருக்குள்ளே நல்ல நாடு – எங்கள்
பாரத நாடு

என்று போற்றி நாட்டன்பை மக்களிடம் தட்டி எழுப்பி,

சொந்த நாட்டில் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம் – இனி – அஞ்சிடோம்

என்று ஆவேசக் கனலே மூட்டி,

பாரத தேசமென்று பெயர் சொல்லுவார் – பிடிப்
பயங்கொல்லுவார் துயர்ப்பகை செல்லுவார்

என்று நம்பிக்கை ஊட்டுகிறான்.

### வீர சுதந்திரம் விரும்பினான்

தேச பக்தியை எழுப்ப, அடிமைத்தனத்தில் வெறுப்பை மூட்டுகிறான்.

புல்லடிமைத் தொழில் பேணி – பண்டு
போயின நாட்களுக் கினிமனம் நாணி
தொல்லை யிகழ்ச்சிகள் தீர; – இந்தத்
தொண்டு நிலைமையை 'தூ'வென்று தள்ளி
வந்தே மாதர மென்போம்

என்று நாட்பட்ட அடிமைத் தனத்தால் தடித்துப் போன தோலிலும் 'சுரீர்' என்று தைக்கும்படிச் சாட்டை கொடுத்து எழுப்புகிறான். "இளந்தமிழா! பள்ளி எழுந்தருளாயே" என்ற பாட்டு கேட்கிறது.

அடிமை வாழ்வில் அருவருப்பையும் ஆத்திரத்தையும் ஊட்டி,

குப்பை விரும்பும் நாய்க்கே – அடிமை
கொற்றத் தவிசு முண்டோ?

என்று ஆங்கிலேயன் மூலம் இந்தியனின் - தமிழனின் ஆத்திர நெருப்பில் எண்ணெய் வார்த்து, மான உணர்ச்சியைக் கிளறி,

மானிட ஜென்மம் பெறுவதற் கரிதெனும்
வாய்மையை உணர்ந்தாரேல் – அவர்
ஊனுடல் தீயினும் உண்மைநிலை தவற
உடன்பாடு மாறுளதோ?

என்று வினவி, வீர சுதந்திர வேட்கையைக் கிளப்புகிறான் பாரதி.

பாரதி வேண்டிய சுதந்திரம், பாரதி தூண்டிய சுதந்திரம், மிகப் பெரிது அது 'ஆரமுது', புளித்த கள் அல்ல, அது 'விண்ணில் இரவி' மின்மினி அல்ல. 'கண்ணினு மினியது அந்தச் சுதந்திரம்' பாரதி கருத்தில் இந்தச் சுதந்திரம் 'கண்ணீரும் செந்நீரும்' பாய்ச்சி வளர்க்கப்பட்டது. படுவதேயன்றி, 'தண்ணீர் விட்டு வளர்க்கப்பட்டதோ, படுவதோ அல்ல. ஆகவே, இதை 'வீரசுதந்திரம்' என்று வீறுகொண்டு பாடுகிறான். 'வேண்டும்' என்று சுயாட்சி கேட்ட திலகர் பெருமானை விட அழுத்தமாகக் கேட்கிறான் பாரதி. பெருவாழ்வுக்கு இன்றியமையாத இந்தச் சுதந்திரத்தைப் போராடி, 'ஏதும் நல்கி இங்கெவ்வகை யானும்' செல்ல முயலாமல், அற்பச் சுகத்தில் மூழ்கிக் காலத்தைத் தள்ள முயல்வோரை நினைத்துத் தான் பாரதி:

மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை இழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ?

என்று கேட்கிறான். கண்ணை விற்றுச் சித்திரம் வாங்குவதும், சுதந்திரத்தை விற்றுச் சுகவாழ்வு பெறுவதும், கைகொட்டிச் சிரிக்கத்தக்க மகாமடத்தனம் என்று என்ன அழகாகச் சொல்கிறான் பாருங்கள்!

### சுதந்திர தேவியைத் தொழுதான்

நரகவாதனைகளும், ஹிட்லர் கொலைப் பாதகங்களும், முசோலினி அட்டகாசங்களும் 'விச்வரூப'மெடுத்து வெம்புலி போல் பாய்ந்தாலும்,

சுதந்திர தேவீ! நினைத்
தொழுதிடல் மறக்கிலேனே

என்று சுதந்திர வேட்கையோடு இரண்டறக் கலந்து நிற்க வேண்டிய உடும்புப் பிடிப்பையும் உருக்கு உறுதியையும் இசை முழக்குகிறான்.

எத்தனை டால் டமாரமடித்து, மினுக்கிப் பிலுக்கிப் போக போக்கியத்தில் திளைப்பவராயினும் சுதந்திரம் இல்லாதவராயின் அவர்களுடைய வாழ்க்கை 'அணிகள்வேய் பிணம்' (அலங்காரப் பிரேதம்) போல் பாழானதே என்று 'நெட்டை நெடு மரங் களுக்கும்' மண்டையில் உறைக்கும்படி அடித்துக் கூறுகிறான். சுதந்திரமில்லா நாட்டில்,

ஆவியங்குண்டோ? செம்மை
அறிவுண்டோ? ஆக்கமுண்டோ?

என்று உலகம் அதிர வினவுகிறான்; அடிமை நாட்டில், காவிய நூல்களும் ஞானக் கலைகளும் விளையாதென்கிறான். விடுதலை விழையாத, சுதந்திரத்தைப் பரிபாலிக்காத மக்களைப் 'பாவிகள்' என்று சபிக்கிறான். சுதந்திரம் இல்லாத நாடு நாடன்று. நடைபிணங்கள் திரியும் காடு என்று கூறி தமிழகத்தின் கும்பகர்ணத் தூக்கத்தை இரும்புலக்கை கொண்டு கலைக்கிறான். சுதந்திரத்தின் பெருமையை நன்றாக உணர்ந்த பாரதி,

கூற்றினுக்குயிர் கோடி கொடுத்தும் நின்
பேற்றினைப் பெறுவோம்

என்று குரல் எழுப்புகிறான். இதோடு நிற்கவில்லை.

சுதந்திரம், ஜனநாயகம் என்னும் 'பேரறத்தினைப் பேணும் நல்வேலி' என்றும், 'சோர வாழ்க்கை, துயர் மிடி' ஆகிய காரிருட் படங்களைக் கிழித்தெறியும் 'சோதி' என்றும், 'வீரருக்கு அமுது' என்றும் அமுதத் தமிழில் பொழிகிறான்.

இவ்வாறு, பல பாட்டுகள், கண்ணிகள், விருத்தங்கள் மூலம், பொதுப்படையாகச் சுதந்திரத்தின் மாண்புகளை, உலக இலக்கியத்தில் இடம் பெறத் தக்கவாறு தமிழனுக்கு விளக்கி விட்டு, இந்நாட்டுக்கு ஏற்ற ரீதியில் சுதந்திரத்தையும் விடுதலையையும் பற்றிப் பாடுகிறான். எல்லோரும் பாடத்தக்க பண் களில் பாடுகிறான் - 'சுதந்திரப்பள்ளு,' 'விடுதலை' என்ற இரண்டு பாடல்களில்.

### ஆனந்த சுதந்திரம் அமைத்தான்

'ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று' பாரதி ஆனந்த சுதந்திரப்பள்ளுப் பாடும்போது, 'வெள்ளைப் பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே' என்று மாத்திரம் பாடவில்லை.

பார்ப்பானை ஐயரென்ற காலம் போகவேண்டும் (அதாவது வருணாசிரம தர்மம் அல்லது சாதி முறையின் ஆதிக்கம் தவிடு பொடியாக வேண்டும்); எல்லாரும் சமமென்பது உறுதியாக வேண்டும் (அக்கிரகாரங்களும் சேரிகளும் அழிந்து ஒழிந்து, புதிய நகரங்களும் புதிய கிராமங்களும் எழுந்து, வாழ்வில் எல்லாருக்கும் சம சந்தர்ப்பமும், சம உரிமையும் கிடைக்கப்பெற வேண்டும்). எல்லாரும் ஒன்றெனும் காலம் வரவேண்டும். கெட்ட நய வஞ்சகக்காரர்களுக்கு நாசம் வரவேண்டும். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து, வீணில் உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்து, விழலுக்கு நீர் பாய்ச்சியும், வீணருக்கு உழைத்தும் 'மாய மாட்டோம்' 'உடலம் ஓயமாட்டோம்' என்ற நிலைமை ஏற்படவேண்டும். நாமிருக்கும் நாடு நமது என்ற அறிவும், அது நமக்கே உரிமை என்ற போதமும் ஏற்படவேண்டும் என்றெல்லாம் பாடுகிறான். பரங்கியைத் துரை என்ற நிலைமை மாறுவதோடு மேற்சொன்ன அத்தனை காரியங்களும் நிறைவேறினால் தான், ஆனந்த சுதந்திரப் பள்ளு பூரணத்துவம் அடையுமென்பது பாரதி கருத்து.

### விடுதலை முழங்கிய வீரன்

'விடுதலை'ப் பாட்டு இன்னும் விளக்கம் தருகிறது.

வெள்ளை அதிகார வர்க்கத்திலிருந்து விடுதலை பெறுவதோடு பாரதி திருப்தி கொள்ளவில்லை. 'சாதியால் வந்த சிறுநெறி'யால் தாழ்த்தி மிதிக்கப் பட்ட மக்கள் விடுதலை பெற்றால்தான் உண்மையான விடுதலை வரும் என்று முற்றுத் தெளிகிறான். அதனாலேயே, 'பறையர்க்கு விடுதலை வேண்டும், தீயர்க்கு விடுதலை வேண்டும், புலையர்க்கு விடுதலை வேண்டும். பரவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடுதலை வேண்டும்' என்று அழுத்தந் திருத்தமாகக் கோருகிறான். வெறும் விடுதலை மாத்திரமல்ல; அவர்கள் 'திறமை கொண்ட தீமையற்ற' தொழிலும் (சுரண்டல் கொள்ளையும் ஒட்டுண்ணிப் பிழைப்புமல்ல, 'தேர்ந்த கல்வி ஞானமும்' எய்தி நல்வாழ்வு வாழ்வதே) உண்மை யான விடுதலை என்கிறான். ஏழையென்றும் அடிமையென்றும் எவனும் இல்லை என்றும், ஜாதியில் இழிவு கொண்ட மனிதன் இந்தியாவில் இல்லையென்றும், சமூக வாழ்வு அமைந்தால்தான் உண்மையான விடுதலை மலரும் என்றும் தெள்ளத் தெளிவாகக் கூறுகிறான். கல்வியும் செல்வமும் சகலரும் எய்தி, எல்லாரும் மன மகிழ்ந்து கூடி மனிதர் யாவரும் ஒரு நிகராக வாழவேண்டுமென்கிறான். மாதர்களும் 'தாதரென்ற' நிலைமை மாறி சரிநிகர் சமானமாக வாழவேண்டுமாம்.

'ஒரு நாட்டை மற்றொரு நாடு அடிமை கொள்ளும் வரையிலும், முதலாளிகள் தொழிலாளிகளைக் கொடுமை செய்யும் வரையிலும், ஆடவர் பெண்டிரை அடக்கி ஆளும் வரையிலும் நான் நிம்மதியாக இருக்கமாட்டேன்' என்றான் ரோமன் ரோலண்ட் அவன் பிரெஞ்சுக்காரன். பாரதி இந்திய நாட்டான்; அதிலும் தமிழன். ஆகவே பாரதி ரோலண்டு மாதிரி மட்டும் போராடவில்லை. இன்னும் ஒருபடி மேற் சென்று, பார்ப்பானை ஐயரென்ற காலத்தைப் போக்கவும், பறையனும், புலையனும் விடுதலை பெறப் பார்க்கவும் அதாவது சாதி முறையை வேரொடு கில்லி எறியவும் வாழ்க்கையை அர்ப்பணிக்கிறான்.

பொய்மை தீர மெய்மை நேர
வருத்த மழிய வறுமை யொழிய
வைய முழுதும் வண்ணம் பொரிய
வேண்டுமடி யெப்போதும் விடுதலை அம்மா!

என்ற பாரதி விடுதலை முழக்கத்தை என்றேனும் மறக்க இயலுமா!

நன்றி : ப.ஜீவானந்தம் ஆக்கங்கள்,
பதிப்பு : வீ.அரசு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

# சிறந்த பதிப்பாளருக்கான விருது



19-11-2018 அன்று 51வது தேசிய நூலக வார விழா புத்தகக் கண்காட்சியையொட்டி, பள்ளிக் கல்வித்துறை, பொது நூலக இயக்ககம் சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு, தேவநேயப் பாவாணர் மைய நூலக வாசகர் வட்டம் மற்றும் இந்தியப் படைப்பாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் நடத்திய விழாவில் சிறந்த பதிப்பாளருக்கான விருதை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பொது மேலாளர் திரு.தி.ரத்தினசபாபதி அவர்கள், தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் வி.சி.ராமேஸ்வர முருகன் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.



சென்னை மாவட்ட மைய நூலகப் புரவலர்க்கான சிறப்புப் பட்டயத்தையும், விருதையும் இந்தியப் படைப்பாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு.அ.கந்தசாமி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

# ஒரு செய்தியாளர் அனுபவித்த சித்திரவதைகளும், படுகொலையும்

## உதயை மு. வீரையன்



‘**தே**சிய பத்திரிகையாளர் தினம்’ ஆண்டு தோறும் நவம்பர் 16-அன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. நாட்டு நடப்புகளை நடு நிலையோடு எடுத்துரைத்து உண்மை நிகழ்வுகளை உலகத்துக்கு உணர்த்தும் பத்திரிகையாளர்களைப் பாராட்டும் நாளாக இது அனுசரிக்கப்படுகிறது.

‘உண்மையே வெல்லும்’ என்ற உணர்வோடு தம் உடல், பொருள், உயிரை அர்ப்பணிக்கும் பத்திரிகை யாளர்களை வைத்தே பத்திரிகைகள் மதிக்கப்படு கின்றன. அதனால்தான் அது மக்களாட்சியின் நான்காவது தூணாக மதிக்கப்படுகிறது.

உலகம் முழுவதும் பத்திரிகையாளர்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகவே இருக்கிறது. பத்திரிகையாளர்கள் ஆளுவோரின் எடுபிடிகளாக இருக்க வேண்டும் என்றே ஆட்சியாளர்கள் நினைக் கின்றனர். அவ்வாறு இல்லாதபோது அவர்களின் உயிருக்கும் உறுதியில்லை.

சவூதி அரேபிய நாட்டுச் செய்தியாளரான ஜமால் கஷோகி சில சர்ச்சைகள் காரணமாக சொந்த நாட்டிலிருந்து வெளியேற வேண்டிய அளவுக்கு நெருக்கடிகள் தரப்பட்டன. அங்கிருந்து வெளியேறி இலண்டன் சென்றார். அமெரிக்காவில் வசித்து வந்த அவர் அங்கு வெளிவரும் ‘வாஷிங்டன் போஸ்ட்’ இதழில் கட்டுரைகள் எழுதி வந்தார்.

அவர் சவூதி அரச குடும்பத்துக்கு நெருக்க மாகவே இருந்தாலும் அரசின் கொள்கைகளுக்கு எதிராகவும், பட்டத்து இளவரசருக்கு எதிராகவும் கருத்துகளைத் தெரிவித்து வந்தார். இதனால், அவர் அரச குடும்பத்துக்கு எதிர்ப்பாளராகக் கருதப்பட்டார்.

இந்த நிலையில், அவர் துருக்கி நாட்டுப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினார். அவருக்கு அந்நாட்டுச் சட்டப்படி முன்னாள் மனைவியிடமிருந்து முறைப்படியான விவாகரத்து பெற்றதற்கான ஆவணங்கள் தேவைப்பட்டன.

அதனைப் பெறுவதற்காக துருக்கியின் தூதரகத்துக்கு 2018 அக்டோபர் 2 அன்று சென்றார். அதற்குப் பிறகு அவர் திரும்பவேயில்லை.

இந்தச் சம்பவம் உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பல்வேறு நாடுகளில் இந்த அநியாயத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. என்றாலும் சவூதி மௌனம் காத்தது.

சவூதி அனுப்பிய ஆட்கள் தூதரகத்துக்குள் அவரைக் கொன்று விட்டதாகவும், கருப்பு நிறக் காரில் அவரது உடலை வெளியே எடுத்துப் போனதாகவும் துருக்கி கூறி வருகிறது. ஆனால் அந்தக் குற்றச்சாட்டை சவூதி அரேபியா கடுமையாக மறுத்து வந்தது.

செய்தியாளர் ஜமால் கஷோகி சவூதி அரேபியத் தூதரகத்துக்குள்ளேயே கொல்லப்பட்டதை நிரூபிக்கும் வீடியோ மற்றும் ஆடியோ பதிவுகள் துருக்கி அதிகாரிகளிடம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

அங்கு ரகசியமாகப் பதிவு செய்யப்பட்ட ஆடியோவில் சவூதியிலிருந்து வந்திருந்த ஆள்கள் கஷோகியிடம் விசாரணை நடத்தும் உரையாடல்களும், அவரை அடித்துத் துன்புறுத்தும் சத்தமும் இடம் பெற்றுள்ளன எனத் தெரிகிறது. கஷோகியை அந்த இடத்திலேயே படுகொலை செய்த சவூதி ஆள்கள் அவரது உடலைத் துண்டு துண்டாக வெட்டி அங்கிருந்து அப்புறப்படுத்தியதாகவும் தெரிகிறது.

இந்த ஆதாரங்களை உடனடியாக வெளியிட்டால் சவூதி அரேபியத் தூதரகத்தில் துருக்கி வேவு பார்த்து வந்த விவகாரம் வெளியே தெரிந்துவிடும் என்பதால் அவற்றை வெளியிடுவதற்குத் துருக்கி தயக்கம் காட்டி வருவதாகவும் ஊடகத் தகவல்கள் கூறுகின்றன.

இதுபற்றி அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், "இது தொடர்பாக நாங்கள் தீர விசாரிப்போம். சவூதி அரேபியா மீதான குற்றச்சாட்டு நிரூபணமானால் அந்த நாட்டுக்கு மிகக் கடுமையான தண்டனை விதிக்கப்படும்" என்று எச்சரித்தார்.

ஆரம்பத்தில் சவூதி அரேபியா இந்தக் குற்றச்சாட்டுகளைக் கடுமையாக மறுத்து வந்தது. தொடர்ந்து உலகம் முழுவதும் நெருக்கடி அளிக்கப்பட்டதால் வேறு வழியில்லாமல் 18 நாள்களுக்குப் பிறகு உண்மையை ஒப்புக் கொண்டது.

இந்த விவகாரம் தொடர்பாக சவூதி அரசு 18 பேரைக் கைது செய்துள்ளதாகவும், விசாரணை நடப்பதாகவும் கூறியுள்ளது. அந்த 18 பேரையும் விசாரணைக்காகத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று துருக்கி அதிபர் எர்டோகன் வலியுறுத்தியுள்ளார்.

**“**

**உயிருக்குப் பயந்து நாட்டை விட்டே வெளியேறிய ஒரு தனிமனிதனைத் தீர்த்துக் கட்டுவதற்கு ஓர் அரசாங்கம் திட்டமிடுகிறது. ‘எங்குச் சென்றாலும் விடமாட்டோம்’ என்று தொடர்ந்து சென்று துரத்துகிறது. நாடு கடந்து வேற்று நாட்டுக்குள் புகுந்து வேட்டையாடுகிறது.**

**”**

எனினும், கஷோகி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டவர்களிடம் சவூதி அரேபியாவில் தான் விசாரணை நடைபெறும் என்று அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் அடில் அல்-ஜுபேர் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். இந்தச் சூழலில் இந்த விவகாரம் பற்றி சவூதி அரேபியா மற்றும் துருக்கி தலைமை வழக்கறிஞர்கள் தற்போது ஆலோசனை நடத்தியுள்ளனர்.

செய்தியாளர் கஷோகி படுகொலையில் சவூதி இளவரசர் முகமது பின் சல்மானுக்குத் தொடர்பு உள்ளது என்று அமெரிக்கப் புலனாய்வு அமைப்பான சிஐஏவின் விசாரணை முடிவுகள் தெரிவிப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதுபற்றி சிஐஏ வட்டாரங்களை மேற்கோள் காட்டி அமெரிக்காவில் இருந்து வெளியாகும் ‘வாஷிங்டன் போஸ்ட்’ நாளிதழ் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

சவூதி அரசின் 15 அதிகாரிகள் அரசுக்குச் சொந்தமான விமானத்தைப் பயன்படுத்தி துருக்கியில் உள்ள இஸ்தான்புல் நகருக்குச் சென்றதாகவும், பிறகு துணைத் தூதரகத்துக்கு வந்திருந்த கஷோகியை அவர்கள் படுகொலை செய்ததாகவும் சிஐஏ விசாரணையில் தெரியவந்துள்ளது.

எனவே இந்தப் படுகொலை சவூதி பட்டத்து இளவரசருக்குத் தெரியாமல் நடந்திருக்க வாய்ப்பேயில்லை என்று அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகள் முடிவுக்கு வந்துள்ளனர் என்று அந்த நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், கஷோகி படுகொலை தொடர்பாக சவூதியில் நடைபெற்று வந்த வழக்கில் 11 பேரைக் குற்றவாளிகளாக அந்த நாட்டு நீதிமன்றம் கடந்த நவம்பர் 15 அன்று அறிவித்தது. அவர்களில் 5 பேருக்கு மரணதண்டனை விதிக்க வேண்டும் என்று அரசுத் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் படுகொலையில் பட்டத்து இளவரசருக்குத் தொடர்பு இல்லை என்றும், சவூதி புலனாய்வு அமைப்பின் துணைத் தலைவர் அகமது அல்

அசிரியும், குழுவின் தலைவரும்தான் கஷோகியைக் கொலை செய்ய உத்தரவிட்டனர் என்றும் சவூதி அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அதற்கு நேர்மாறாக அமெரிக்கப் புலனாய்வு அமைப்பின் விசாரணை முடிவுகள் தெரிவிக்கின்றன. இந்தத் தகவல் உலகில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சவூதி அரேபியா தொடர்ந்து மறுத்து வந்த போதும் பத்திரிகை உலகம் அதனை ஏற்றுக் கொள்வதாக இல்லை.

செய்தியாளர் கஷோகி படுகொலை செய்யப்பட்ட நிகழ்வு உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. ஓர் அரசாங்கமே திட்டமிட்டு இந்தப் படுகொலையை அரங்கேற்றியுள்ளது. ‘எங்களை எதிர்ப்பவர்களுக்கு இதுதான் தண்டனை!’ என்று ஊடகவியலாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உயிருக்குப் பயந்து நாட்டை விட்டே வெளியேறிய ஒரு தனிமனிதனைத் தீர்த்துக் கட்டுவதற்கு ஓர் அரசாங்கம் திட்டமிடுகிறது. ‘எங்குச் சென்றாலும் விடமாட்டோம்’ என்று தொடர்ந்து சென்று துரத்துகிறது. நாடு கடந்து வேற்று நாட்டுக்குள் புகுந்து வேட்டையாடுகிறது. சர்வதேசமும் மதித்துப் போற்றும் சமாதானப் பாசறையான ஒரு தூதரகம் கொலைக்களமாக மாறியுள்ளது.

தூதரகத்துக்குள் வந்த செய்தியாளருக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டு அவர் கொல்லப்பட்டுள்ளார். பிறகு அவரது உடல் பாகங்கள் வெட்டப்பட்டன. அந்த உடல் துருக்கியைச் சேர்ந்த ஒருவர் மூலம் வெளியேற்றப்பட்டது. இவ்வாறு சவூதி அரேபிய செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் படுகொலை விவகாரம் தொடர்பாக சவூதி அரேபியாவைச் சேர்ந்த 18 அதிகாரிகளுக்குத் தடைவிதிக்க ஜெர்மனி முடிவு செய்துள்ளது. இது பற்றி அந்நாட்டு வெளியுறவுத் துறையமைச்சர் ஹீக்கோமாஸ், பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸெல்சில் கூறியுள்ளார்.

இந்தப் படுகொலையில் தொடர்புடையவர்கள் எனச் சவூதி அரேபியாவைச் சேர்ந்த 18 அதிகாரிகளை அந்நாடு கண்டறிந்துள்ளது. இன்னும் இந்த விவகாரத்தில் உண்மையைக் கொண்டு வருவதற்கு பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் பிற ஐரோப்பிய யூனியன் நாடுகளுடன் இணைந்து மேற்கொண்டு வரும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

“உண்மையை எவ்வளவு ஆழத்தில் புதைத்து வைத்தாலும் அது ஒருநாள் பூமியைப் பிளந்து கொண்டு வெளியே வரத்தான் செய்யும். அப்போது அதன் ஆற்றல் எல்லா எதிர்ப்புகளையும் தூள் தூளாக்கி விடும்” என்றார் அறிஞர் எமிலிஜோலா.

செய்தியாளர் ஜமால் கஷோகியின் படுகொலையும், விசாரணையும் அதை நோக்கியே நகர்ந்து கொண்டிருக்கின்றன. உலகம் அவர் பின்னால் இருக்கும்வரை உண்மையை யாராலும் ஒளித்து வைக்க முடியாது. ●


## நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடுகள்




**பழந்தமிழில் சொல்லியல் சிந்தனைகள்**

**முனைவர் ச. சுபாஷ் சந்திரபோஸ்**

விலை : ₹ 160/-

தமிழ் மொழியின் அமைப்பை அறிந்துகொள்ள மொழியியல் என்னும் ஒளி தூண்டுகோல் இல்லாமல் ஆராய முடியாது என்னும் நிலை ஏற்பட்டுள்ளதன் அடிப்படையில் இலக்கண மொழியியல் அறிவியல் ஆய்வு சார்ந்து எழுதப்பட்ட நூல்.




**பழந்தமிழில் காலங்கள்**

**முனைவர் ச. சுபாஷ் சந்திரபோஸ்**

விலை : ₹ 160/-

தமிழ் இலக்கியச் சான்றுகள், உரையாசிரியர்களின் சிந்தனைகள், திராவிட மொழியியல் கோட்பாடுகள் போன்றவற்றின் அடிப்படையில் காலத்தை மிகவும் விரிவாக விளக்கிச் செல்கிறது இந்நூல்.


விருத்தாசலத்தில்
மிகப்பிரம்மாண்டமான
1ம் ஆண்டு
புத்தக கண்காட்சி
- 2018
26/12/2018 முதல் 30/12/2018 வரை
காலை 11 மணி முதல் இரவு 8.30 மணி வரை
இடம் : மக்கள் மன்றம்
ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம்.
கலை, அறிவியல், கணிதம், ஜோதிடம்,
வரலாறு, சமையல் குறிப்புகள், ஆன்மீகம்,
சிறுவர்களுக்கான புத்தகங்கள்
என அனைத்தும் ஒரே இடத்தில்...
அனைத்து புத்தகங்களுக்கும்
10% தள்ளுபடி...
அமைப்பு
தடயம் பப்ளிகேஷன்ஸ்
விருத்தாசலம்
தொடர்புக்கு தடயம் பாபு : 93600 20397
அனுமதி இலவசம்

நூல் மதிப்புரை

# அலைவு இலக்கியம் பற்றிய அலசல்

## சுப்ரபாரதிமணியன்

ஈழப்பிரச்சினைக்குப்பின் உலகம் முழுவதும் பரவி வாழும் தமிழர்களின் படைப்பிலக்கிய முயற்சிகளால் தமிழ் இலக்கியப் படைப்புகளில் புலம் பெயர்ந்தோர் இலக்கிய வகை காத்திரமான இடத்தை அடைந்துள்ளது. அது ஒரு வகையில் ஈழத்துத் தமிழிலக்கிய மரபின் தொடர்ச்சியாக விளங்குகிறது. ஆரம்பத்தில் டொமினிக்ஜீவா, டேனியல், செ.கணேசலிங்கன், கைலாசபதி, கா.சிவத்தம்பி போன்றோரே அறியப்பட்ட நிலையில் இன்றைக்கு எண்ணற்ற படைப்பாளிகள் எழுதி வருகிறார்கள். புலம்பெயர்ந்த இலக்கியத்தின் ஆரம்ப கால முயற்சிகளின் தேடலை காலனி ஆட்சியிலிருந்து தொடங்கி இந்நூற்றாண்டின் தீவிரமான முயற்சிகள் வரை அறிமுகப்படுத்தும் நூலாக இது விளங்குகிறது. இதில் புலம்பெயர்ந்தோரின் கவிதைகள், சிறுகதைகள் மூலம் அவர்களின் புலம் பெயர்வு வாழ்க்கை பற்றிய இலக்கியப் படைப்புகளை பேரா. ஆனந்தகுமார் எடுத்துக்காட்டுகிறார். நாவல் பற்றியக் குறிப்புகள் இந்நூலில் இல்லை. அது விரிவான தளம்.

புலம்பெயர்ந்தோர் கவிதைகளில் அயல்நிலம், தாய்நிலம் என்ற கண்ணிகள் விரவிக்கிடப்பதை பல கவிதைகளின் மூலம் எடுத்துக்காட்டியிருக்கிறார். அகதிகளின் வாழ்நிலை அதில் முக்கியப்பங்கு வகிக்கிறது. பல நாடுகளில் அடிமைத்தனமும் நிறவெறியும் அவர்களைச் சிறுமைப்படுத்தியிருப்பதை மேற்கோள்கள் மூலம் காட்டுகிறார். இதில் பெண்ணுரிமை சார்ந்த குரல் குறிப்பிடத்தக்கதாயும் விளங்குகிறது. இந்த வகையில் வ.அய்.ச.ஜெயபாலன், கலாமோகன், தீபச்செல்வன் முதற்கொண்டு தமிழ்நதி, மல்லிகா வரை பலரின் கவிதைகள் இடம்பெற்றிருக்கின்றன.

புகலிட இலக்கியத்தில் (அலைவு இலக்கியம்) சிறுகதைகளின் பங்கு முக்கியமானது. அவை யதார்த்தப் பாணி, பின்நவீனத்துவப்பாணியில் அமைந்திருப்பதை வகைப்படுத்துகிறார். படித்தவர்களாக இருந்தாலும் கூலி உழைப்பில் அவர்கள் ஈடுபடுவதைச் சுட்டிக் காட்டுவது ஒரு முக்கிய அம்சம்.

நாடு, தெருக்கள் அல்லாத மிதவை வெளியில் அவர்கள் வாழ்கிறார்கள் என்கிறார் ஆசிரியர்.

புலம்பெயர்ந்தவர்களின் தேசியம் மற்றும் சமீபத்திய நாடு கடந்த தேசியம் பற்றிய அவதானிப்புகளும் இதில் உள்ளன.




**புலம் பெயர்ந்தோர் இலக்கியம்**

(பனுவல்களும் மதிப்பீடுகளும்)

முனைவர் பா.ஆனந்தகுமார்

*வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,*
*41- பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்*
*அம்பத்தூர், சென்னை - 600 098.*

*தொலைபேசி எண்: 044 - 26359906*

விலை : ₹ 80.00

நாவல் பற்றியக் குறிப்புகள் இந்நூலில் இல்லை. இதோடு தொடர்புடைய மீரான் மைதீனின் நாவல்களில் இந்த அம்சங்கள் இருப்பதை ஊடாகக் காட்டுகிறார்.

இந்த வகையில் கலாமோகன் முதற்கொண்டு அ.முத்துலிங்கம், மாத்தளை சோமு வரை பலரின் சிறுகதைகள் இடம்பெற்றிருக்கின்றன. போர்ச் சூழல், அகதி வாழ்க்கை, கயறு நிலை போன்றவற்றை அவை கோடிட்டாலும் அ.முத்துலிங்கத்தின் சிறுகதை லவுகீக வாழ்க்கையில் அதன் தாக்கம் பற்றிய மாறுபட்ட பார்வையைச் சொல்கிறது. மாத்தளை சோமுவின் சிறுகதையில் தோட்டத்தில் உழைத்து அங்கேயே செத்தவர்களைப் புதைப்பதற்கு இடம் தேடும் அவலம், தமிழர்களின் அவலக் குறியீடாய் இன்னொரு கோணத்தில் அமைந்திருக்கிறது.

1980-ல் மதுரை அமெரிக்கன் கல்லூரியின் பாடத் திட்டத்தில் இடம்பெற்ற போத்திரெட்டியின் “அயல் இலக்கியம் நூல்” ஆரம்ப முயற்சி. அதன் நீட்சியாகவும் ஆழமாகவும் தீவிரமாகப்பயணப்பட்டிருக்கிறது இந்நூல். அந்த வகையில் கவிதை, சிறுகதை தவிர்த்து நாவல், நாடகம், சுயசரிதம் உட்பட பல பிரிவுகள் பற்றியவை இந்நூலில் இடம்பெறவில்லை. ●

# திருவள்ளுவர் கால யவனர் மெய்யியல்

(திருவள்ளுவராண்டு 450 முடிய)

கி. முப்பால்மணி

### முப்பக்க பரிணாமம்

தமிழகத்துக் குமரிமுனை, வைகை, அமராவதி, நொய்யல், காவிரி, பாலாறு, கிருஷ்ணா, கோதாவரி, மகாநதி, நர்மதை, கங்கை கொண்ட ஒருபக்கம்; கங்கை, சிந்து, யூப்ரடீஸ், டைகரிஸ் சார்ந்த பகுதிகள், அரேபியா, எகிப்து, கிரேக்கம், ரோம் ஆகிய பகுதிகள் கொண்ட ஒரு பக்கம்; மத்தியதரைப் பகுதி, செங்கடல், பாரசீக வளைகுடா, சிந்து முகத்துவாரம், கட்ச் பகுதி கடந்து கேரளக்கரை, குமரி முனை ஒரு பக்கம் என்ற முப்பக்கங்கள் கொண்ட இந்த ஆசியப் பகுதி கி.மு.600 தொட்டே வணிகப்பெருவழிகளாலும், கடல் பயணங்களாலும், இணைப்புண்டு இருந்தது. இது சிறப்பாகக் கருதக்கூடியது, யூதர், கிரேக்க-யவனர், எகிப்தியர், சிரியர் ஆகியோர் வாணிகப் பெரு வழிகளாலும், கடல் பயணங்களாலும் இணைப்புண்டு; யூத, அரேபிய மற்றும் வேதஆரியர், குஷான, மௌரிய, தக்காணம், தமிழகம் சார்ந்த சிந்தனைகள் ஊடாட்டம் கொண்ட நிலப் பகுதி இது. இங்கே விளை பொருள்கள், இயற்கைப் பொருள்கள், வாணிகப் பொருள்களாகிக் கண்ட போக்குவரவு, படைவீரர் அணிவகுப்பு. மருத்துவர், அறவோர், சாதுக்கள், நாடோடிகள், கலைஞர், கைவினைஞர், தொழில் நுட்பவியலாளர் இவர்களோடு மகளிர் நடமாட்டம் நிலையாக இருந்தது, அரசுகள் மாறலாம். இது மாறாமல் பொலிவுடன் விளக்கம் கொண்டு வாழ்ந்தது.

யூத, கிரேக்க-யவன, எகிப்திய சிந்தனைகள், வைதீக சிந்தனைகள், சமண, பௌத்த சிந்தனைகள், உலகாயதம், நாட்டார் வழக்காறுகள் ஆகியன தமக்குள் ஊடாட்டம் கொண்டு கருத்தியல்களையும், தத்துவங்களையும் உருப்படுத்திக் கொண்ட நிலப் பகுதியாகும். மனிதர்கள், பொருள்கள், சிந்தனைகள் பிரிக்க முடியாதவை, கைபிணைந்து உடன் செல்பவை, தமிழகத்தின் சங்க காலம் என்ற காலப்பகுதியில் இந்தப் பெருவழிகள் கொண்ட நிலம், பயணங்கள் கொண்ட கடல் பகுதிகளோடு தமிழக மக்களும், பொருள்களும், சிந்தனைகளும் இணைந்து விளங்கின. சங்க காலம் தொடர்பாக யவனர் காசுகள், யவனத் தேறல், யவன வீரர், யவன வாணிகர், யவனக் காவலர், யவனர் சேரிகள், கோவில்கள் பற்றிய தொல் பொருள் ஆதாரங்களும், குறிப்புகளும் சிறப்புடையன. மேற்குக் கரையில் இறங்கிய பலமொழி வணிகர் கரூர், புகார், மதுரை, காஞ்சி, புதுவை நகரங்களில் குடியிருப்புகள் அமைத்து வாழ்ந்தனர். அவர் தமது வாணிகப் பொருள்களுடன் தமது சொந்த நாட்டில் நிலவிய சிந்தனைகள், கருத்தியல்கள், மெய்யியல்களையும் கொண்டு இருந்தனர். ரோமப் பேரரசின் பின்னணியில் இது நடந்தது. இதனுடன் கூடவே, மௌரியப் பேரரசின் முன், பின் காலங்களில் கங்கைப் புறத்துடனான வாணிபமும் விளக்கம் கொண்ட ஊடாட்டமானது. தமிழகத்தில் வேட்டை, மேய்ச்சல், உழவு சார்ந்த வாழ்வு நிலைமைகளில் பாதிப்பை ஏற்படுத்தி அரசு சார்ந்த வாழ்வு உருவாவதில் பங்கு பெற்றன. அப்போது அரசு, வாணிக உலகில் அசோகர் தொடங்கி இந்தியப் பேரரசர், அகஸ்டஸ் (கி,பி, 15) தொடங்கி ரோமப் பேரரசர் தமிழகத்தில் தொடர்ந்து பேசப்பட்டனர். வாணிக உலகில் செங்கடல் பகுதியில் பெர்நிகே, குவாசிர்-அல்-காசிம் துறைமுக நகரங்களில் கிடைத்துள்ள பானை ஓடுகளில் உள்ள கோற்பூமான், கண்ணன், சாத்தன் பெயர்கள் தமிழகப் பொருள்களை அங்குக் கொண்டு சென்ற வாணிகர்களின் பெயர்களாகும். இந்தத் தரவுகள் தமிழகம்-யவனம் கருத்தியல் ஊடாட்டத்தைப் புலப்படுத்துவன ஆகும்.

### சமூகநிலை

திருவள்ளுவர் மருதத் திணையாம் உழவைச் சிறப்பித்து உயர்த்தினார். நெய்தல் மற்றும் பாலைத் திணைகளின் வேட்டை வாழ்வைப் போற்றவில்லை. முல்லைத் திணையாம் கால்நடை மேய்ப்பு வாழ்வைப் பயன் தருவாழ்வு என்ற அளவில் மட்டும் அனுசரித்தார். குறிஞ்சித் திணையின் உணவு சேகரிப்பு வாழ்வைவிட பொருளின் உற்பத்தியையும், பொருளாகிய முதலினால் வரும் ஊதியத்தையும் மேல்நிலையாகப் போற்றினார். அதன் பொருட்டு, கால்நடை நாடி மற்றும் மண் நாடிப் போரிடும் வெட்சி, வஞ்சி மற்றும் உழிஞைத் திணைகள் சார்ந்த சிறுகுடித் தலைமைகளைத் தவிர்த்து விட்டுக் கொடுங்கோன்மை அற்ற பேரரசினை / வேந்தனை விவரித்தார். தொல்காப்பியப் புறத் திணைகளில் பேசப்படாத வாணிகத்தில், நடுவு



நிலைமை கொண்ட பொருள் வாணிகத்தைப் போற்றினார். இது திருவள்ளுவர் கண்ட புதுமை. அப்போது தமிழகத்தில் பலநாட்டு வாணிகர்களின் காசுகள் புழக்கத்தில் இருந்தன. திருவள்ளுவர் அகத்திணை என்றில்லாமல், அகம் என்பதில் காதல்-காமத்தை இன்பத்துப்பாலில் தனியாகக் கையாண்ட படி, உள்ளத்து அகவய உணர்வை அறத்துப்பாலில் முன்னிலைப்படுத்தினார். இவர் காலத்தில் உபரி விளைச்சல் இயற்றும் உழவு, இலாபம் ஈட்டும் வாணிபம், அதிகாரம் கொண்ட அரசு வேர் விட்டுச் சமூகநிலையில் உறுதிப்பட்டு இருந்தன. இரத்த உறவு நிலையில் அமைந்த இனக்குழுமுறை வாழ்நிலையை விட, குடிப் பிறப்பமைந்த பரம்பரைக் குலமுறை வாழ்நிலை போற்றுதலுக்கு உட்பட்டது. இந்தக் குலமுறை வழியில் அமைந்த உழவு, வாணிபம், அரசுநிலையில் தோன்றியவர் நற்குடிப் பிறந்தோர் ஆவர். இந்த நற்குடியில் பிறந்த ஒருவர் தமக்குத் தாமே எடுக்கும் சுயமுடிவுகளுடன், அவற்றைத் திருத்திக் கொள்ளும் மருத்துவராகவும் தனிப்பட்ட நிலையில் விளங்கினார் (பழமொழி.149). இனக்குழு சார்ந்தவர்(சிற்றில் பிறந்தோர், கீழோர், அடிமையர்) முடிவுகளை விட அரசவை, சான்றோர் கூட்டம், கற்றவர்குழு, மற்றும் மருத்துவர், கணியர், ஆசிரியர் வகுக்கும் முடிவுகள் சமூகவாழ்வுத் துறைகளில் ஆட்சி பெற்றன.

**தத்துவநிலை**

அன்றைய தமிழகத்தில் இலக்கணம், தத்துவம், தர்க்கம், சமயம், முக்தி சார்ந்த நூல்கள் வழக்கில் திகழ்ந்தன (சிறுபஞ்ச.86). இந்தப் பகுப்பானது சகாப்த முக்கியமானது. (இந்தத் துறைகளில் அன்று பயிலப்பட்ட நூல்கள் அனைத்தும் இன்று கிட்டாதது தமிழரின் தவக்குறையே). அப்போது தத்துவத் துறையில் அறுவகை நெறிகள் இங்கு வழக்கில் இருந்தன (ஏலாதி.75). அவை உலகாயதம், சாங்கியம், பௌத்தம், சமணம், நியாய-வைசேடிகம், மீமாம்சை என்பன ஆகும் (மணிமேகலை.27:289). நாலடியார் உலகநூல் என்றும், அறிவு நூல் என்றும் பகுக்கும் பகுப்பில், உலகநூல் தொகுப்பில் உலகுக்குரிய நூல் களையும், அறிவு நூல் தொகுப்பில் வீடுபேற்றிற் குரிய நூல்களையும் உட்படுத்திக் காட்டுவது சிறப்பமைந்தது (பாடல்.140). உலகுக்குரிய நூல் களாக இலக்கணம், தத்துவம், தர்க்கம் (மற்றும் அறம், நீதி, ஒழுக்கம், மரபு, அழகியல், இனக்குழு சார்ந்த பாலை, முல்லை, நெய்தல், குறிஞ்சி, உழைக்கும் மருதநில நாட்டார் வழக்கியல்) ஆகியன வற்றைக் கொள்ளலாம். இவைகளில் உலகாயதப் பொலிவு கொண்ட நூல்கள் வேர்கொண்டு நிலவின. வீடுபேற்றிற்குரிய நூல்களாகச் சமயம் மற்றும் துறவறவழியான முக்திநூல்களைக் கொள்ளலாம்.

இந்த நிலைமையில் திருவள்ளுவர் உலகியற்றி யான் என்றும், புறநானூறும், நற்றிணையும் உலகு படைத்தோன் எனவும் குறிப்பிட்டது சிறப்பாகக் கருதத்தக்கது (1062, 194, 240). உலகின் படைப்புக் கடவுள் பற்றி அப்போது தமிழகத்தில் வேதத்தை அனுசரித்த சைவரும், வைணவரும் (பரிபாடல், காரைக்கால் அம்மையார், முதலாழ்வார்கள்) மற்றும்

யவனரும் (யூதர், பாரசீகர், கிரேக்க-ரோமர், எகிப்தியர், அரபு-ஹனீப்கள். அந்தியோக் நகரத்துச் சிரியர்) உரைத்து வந்தனர். ஏலாதியும், மணி மேகலையும் குறிப்பிடும் ஆறுவகைத் தத்துவங்கள் படைப்புக் கடவுளைப் பற்றிக் குறிப்பிடவில்லை. மீமாம்சை வேதங்களைச் சிரமேற் கொண்டு, வேதச்சடங்குகளை மட்டுமே உச்சி மேற்கொண்டது கடவுளை அனுசரிக்கவில்லை. சாங்கியம், பௌத்தம், சமணம் ஆகியன பற்றற்றானையே உயர்வாக மதித்தன, உலகாயதம் பூதப்பொருள்களையே முதன்மையாகப் போற்றியது. அவை அனைத்தும் உலகுக் குரிய உலகியல் அணுகுமுறையின்பாற்பட்டவை.

வேதத்தை முதன்மையாகக் கொண்ட சைவ, வைணவங்கள் முறையே சிவனையும், திருமாலையும் படைப்புக் கடவுளராக மேம்படுத்திப் போற்றுவது அப்போது தொடங்கி இருந்தது. படைப்புக் கடவுள் தொல்காப்பியத்தில் இல்லை. புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் பேரரசுத் தலைவன் அந்த நிலையில் வைத்துப் பேசப்பட்டான். இனக்குழுக் கடவுளர் படைப்புக் கடவுளாக மேம்படுத்தப்பட வில்லை. படைப்புக் கடவுளைப் பரிபாடல் புலவர் களும், தொடக்க காலச் சைவ, வைணவ பக்தியாளர் களும் விவரித்துப் பாடினர். அவர்களது பாடல்களில் படைப்புக் கடவுளானது உலகுக்கும், பொருள் களுக்கும், இவற்றின் பண்புகளுக்கும் மற்றும் உடலுக்கும், உணர்விற்கும் வேறானதாக, அதீத மேலானதாக, அப்பாலானதாக விவரிக்கப்படுவது கவனிக்கத்தக்கது. அப்பாலான கடவுள் உலகையும், பொருள்களையும், பண்புகளையும், உடலையும், உயிரையும், உணர்வையும் படைத்த பின்பும் தனக்குத் தானாகவும், மாறாமலும், நித்தியமாகவும் இருக்கிறது. இதில், கடவுளுக்கு உயிர்கள் அடிமைத் திறம் பொலிய நிலவின என்பது சிறப்பானதாக இருந்தது. அதோடு தன்னால் படைக்கப்பட்ட பொருள்களின் உள்ளே குடிகொண்டு பண்பாகவும். உணர்வாகவும் உள்ளது. மேலும், அது பிறவாதது. உருவம் உடையது என உணர்த்திக் காரைக்கால் அம்மையாரும், முதலாழ்வார்களும் ஆழ்ந்த பக்தியுடன் பாடினர். அநேகமாக, இந்தியாவிலேயே சிவனும், திருமாலும் முதன்முதலாக படைப்புக் கடவுளாக விவரிக்கப்படுவது இவர்களாலேயே ஆக இருக்கலாம்.

தமிழகத்தில் யூத அரசனான முதலாம் அக்ரிப்பாவின் காசுகள் கண்டு எடுக்கப்பட்டுள்ளன. இவருடைய மகளான பெர்நிஸ் என்பவரை மார்கஸ் என்பவர் மணந்தார். இந்த மார்கஸின் தந்தை அலெக்சாண்டர். இவரது சகோதரர் பிலோ என்ற யூதஞானி ஆவார். (இவர்கள் மகா அலெக்சாண்டரின் பேரன்மார் ஆவர்). இந்த யூதஞானி இயேசு கிறித்துவின் சமகால மூத்தவர். இவர் தமது வாழ்நாளில் மோசஸ்ஸின் இறையியல் நூல்களுக்குத் தத்துவயியல் விளக்கங்களுடன் விரிவுரை செய்தார். யூத அரசனான முதலாம் அக்ரிப்பாவானவர், இயேசுவின் சீடரான புனித பேதுருவைச் சிறையில் அடைத்து, உயிரை நீக்கியவர் ஆவார். புனித பேதுருவின் காலத் தொடக்க நிலைக் கிறித்தவயியலில் தனக்கான சுயமான தத்துவ விளக்கங்கள் எவையும் அதனுள் விளக்கம் கொண்டு இருக்கவில்லை. ஸ்தோயிக் தத்துவக் கூறுகளே விளக்கம் கொண்டு இருந்தன. தமிழ்நாட்டில் கான்ஸ்டான்டைன் வெளியிட்ட சிலுவைக்காசுகள் கிடைக்கின்றன. இருந்தாலும், இந்த ரோமப் பேரரசர் இறுதிவரை கிறித்தவத்திற்கு மாற்றம் அடையாது, யூதராகவே இருந்தார். இவர் காலத்தில்தான் நிசேயே நகரத்து கிரிகோரியால் (கி.பி.331-394) கிறித்தவ இயலில் புதிய பிளாட்டேனியத் தத்துவ விளக்கம் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தத்துவ விளக்கத்தின் ஆசிரியர் அலெக்சாண்டிரிய

“

**புனித பேதுருவைச் சிறையில் அடைத்து, உயிரை நீக்கியவர் ஆவார். புனித பேதுருவின் காலத் தொடக்க நிலைக் கிறித்தவயியலில் தனக்கான சுயமான தத்துவ விளக்கங்கள் எவையும் அதனுள் விளக்கம் கொண்டு இருக்கவில்லை. ஸ்தோயிக் தத்துவக் கூறுகளே விளக்கம் கொண்டு இருந்தன. தமிழ்நாட்டில் கான்ஸ்டான்டைன் வெளியிட்ட சிலுவைக்காசுகள் கிடைக்கின்றன.**

”

நகரத்துப் பிளாட்டினஸ் (கி.பி.205-270) ஆவார். இவர் கிறித்தவர் அல்லர். கி.பி.47-இல் ரோமானியர் அலெக்சாண்டிரியாவைக் கைப்பற்றியபின் போகப் போக, கிரேக்க-யவனர் மற்றும் எகிப்தியர் தத்துவ யியல் அபாயகரமானதாக மதிப்பிடப்பட்டது. கி.பி.390-இல் தலைமை அருட்தந்தை தேவஃபில் அலெக்சாண்டிரிய நூலகத்திற்கு எரி ஊட்டினார். (கி.பி.529-இல் ஜஸ்டின் எல்லாக் கல்விநிலையங் களையும் மூடிவிட்டார்.) என்றாலும் பிளாட்டினஸ் வகுத்த தத்துவ விளக்கமானது கிரிகோரியால் கிறித்துவ இயலில் எடுத்துரைக்கப்பட்டுக் கான்ஸ்டான்டைன் கூட்டிய மகாநாட்டினில் (கி.பி.381) அதனாசியஸ் மற்றும் இசுபியஸ் அனைய அன்றைய கிறித்தவ ஞானிகளால் ஏகோபித்து மனமுவந்து ஏற்கப் பட்டது. இதன் ஒளியில் கிறித்துவின் வழியான மீட்சித் தன்மைக்கும், திரியேகத் தன்மைக்கும் அவர்

இலக்கணம் வகுத்தார். பிளாட்டினஸினுடைய தத்துவ இயல் அப்போதைய கிரேக்க-யவன உலகில் பொது விளக்கமாக ஏற்கப்பட்டு இருந்தது. அது கிறித்தவ ஞானியான கிரிகோரியையும் தாக்கம் கொண்டு இருந்தது. (இருந்தாலும் கிரிகோரியின் கிறித்தவ விளக்கம் அப்போது தமிழகத்தில் நிலவவில்லை.) யூதஞானியான பிலோவும், இவருக்குப் பின் வந்த பிளாட்டினஸுஂம் உரைத்த விளக்கங்களானவை, அப்பாலான படைக்கும் கடவுள் தத்துவத்தை மையப் படுத்தியவை ஆகும். இயற்கைக்கும் அறிவிற்கும், உடலுக்கும் உணர்விற்கும், பொருளிற்கும் பண்பிற்கும், புறத்திற்கும் அகத்திற்கும் வேறாக அப்பால் இருக்கும் கடவுளை இருவரும் உபதேசித்தனர். இந்தக் கடவுளானது பிறப்பு அற்றது. என்றும் தானாகவே இருப்பது. அதனை, படைக்கப்பட்ட பொருள் களாலும், உயிர்களாலும் அறியவும், உணரவும் முடியாது. படைக்கப்பட்ட இவைகளுக்கு உள்ளும் இந்தப் படைப்புக் கடவுள் குடிகொள்ளாது. அதீத மேலானதான தனிப்பட்ட ஒன்று.

இந்தப் பின்னணியில் திருவள்ளுவர் சுட்டும் உலகியற்றியான் என்ற கருத்தமைப்பானது நோக்கு வதற்கு உரியது. இந்தப் படைப்புக் கடவுள் பஞ்ச பூதங்களால், அணுக்களால் ஆனவன் அல்லன். ஆனால் அவன் பஞ்சபூதங்களை, அணுக்களை உண்டாக்கும் திறனுடையவன், ஆனால் அவன் உண்டானவன் அல்லன். பிறப்பை உண்டாக்குவான், பிறவாமல் செய்வான். ஆனால் அவன் பிறவாதவன், பிறவா யாக்கைப் பெரியோன் (சிலப்பதிகாரம் 8:169). அவனால் படைக்கப்பட்ட பொருள்கள் நிலையற்றன. ஆனால் அவன் நிலையானவன். அதே சமயம் தமிழகச் சைவ, வைணவ தொடக்க கால பக்தியாளர் பக்குவ உணர்வின்படி அவனால் படைக்கப்பட்ட பொருள்களின் உள்ளும் விளங்குபவன் ஆவான். அதே சமயம் உருவமும் உடையவன். அப்போது தமிழகத்திற்கு வந்து பலமொழி பேசி வாழ்ந்த செமித்திய யவனரது (யூதர், பாரசீகர், கிரேக்க-ரோமர், எகிப்தியர், அரபு-ஹனீப்கள், அந்தியோக் நகரத்து சிரியர்) உச்சநிலை உணர்வின்படி படைக்கப் பட்ட பொருள்களுக்குள் அந்தக் கடவுள் அடங்கி நிலவாதது. உருவமும் அற்றது. என்றாலும் அது எங்குமானது. பொருள்கள் அழிவன. ஆனால், அந்தக் கடவுள் அழியாதது. இந்த வேதமரபு மற்றும் செமித்திய மரபு ஆகிய இரண்டு வகைக் கருத்தியல் களையும் திருவள்ளுவரது உலகியற்றியான் கருத் தமைப்பு கொண்டு இலங்கியது. அவரது காலந் தொட்டு அப்பாலான கடவுளை முன்னிட்டுக் கொண்டு, முதன்மைப்படுத்தியபடி, புறநிலைப் பொருள்களை அணுகிஉணரும் அப்பாலையியல் அணுகுமுறையானது தமிழகத்தில் உருப் பெறத் தொடங்கியது. உழவின் உபரிஉரிமையும், கடல் மற்றும் தரைவழிகளால் பரந்துபட்ட நடுநிலை வாணிப இலாபமும், பேரரசின் மேல்நிலை அதிகாரமும் இதற்குப் பௌதிக அடிப்படைகளாக நிலவின. வேந்தன் மற்றும் அரசு தோன்றுவதற்குரிய தத்துவமாக, இந்த அப்பாலைப் படைப்புக் கடவுள் தத்துவம் விளங்கியது.

### பொருள் பற்றிய கோட்பாடுகள்

காலத்திற்கும் இடத்திற்கும் அப்பால், உலகுக்கும் பொருளுக்கும் அப்பால், பொருளுக்கும் உணர்ச்சி/ அறிவுக்கும் அப்பால், சொல்லுக்கும் - அர்த்தத்திற்கும் அப்பால், புறத்திற்கும் - அகத்திற்கும் அப்பால் எப்போதும் பிறவாத, நித்தியமான பரம் 'ஒன்று', இதிலிருந்து அறிவு (நூஸ்), இதிலிருந்து உலகு, ஆன்மாக்கள் தோன்றி இங்கு நிலவி வாழ்ந்து, மீண்டும் 'ஒன்று' நோக்கித் திரும்புகின்றன. பிறந்து, உண்டாகி வந்த ஆன்மா மற்றும் படைக்கப்பட்ட உலகு எதிலும் அந்த ஆதி காரணமான 'ஒன்று' பிரவேசித்துக் கலந்து விரவிக் குடி கொண்டிருக்கவில்லை. அந்த ஒன்று என்றும் அப்பாலானதே. ஆன்மாக்களுக்கு உலகுப் பொருள்கள் தீமையானவை. அநித்திய நிலைமைத் தன்மையன. அதே சமயம் ஆன்மாக்கள் சுயதீர்மானம், சுயசுதந்தரம் உடையவை. "ஒன்று" நோக்கி மீண்டாலும் ஆன்மாக்கள் சுயம் அழிவதில்லை (Enneads) இது யவனரது அப்பாலைத் தத்துவம். இஃது அவர்களது நாட்டினில் இன்றும் உண்டு,

### அகம் / காதற்காமம் பற்றிய கருத்தியல்

இந்த அகம் / காதற்காமம் என்பதானது பிள்ளைப் பேறு அல்லது சந்ததி தொடர்ச்சியின் முதல்கட்டம் ஆகும். அப்போது யவனரில் ஒரு பிரிவினரான கிறித்தவரிடையே எதிர்மறைப் போக்குகள் இருந்தன. அவற்றில் அப்பாலைத் தத்துவம் பொலிந்தவை முன்னிலை விளக்கம் பெற்று வந்தன. புனித பவுலுடைய கருத்தியல் பகுதிகளில், செனெகா, எபிக்தேது ஆகியோருடைய மெய்யியல் கூறுகள் இடம் பெற்றிருந்தன. புனித யோவானின் நான்காவது சுவிசேஷம் மத்திய பிளாட்டோனிய அப்பாலைத் தத்துவத்துடன் இணைப்புண்டு இருந்தது. பிறகு வந்த கிளிமெந்து, ஓரிகென், புனித அகுஸ்தின் மற்றும் கப்பதோசியன் அருட்தந்தையர் ஆகியோருடைய செல்வாக்கிற்குட்பட்டுச் சிரியன் கிறித்தவர் மெய்யியலில் விளக்கம் கொண்டிருந்ததாக ஆய்வாளர் கண்டறிந்துள்ளனர். ஞானியர் - Gnostic - மரபு புதிய பிளாட்டோனியத்தின் ஆழ்நிலை அகவயக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டிருந்தது.


அப்பாலைத் தத்துவத்தில் திருமண விலக்கு, மகளிர் பாலான வெறுப்பு, கூடவே ஆண்-பெண் காதற்காம உடலுறவு, சந்ததித் தொடர்ச்சி மறுப்பு என்ற இந்தக் கருத்தியல்கள் ஒளி விட்டன. இவை, மனிதவாழ்வானது நிலையாமை ஆனது, படைக்கப் பட்ட உலகு, உடல் மற்றும் புறப்பொருள் உறவு என்பவை துன்பம் தருவன, பாபமானவை, சிறைப் படுத்துவன, இதிலிருந்து விடுபட்டு உணர்வுக்கும், பொருளுக்கும், அகத்திற்கும், புறத்திற்கும் அப்பாலான தெய்வீகத்துடன் இணைய வேண்டும். அதுவே நிலையானது, தூய்மையானது, இன்பம் அளிப்பது என்பதான தத்துவத்தின் வலுவான பகுதிகள் ஆகும். இவை பிற்காலப் பிளாட்டோனிய சாயல் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

பிறப்பது முதல் இறப்பது வரையான வாழ்வை மட்டும் எடுத்துக் கொண்டு, அடுத்த சந்ததியைப் பிறப்பிக்காமல், பெண்ணோடு இணையாமல், இந்த உயிரானது (ஆன்மா) கடவுளிடம் இருந்து வந்தது, கடவுள் பிறவாதவர், பிறப்பை உண்டாக்கிச் சந்ததியைத் தோற்றுவிக்காதவர், அந்தக் கடவுள் போலவே பிறப்பிக்காமல் ஒழுகினால், அந்தக் கடவுளை அடையலாம். அதுவே உயிரின் உண்மையான, நித்தியமான நிலை எனக் கருதிக்கொண்டு துறவைப் பல இறையியல் ஞானிகள் போற்றினர். படைக்கப் பட்ட இந்த உலகோடும், உடலோடும் இருக்கும் இந்தச் சம்சாரநிலை (அகத்திணை) பாபம், தீமை என்ற விளக்கத்தை இதன் பொருட்டு மேற்கொண்டனர். இக்கொள்கைகள் கி.மு. 300 - 200 களில் சாக்கடலின் வடக்குப் பகுதியில் கும்ரான் ஓடை ஓரமாக இருக்கும் குன்றுக்குகைகளில் வாழ்ந்த எஸ்ஸின் துறவிக் குழுவினரிடம் விளக்கம் கொண்டிருந்தது. மனிதப் பிறப்பு என்பதே கிடையாது என்று பிறப்புத் தொடர்ச்சி மற்றும் சந்ததி விருத்திகளிலிருந்து விலகி வாழ்ந்த அவர்கள் வேதாகமங்களைப் போற்றிக் காத்தவர் ஆவார் (ச.கி. அருள்சாமி 2000:8). இந்த மாதிரியான துறவைப் பௌத்தத் தம்மபதமும், சமணத் தசவைகாலிக சூத்திரமும் அப்போது தம்முள் விளக்கப்படுத்தி இருந்தன. பழைய இனக்குழு வாழ்வு, கால்நடை மேய்ப்பு வாழ்வு, இருக்கும் போதே உழவு, வணிகம், அரசு தோன்றி காலூன்றும் போது பழைய சமூக நிலைமையினர் கடுந்துறவை உபதேசிப்பது அக்காலத்தின் பொதுத் தன்மையே. கும்ரான் மலைக்குகைத் துறவியர் வேதாகமக் கருத்தியல் வழியே கிறித்தவர் என்ற முறையில் சிரிய-நெஸ்தோரியர் நின்றனர். அகத்திணை என்ற இங்கிருந்த மக்களின் வாழ்வியலுக்கு மறுப்புக் கூறுவோராகவே அந்த யவனப் பிரிவினர் உரம் பெற்று நிலவினர்.

இவர் வழியில், பின்னாளில் புனிததாமஸ், தட்சசீல அரசகுடும்பத்தைச் சார்ந்த மிஸிதேயுஸ் என்ற அதிகாரியின் குலமகளிரிடம் திருமணமே பாபம், சிறை என்று உபதேசித்து அவர்களை இல்லற உறவுகளில் இருந்து விலக்கி வைப்பதில் வெற்றி கண்டார். இதுகண்ட அரசனான குண்டபோரஸ் அவரைத் தட்சசீலத்தில் வாளுக்கு இரையாக்கி விட்டார். பின்னாளில், அந்தியோக் நகரத்துச் சிரியன் கிறித்தவர் இவர் வழியினராகத் தம்மைப் போற்றிக் கொண்டனர். யூதஞானியான பிலோ, பெண் என்பவள் உண்டாவதற்கும், அழிவதற்கும் ஒதுக்கப் பட்டவள் எனக் கூறி, கணவனின் சிறப்பே மனைவிக்குப் போதுமான அணிகலன் என்று பெண்ணின் சுய இருப்பை மட்டுப்படுத்தினார். இப்படிப் பெண் தாழ்வாகக் கருதப்பட்ட (யூதர், அந்தியோக் நகரத்துச் சிரியர், கிரேக்க-ரோமர்) செமித்திய யவனச்சூழலில், கீழ்க்கணக்கு அறநூல் ஆசிரியர்கள் சம்சாரம், இல்லறத்தைப் போற்றியது சிறப்பாக உற்று நோக்குவதற்கு உரியது. திருவள்ளுவர் இன்பத்துப்பாலையும், இல்லறப் பெண்ணையும், மக்கட் பேற்றையும், சந்ததித் தொடர்ச்சியையும் மங்கலம் என உச்சத்தில் வைத்துப் போற்றினார். மேலும், தமிழக உலகாயத நெறியாளரும் அவர்களது நூல்களும் அவ்வாறே.

### புறம், பொருள் பற்றிய கருத்தியல்

உலகப் பொருள்களும், உடலும் பஞ்சபூதங் களால் ஆனவை என்று புறநானூறு பேசுகிறது. பஞ்சபூதங்களில் என்ன இயல்புகள், குணங்கள் உண்டோ, அவையே உடலுள் உள்ள அகத்திலும் உள்ளன. புறமும், அகமும் ஒத்தே நிலவுகின்றன என்பதே புறநானூற்று முரிஞ்சியூர் முடிநாகராயர் காலத் தமிழகக் கருத்தியல் (புறம்.2). பிறகு, புறத் திற்கும், அகத்திற்கும் வேறான, மேலான படைக்கும் கடவுள் (உலகியற்றியான்) தமிழகச் சிந்தனையில் வேர் கொண்டது. இங்குக் குடியேறிய யவனரில் ஒருசாரரான யூதரும், பாரசீகரும் தமது மரபுக்குரிய படைக்கும் கடவுளை இங்கும் தொடர்ந்து வழி பட்டனர். யூதஞானியான பிலோ, பொறி-புலன் களால் உணரப்படும் உலகியல் பொருள்கள் படைக்கப் பட்டவை ஆகும். மனிதனின் உணர்வும், மனமும் மிக உயர்ந்தவை, ஆனாலும், ஆன்மாவின் இந்தப் பகுதி மற்ற பொருள்களால் ஆக்கப்பட்டது அன்று. அதாவது, அகமானது புறப்பொருள்களால் ஆக்கப் பட்டது அன்று. இன்னும், ஒருபடி மேலே போய் அகம், புறம் இரண்டும் வேறுவேறு, முரண், பகை யானவை என்றார். கூடவே, அகமானது சுதந்தர மானதும் ஆகும். அதோடு பிற உயிர்களுக்கு இந்த



ஆன்மாவானது இல்லை. மனிதனுக்கே உண்டு. உடலுள்ளே ஆன்மாவானது இருப்பதை, உடலாகிய கல்லறையில் ஆன்மாவானது புதையுண்டு உள்ளது என விவரித்தார். உலகியலில் உள்ள படைக்கப்பட்ட பூதஉடலுள் ஆன்மா இருப்பதானது ஆன்மாவின் இயல்புக்கு மாறானதும் ஆகும். பஞ்சபூதப் பொருள் களும், உடலும், உயிருக்கு, உணர்விற்குப் பகை யானவை ஆகும். இவைகளின் உறவற்ற நிலையே உயிர்/உணர்வு/ஆன்மாவின் இயல்பான உண்மை நிலை ஆகும். அப்போது அது படைக்கும் கடவுளின் பக்கத்தில் நிலை கொள்ளுகிறது. இதுவே உயிரின் இலட்சிய நிலையான முக்தி இடம் ஆகும் என யூதஞானியான பிலோ கூறினார். இவருக்கு முன்பு இருந்த பாரசீகஞானியான ஜொராஷ்டரருடைய கருத்தியலும் இதுவே. பின்பு வந்த பிளாட்டினஸின் கருத்தியலும் இதுவே. பஞ்சபூதப் பொருள்கள் கடவுளால் படைக்கப்பட்டவை என்றாலும், அவை அழிவன இல்லை என்று பிளாட்டோவும், அரிஸ்டாட்டிலும் சொல்லினர். பிளாட்டினஸ் ஒருபடி மேலே போய்க் கூடுதலாக, பஞ்சபூதப் பொருள் களின் உறவானது உயிருக்குப் பாபமானது, தீமை யானது, எதிரானது, முரணானது என்றார். பொருளையும் உணர்வையும் எதிரித் தன்மைகள் ஆக்கி விவரித்தார். அப்பாலான, உருவமற்ற கடவுள், உருவமுள்ள பஞ்சபூதப் பொருள்களை மற்றும் உயிரை, உணர்வை, ஆன்மாக்களைப் படைத்தார். உயிர்களின் உண்மையான இருப்பு கடவுளின் அருகாமை ஆகும், ஆன்மாவானது படைப்புக் கடவுளின் அடிமை அன்று. சுயசுதந்தரம் உடையது. படைக்கப்பட்ட பொருள்களுடன் இருப்பதா? கடவுளைச் சேர்வதா? எனத் தீர்மானிக்கும் இயல்பு உடையது. பஞ்சபூதப் பொருள்களுடன் உடலுள் இருப்பது பாபமானது, பகையானது, தீமையானது என உணர்ந்து, இதிலிருந்து மீட்சி பெற்று, கடவுளை அடைதலே உண்மையான வாழ்வு. பொருளோடு, உடலோடு இருப்பதானது பொய்யானது என்றார். இதன் பொருட்டு, புறத்தில் இருந்து அகமானது தனியானது, வேறானது, சுதந்தரமானது என உறுதியாகக் கூறினார். அப்போது அலெக்சாண்டிரியா மற்றும் அதன் அறிவு ஆளுகை சூழ்ந்த இடங்களில் நிலவிய உலகாயதரையும், பலதெய்வக்காரரையும் எதிர்கொண்டே இப்படிக் கருத்தியலை வகுத்தார்.

அப்போதைய தமிழகத்தில் சாங்கியநெறியினர் மூலப்பிரகிருதி என்ற பொருண்மைநிலையில் இருந்து காரியப்பட்டு வந்த பஞ்சபூதப் பொருள்கள் உண்மையானவை. என்றாலும் காரியப் பொருள்கள் ஆதலால் நிலையாமை ஆனவை என்று கூறினர். அணுவியல்காரர்களான சமணரும், நியாய-

வைசேடிகரும் கூடப் பொருள்கள் நிலையற்றன, ஏனெனில், அவை உறுப்புகள், பக்கங்கள் கொண்டு இருக்கின்றன. அதாவது, மூலஅணு என்பது உறுப்புகள், பக்கங்கள் அற்ற ஒற்றையானது. இரண்டும், அதற்கு மேற்பட்ட அணுக்கள் கூடும்போது உறுப்புகள், பக்கங்கள் உண்டாகின்றன. அவை பிரிந்து நிலை அழிகின்றன. ஆகவே உறுப்பு, பக்கங்கள் உள்ள பொருள்கள் அழிகின்றன. ஆதலால் பொருளைத் துறந்துவிட்டு, நீங்கிப் பிறவாநிலை காண வேண்டும் என்றனர். பொருள்களின் அடிப்படையான பிரகிருதியும், அணுக்களும் நித்தியமானவை, அழியாதவை என்றனர். கடவுளியலாளர்கள் அப்பாலான கடவுளே நித்தியமானது, அழியாதது என்றனர். இதுவே அன்றைய சிறப்பு முரண்பாடு. இது இவர்களுக்கு உள்ளே ஊடாட்டம் நிகழ்த்தியபடி இருந்தது. இதன் பொருட்டு வாதப் பிரதிவாதங்கள் அன்று கற்றோர் அவைகளில் நிகழ்ந்தன (மலைபடுகடாம்.112). இப்படி வாதம் செய்தவர் புகழ் பெற்றனர் (சிறுபஞ்சமூலம்.56). (அப்படிச் செய்யப்பட்ட வாதங்கள் இன்று கிடைக்கப் பெறாதது தமிழரின் தவக்குறையே. என்றாலும் இலக்கியத் துறையில் கீழ்க்கணக்குநூல்களும், சிலம்பும், மேகலையும் கிடைத்து இருப்பது தவப்பயனே). பொருட்களின் நிலையாமை, உயிரின் பிறவாநிலை என்ற கருத்தியல்களையே திருவள்ளுவரும் மற்றும் அவர் காலக் கீழ்க்கணக்கு நூலாசிரியர்களும் உரைத்தனர். தனது பங்கிற்குத் திருவள்ளுவர் பற்றற்றானை மற்றும் பிறவாநிலையைப் பெரிதாகப் போற்றினார். என்றாலும் உயிர் என்ற பறவைக்கு நிலையான இடம் இல்லை போலும் என வினவினார் (நிலையாமை:10). ஆனாலும் திருவள்ளுவர் உலகியற்றியான் ஆன அப்பாலைக் கடவுள் கருத்தி யலைப் போற்றவில்லை. படைத்தோன் என்பவனைப் பக்குடுக்கை நன்கணியார், பண்பிலாளன் எனக் கடிந்து உரைத்தார் (புறம்.194). உலகியற்றியானனான படைப்புக் கடவுளை யவனர் மையப்படுத்திப் பேசினர். படைப்புக் கடவுளின் முன்னர் அகமும், புறமும் எதிர் எதிரானவை,

### பன்மை நிலைமை

இந்த உலகம் பல உயிர்களை, பலபொருள் களைக் கொண்டு நிலவுகிறது. இந்தப் பன்மைத் தன்மையானது மூலப்பிரகிருதி என்ற பொருண்மை நிலையில் இருந்து வந்தது எனச் சாங்கிய நெறியினர் கூறினர். மூலப்பிரகிருதி நித்தியமானது, பருப் பொருள் தன்மையது. உணர்வு அற்றது. உணர்வற்ற மூலப்பிரகிருதியில் இருந்து பஞ்சபூதப் பொருள்கள் உண்டாகி, அவைகளின் சேர்க்கையினால் இந்தப் பலவகையான சடப் பொருள்கள் உண்டாகி உள்ளன. இது சாங்கியர் கருத்தியல். பௌத்தரும், சமணரும், நியாய-வைசேடிகரும் அணுக்களின் சேர்க்கை என்றனர். பிரிக்கமுடியாதது அணு. அதில் பஞ்ச பூதங்களின் இயல்புகள் உண்டு. இந்த அணுக்கள் ஒன்றுடன் ஒன்று கூடும் போது இந்தப் பல வகையான சடப்பொருள்கள் உண்டாகி உள்ளன. உணர்வுப் பொருளான உயிர்/ஆன்மா தனியானது என்பன இவர்களது கருத்தியல். உருவமற்ற கடவுள் உருவம் உடைய சடப் பொருள்களைத் தனியாகவும், உயிர்ப் பொருள்களைத் தன்சாயலில் தனியாகவும் படைத்தார் என்பது யவனர் கருத்தியல். மற்றபடி, இவர்கள் அனைவரும் சடப்பொருளில் இருந்து சடப்பொருள் மட்டுமே உண்டாகும். உணர்வுப் பொருளில் இருந்து உணர்வுப் பொருள் மட்டுமே உண்டாகும். சடப்பொருளும், உணர்வுப் பொருளும் வேறு, வேறு என்பதில் ஒன்றுபட்டுத் திகழ்ந்தனர்.

உலகாயதர் பூதப்பொருள்களின் (மண், நீர், தீ, காற்று) சேர்க்கையினால் சடப்பொருள்கள் இவற்றில் இருந்து உணர்வுப் பொருள்கள் உண்டாகும் என்றனர். சேர்க்கையின் அளவு காரணமாகப் பலவிதமான பருப்பொருள்கள் உண்டாகி உள்ளன. கருப்பையில் இருந்த இரண்டு கருக்கள் பூதப்பொருளால் ஆனவை. உணர்வும், உயிரும் உடையவை. அவை வெளிவந்த பின் வேறு, வேறு பண்புகள் உடையனவாக வளர்ந்தன. ஒரே தன்மையனவாக இருக்கவில்லை (பழ.நா.231). யூதப்பொருள்கள் நித்தியமானவை. இவற்றின் சேர்க் கையில் பலவிதமான பருப்பொருள்களும் உண்டாகும் என்பது உலகாயத நெறியாளர் கருத்தியல்.

யவனர் (யூதர், பாரசீகர், அரபு-ஹனீப்கள்) ஒன்றுமற்ற ஒருநிலையில் இருந்து இந்த உலகப் பொருள்கள் உண்டாக்கப்பட்டு உள்ளன என்றனர். அத்தோடு மட்டும் அல்லாது புறப்பொருள்களும், அகவய உணர்வுகளும் எதிரிடையானவை. உலகியல் பொருள்கள் தீமையானவை, படைப்புக் கடவுளை அடைவதற்குப் பகையானவை என்றனர். இப்படியாக, புறமும், அகமும் வேறுவேறு, பகை, தீமை, முரண் என்ற கருத்தியல் வரலாற்றிற்குத் தமிழகத்தில் கட்டியம் கூறி வாழ்ந்தனர்.

### பொருளின் சுயசெயல்

பூதப்பொருள்கள் தாமே செயல்படுவன என உலகாயத நெறியினர் மற்றும் ஆசீவக, சாங்கிய, சமண, நியாய-வைசேடிக நெறியாளர் கூறினர். வான்வெளியில் கோள்கள் மற்றும் விண்மீன்கள் சுயமாகச் செயல்படுவதாக உறையூர் முதுகண்ணன் சாத்தனாரும், திருவள்ளுவரும் கூறினர் (புறம்.30. குறள்:1116). மேலும், திருவள்ளுவர் மழை பெய்வது

“

**உலகாயதர் பூதப்பொருள்களின் (மண், நீர், தீ, காற்று) சேர்க்கையினால் சடப்பொருள்கள் இவற்றில் இருந்து உணர்வுப் பொருள்கள் உண்டாகும் என்றனர். சேர்க்கையின் அளவு காரணமாகப் பலவிதமான பருப்பொருள்கள் உண்டாகி உள்ளன.**

”

நீரின் சுயசெயல் என்ற கருத்துடையவராக இருந்தார் (குறள்.17). மற்றபடி எல்லா கீழ்க்கணக்கு நூலாசிரியரும் குடும்பப் பொருளானது (சொத்தானது) தானே வரும், போகும் என்று சுட்டிக்காட்டினர். உலகியற்றியான் ஆன படைப்புக் கடவுளை ஏற்ற வைணவரும், சைவரும், யவனரில் யூதரும், பாரசீகரும், அரபு-ஹனீப்களும் கடவுளே பொருள்களைச் செயல்படச் செய்வதாக உரைத்தனர். பூதப் பொருள்கள் அறிவுணர்வு அற்றவை, சடப்பொருள்கள். ஆகவே அவைகளால் தாமே சுயமாகச் செயல்பட இயலாது என்று யவனக் கடவுளியலாளர்கள் பேசியபடி தமிழகத்தில் உலவினர்.

அப்போது யூதர், கிரேக்க - ரோமானியர், எகிப்தியர், பாரசீகர், அந்தியோக் நகரத் திருச்சபைத் தலைமை ஏற்றிருந்த நெஸ்தோரியச் சிரியன் கிறித்தவர், அரபு மக்கள் ஆகியோர் தத்தமது வழியில் தமக்குரிய வடிவில் அப்பாலைத் தத்துவத்தை மேற்கொண்டிருந்தனர். இதுவே இங்குத் தமிழகக் களத்தில் சிறப்பாக நோக்கத்தக்கது. தத்துவக் கருப்பொருள்களில் முன்னிலைப் பொருளாகக் கைக் கொள்ளுதற்குரியது. தமிழர்களுடைய பூதவாதம், ஐந்திணைப் பலதெய்வ வணக்கம், பௌத்த-சமண வழியான முக்திநிலை மற்றும் நான்மறையாளரது வேள்வி சார்ந்த அதிதெய்வங்களின் வழிபாட்டு நெறிகளுடன் யவனரது படைப்புக் கடவுள் கருத்தியல்கள் எதிர்நிலை ஊடாட்டம் கொண்டன. இதனால் கீழ்க்கணக்கு அறநூல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியன எழுந்தன. இந்த ஊடாட்டமானது, உருவம் இல்லாத கடவுள் உருவம் உள்ள பொருள்களைப் படைக்கிறது, உருவம் உள்ள கடவுள் உருவம் உள்ள பொருள்களைப் படைக்கிறது, வினை நீங்கினால் உலகத்து உச்சியில் இன்பமுடன் இருக்கலாம், பூதப் பொருள்களால் உலகம் ஆக்கப்பட்டு உள்ளது கருத்தியல்களில் குவிந்து பொலிவு கொண்டது (மணிமேகலை. 21:92-102). அதுகாலம் திருவள்ளுவர் ஆண்டு 450 ஆகும். யவனரும், சைவ-வைணவரும், சமணரும், உலகாயதரும் முறையே இந்தக் கருத்தியல்களைக் கொண்டு திகழ்ந்தனர். இதனால், புறமும், அகமும் ஒருங்கிணைந்தவை என்ற பூர்வீகக் கருத்தியல் (புறம்.2) குலைந்து புறம், அகம் எதிரிடையானவை என்பதான கருத்தியல் வரலாறு பிறந்தது. (அகம்) உணர்வானது முந்தியது, (புறம்) பொருளானது பிந்தியது என்ற தத்துவயியல் வரலாற்றில் இது ஒளி மிகுந்த பக்கங்களை வரைவது விரிந்து பெருகியது.


கௌடபாதகாரிகை, பிரகதாரண்ய உபநிடதம், பிரம்மசூத்திரம் கொண்டிலங்கும் வேதமரபின் அகவய அத்வைதம் கி.பி. 700 - 800 இல் விந்தியம் கடந்து வந்து இங்கு வேர் விட்டது. இதற்கும் ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே யவனர் காசுகள், பண்டங்கள், தேறல், மகளிர், வணிகர், படையாளர், தொழில் வினைஞர், போதகர் மூலமாக யவன-செமித்திய மரபின் அப்பாலைத் தத்துவம் அரபிக் கடல் கடந்து வந்து தமிழகத்தில் கால் ஊன்றிப் பரவி ஊடாட்டம் கொண்டது என்பதே இங்குக் கவனத்திற்கு உரியது.

**ஆதார நூல்கள்**


திருக்குறள் மற்றும் பிற கீழ்க்கணக்கு நூல்கள், சரகசம்ஹிதை, ஈஸ்வர கிருஷ்ணரின் சாங்கிய காரிகை, உமாஸ்வாதியின் தத்துவார்த்த சூத்திரம், காரைக்கால் அம்மையார் மற்றும் முதலாழ்வார்கள் பக்திப் பாடல்கள், ஆல்பர்ட் மனுவேல் என்பவரின் இறையியல் அணிந்துரை (தமிழ்), கௌதமரின் நியாய சூத்திரம், தம்மபதம், எம்.ஆர்.அப்பாதுரை, பிரசுரகர்த்தார், புரசை பாக்கம், சென்னை - 1952, தசவைகாலிக சூத்திரம், ஆர்ய சாயர்ணம்பவர் (கி.பி.429), கஸ்தூரி சந்த் (மொழி), கானடரின் வைசேடிக சூத்திரம்-பிரசஸ்த்தபாதர் உரை, தர்மகீர்த்தி-அகளங்கர் தர்க்கங்கள்-நாகின், ஜே.ஷா. எழுதிய விளக்கங்கள், யூதஞானி மோஸரின் தோரா (ஐந்து சுருள்கள்) அலெக்சாண்டிரிய பிலோவின் அனைத்து நூல்கள் தொகுதி, புனிததாமஸ்ஸின் செயல்கள் மற்றும் நற்செய்தி, பிளாட்டினஸ்ஸின் என்யிட்ஸ், மகாபாரசீகர் ஜொராஸ்டர் பற்றிய நூல், எஸ்.எம், ஜியோஃபிரெ கிரேஸ்டோன் என்பவரது சாக்கடல் சுருள்கள் மற்றும் கிறிஸ்துவின் சுயதன்மை, ஜே.என்.கெல்லி என்பவரது தொடக்கநிலைக் கிறித்தவக் கோட்பாடுகள், கிரிஸ்டோபர் ஸ்டெட் என்பவரின் பழங்காலக் கிறித்துவத்தில் மெய்யியல், டாக்டர் ஆர். நாகசாமியின் ரோமன்-கரூர் (ஆங்கிலம்), விவிலியம் வளர்ந்த வரலாறு, ச.இ. அருள்சாமி, நல்லாயன் கல்லூரி, மயிலேறிபாளையம், கோயம்புத்தூர் - 2,000.

●

# என்.சி.பி.எச்.சின்
# புதிய வெளியீடுகள்




**வரலாறு**
**சொல்லும் பாடம்**
**என்.முருகன் ஐ.ஏ.எஸ்.**
₹ 195/-





**தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட**
**வகுப்பினர் பட்டியல்**
**கோ. அருணாசலம்**
₹ 85/-





**குழந்தைகளை**
**வளர்க்காதீர்கள்**
**வளரவிடுங்கள்**
**எஸ்.குருபாதம்**
₹ 450/-




**இதுவா ஜனநாயகம்?**
**என்.முருகன் ஐ.ஏ.எஸ்.**
₹ 175/-




**Dictionary of**
**Art and Design**
Author : Raviraj
₹ 550/-




**சுற்றுச்சூழலும்**
**அழகியலும்**
**முனைவர் க.குளத்தூரான்**
₹ 175/-

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

புதிதாக வெளிவரும்
மதிப்பார்ந்த தமிழ், ஆங்கில
நூல்களுக்கான
அறிமுகங்கள், விமர்சனங்கள்...

கலை
இலக்கியம்
அரசியல்
தத்துவம்
மொழியியல் சார்ந்த
விவாதக் கட்டுரைகள்...

போன்றவற்றுடன்
பத்தாண்டுகளாக
தமிழில்
தொடர்ந்து வந்துகொண்டிருக்கும்
மாத இதழ்

ஆ. சிவசுப்பிரமணியன்
எஸ். வி. ராஜதுரை
ந. முத்துமோகன்
வீ. அரசு
எஸ். தோதாத்ரி
அ. மார்க்ஸ்
டாக்டர் சு. நரேந்திரன்
நா. ராமச்சந்திரன்
வ. கீதா
தி. சு. நடராசன்
பொன்னீலன்
யமுனா ராஜேந்திரன்
ராஜ் கௌதமன்
இரா. காமராசு
கி. ரா. சங்கரன்
ந. முருகேசபாண்டியன்
முதலான
மார்க்சிய, பெரியாரிய
சிந்தனையாளர்கள்,
கல்விப்புலம் சார்ந்த அறிஞர்கள்,
இலக்கிய ஆளுமைகளின்
பங்களிப்பில் காத்திரமாக
வெளிவந்துகொண்டிருக்கும்
மாத இதழ்

**தனி இதழ் ரூ. 30/-**
**ஆண்டுச் சந்தா ரூ. 360/-**
**மாணவர்களுக்கான சிறப்புச் சந்தா ரூ. 300/-**
**ஆயுள் சந்தா ரூ. 3000/-**

**சந்தா தொகையை New Century Reader's Sangam**
**என்ற பெயரில் அனுப்பலாம்**

New Century Readers Sangam | Central Bank of India, Ambattur
A/C No. 1035249018 | IFSC: CBINO282161

நூல் அறிமுகம்

# காஹா சத்தசஈ : சமயச் சார்பற்ற காதல் இலக்கியம்

முனைவர் ஆ.கார்த்திகேயன்

**ச**மயச்சார்பற்ற (secular) பழமையான பாடல்கள் முதன்முதலில் தமிழ் மொழியில்தான் தோன்றியிருக்கின்றன. அகத்திணைப் பாடல்களும் புறத்திணைப் பாடல்களும் நால்வேதங்களைப் போலவோ அல்லது மகாபாரதம், இராமாயணம் போலவோ சமயச் சார்பானவை அல்ல. அவை காதல் வாழ்வை, போர் வாழ்வைச் சித்திரிப்பவை. இல்லற வாழ்விற்கு ஏற்றம் தருபவை. இயற்கையை அரவணைத்துக் கொண்டு வாழ்வியல் பாதையில் பயணித்த பழந்தமிழரின் வரலாற்றுப் புதையல்கள். இத்தகைய சிறப்பு வாய்ந்த சங்கப் பாடல்களுக்கு அடுத்தாற்போல பிராகிருத மொழியில்தான் சமயச் சார்பற்ற இலக்கியங்கள் தோன்றி இருக்கின்றன. பிராகிருத மொழியில் தோன்றிய காஹாசத்தசஈ, வஜ்ஜாலக்கம் போன்ற தொகுப்புகள் சமயச் சார்பற்ற இலக்கியங்களாகும். பழந்தமிழ்ப் பாடல்களைப் போலவே, முறையே ஹாலர், ஜெயவல்லபர் ஆகியோரால் மேற்கண்ட பிராகிருத நூல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. செவ்வியல் இலக்கியத்தின் ஒரு முக்கியமான பண்பு அவை ஒரு காலத்தில் தொகுக்கப்பட்டு (anthology making) காலந் தோறும் ஓதப்பட்டும் போற்றப்பட்டும் வந்துள்ளன என்பதாகும். இவையும் செவ்வியல் இலக்கியங்கள் தான்.

காஹாசத்தசஈ, வஜ்ஜாலக்கம் ஆகிய இரு நூல்களுமே தமிழ் மொழியில் இராஜபாளையத்தைச் சார்ந்த தமிழறிஞர் மு.கு.ஜகந்நாதராஜா என்பவரால் ஏற்கெனவே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவரது மொழிபெயர்ப்பைத் தொடர்ந்து தற்போது காஹாசத்தசஈ 251 பாடல்கள் மொழிபெயர்க்கப்பட்டு அன்னம் (2018) வெளியீடாக வெளிவந்துள்ளது. இப்பாடல்களைக் காந்திகிராம பல்கலைக்கழகத்தைச் சார்ந்த சுந்தர்காளியும் அவரோடு பரிமளம் சுந்தர் என்பவரும் இணைந்து மொழிபெயர்த்துத் தந்து உள்ளனர். நூல் வடிவமைப்பு மிகவும் நேர்த்தியாக உள்ளது. காஹாசத்தசஈ நூலுக்கு ஓர் அறிமுகம் இடம்பெற்று உள்ளது. கங்காதரமூர்த்தியின் (சிவன் கங்கையைத் தலையில் தாங்கி வைத்துள்ள நிலை) சிற்பமொன்று அட்டைப்படமாக அமைந்துள்ளது. சிவனைக் குறியீடாக வைத்துப் படைக்கப்பட்ட விரசக் காதல் பாடல்கள் வஜ்ஜாலக்கத்தில் இடம் பெற்றுள்ளன. அவற்றை நினைத்துப் பார்க்கும்போது அட்டைப் படம் பொருத்தமாகவே காணப்படுகின்றது. இனி, மொழிபெயர்ப்பிலிருந்து ஒருசில பாடல்களைக் காணலாம்.

### தேனீக்கள்-ரீங்காரம்

தேனீக்கள் அகத்திணைப் பாடல்களில் தலைவனுக்குக் குறியீடாக அமையும். தலைவனின் பல்வேறு காதற் செயற்பாடுகளைப் புலவர்கள் தேனீக்களைக் குறியீடாக வைத்துப் புனைந்துள்ளனர். காஹாசத்தசஈ பாடல்களிலும் தேனீக்களைக் குறியீடாக வைத்து புனையப்பெற்ற பாடல்கள் ஒருசில காணப்படுகின்றன.

வெள்ளிய தாமரையின் இதழ்களில்
கள்ளுண்ட தேனீக்கள் அசையாது அமர்ந்திருக்கின்றன
கதிரவனின் கதிர்களால் மறைக்கப்பட்ட
சிறு கரும்புள்ளிகளைப் போல (பக். 95)

தலைவன் தலைவியிடம் பெறும் புணர்ச்சி இன்பத்தை உணர்த்தும் பாடலாக இது அமைந்துள்ளது. புணர்ச்சி இன்பம் பெற்ற தலைவன் அது கிடைக்காதபோதும் அதற்காக வந்து ஏமாந்து போவதை ஒரு பாடல் பின்வருமாறு உணர்த்துகிறது.

காய்ந்த மல்லிகைச் செடி வெற்றுக் குச்சிகளாய் நிற்கிறது.
தேனீக்களோ முன்பு அதில் மொக்குவிட்ட
மலர்மணத்தின் நினைவில்
அந்தச் செடியையே வலம் வருகின்றன

தலைவியை வீட்டுக்குள்ளேயே அடைத்துவிட்ட நிலையில் தலைவன் சென்று ஏமாந்துவிட வாய்ப்புள்ளதன்றோ? இன்னொரு பாடலில், தலைவன் தலைவியைப் பிரிந்து பரத்தமையை நாடுகின்ற இன்பம் தேனீக்களின் வழியாக உணர்த்தப்பட்டுள்ளது.

ஓ தேனீயே
ஒரு கணம் தாமரைகளை வலம் வருகிறாய்
மறுகணம் தொட்டாச்சுருங்கியைத் தொட்டு நீங்குகிறாய்
பிறகு மல்லிகையில் மொய்த்துக் கிடக்கிறாய்

ஒரு வேளை
ஊமத்தம் பூக்கள் மருந்தாகலாம்
உன் ஓடுகாலித்தன நோய்க்கு.

இவைபோன்ற பல பாடல்கள் காஹாசத்தசஈ மொழிபெயர்ப்பில் இடம் பெற்றுள்ளன. இவை யாவும் நம்முடைய சங்கப் பாடல்களோடு மீண்டும் மீண்டும் ஒப்பிட்டுக் காணத்தக்கவை. நம்முடைய சங்க இலக்கியங்களில் தேனீக்களின் வருணனை அகப்பாடல்களிலிருந்து புறப்பாடல்களுக்கும் சென்றுள்ளது. திருமுருகாற்றுப்படையில், அழகிய சிறகுகளையுடைய வண்டுகளின் பெருங்கூட்டம் தாமரைப் பூவில் இராப்பொழுதில் தூங்கி விடியற் காலத்தில் தேன் கமழும் நெய்தற் பூவிற் சென்று தேனையுண்டு சூரியன் உதித்த உடனே சுனையின்கண் உள்ள குவளைப் பூவில் சென்று ஒலிக்கும் (திருமுரு. 72-77) என்று வந்துள்ளது. இவ்வாறெல்லாம் ஒப்பிட்டுக் காண இம்மொழிபெயர்ப்பு நூல் நமக்கு உறுதுணையாக விளங்குகின்றது. ஆய்வுகளும் மேற்கொள்ளலாம்.

### நெஞ்சொடு கிளத்தல்

நமது அகத்திணைப் பாடல்களில் நெஞ்சொடு கிளத்தல் என்ற வகையில் பாடல்கள் ஏராளம். காஹாசத்தசஈயில் ஒருசில பாடல்கள் நெஞ்சோடு கூறுவது போல அமைந்துள்ளன. ஒரு பாடல்,

ஓ என் இதயமே
பற்றி எரிவதெனில் எரி
வெந்து போவதெனில் வேகு
உடைந்து சிதறுவதெனில் உடை
நானோ அன்பில்லாத அவன் உறவைத் துறந்துவிட்டேன்

(பக். 28)

என்று வருகிறது. துயரமும் ஆற்றாமையும் மேலிடுவதால் இத்தகைய கூற்றுகள் நிகழ்கின்றன. இன்னொரு பாடல்,

ஓ என் பதறும் இதயமே
திடீரென என்ன செய்யத் தொடங்கிவிட்டாய்
அப்போது நம் காதலர் புறப்படுகையில்
அவர் நாட்களின் வரம்பை ஒத்துக் கொண்ட பிறகு

(பாடல் 23, பக். 29)

திருவள்ளுவர் நெஞ்சொடு கிளத்தல் என்ற ஓர் அதிகாரமே படைத்துள்ளார். நெஞ்சொடு கிளத்தலாவது ஆற்றாமை மீதூரத் தனக்கு ஓர் பற்றுக்கோடு காணாத தலைமகள் தன் நெஞ்சொடு செய்திறன் அறியாது சொல்லுதல் என்று விளக்குகிறார். ஒரு தலைவி தன் காதல் நோயைத் தீர்க்கும் மருந்தொன்று உனக்குத் தெரிந்தால் எனக்குச் சொல் என்று தன் நெஞ்சிடமே கேட்கிறாள். அது மட்டுமன்று; 'நெஞ்சே நீ அவரிடம் சென்றுவிட்டாய். இந்த என் கண்களையும் கொண்டு சென்றுவிடு. அவை என்னைத் தின்கின்றன - அவரைக் காணும் ஆசையில்' என்றும் புலம்புகிறாள். இவ்வாறு தமிழ் இலக்கியப் பாடல்களோடு ஓராற்றல் ஒப்பிட்டுக் காணத்தக்கப் பாடல்களைக் காஹாசத்தசஈ மொழிபெயர்ப்பில் காணமுடிகின்றது.




**காஹா சத்தசஈ**
மொழியாக்கம்: சுந்தர் காளி, பரிமளம் சுந்தர்
*வெளியீடு: அன்னம் - அகரம் பதிப்பகம்*
விலை : ₹ 100/-

### கற்பனை நயம்

ஒப்பிடுதல் ஒருபுறமிருக்க, பிராகிருதக் கவிஞர்களின் கற்பனைத் திறனையும் படைப்பு உத்திகளையும் ஒருவாறு அறிந்துகொள்ள இந்த மொழிபெயர்ப்பு நூல் மிகவும் பயன்படும். ஒரு பாடலில் காஹா பெண்ணின் முலைகளோடு ஒப்பிடப்படுகின்றது. காஹா என்பது ஆசிரியப்பா போல ஒரு பாடல் வகை.

ஒரு பெண்ணின் முலைகளுக்கு மயங்காதார் யார்?
அவை
ஒரு கவிதையைப் போல
கைக்கொள்வதற்கு இனியவை
கனமானவை
திரட்சியானவை
அணிகளால் அழகூட்டப்பட்டவை

இந்தப் பாடல் சிலேடையில் அமைந்துள்ளது. மொழிபெயர்ப்பில் சிலேடையை ஓரளவு நயம்படப் புரிந்து கொள்ளவும் முடிகிறது. கவிதையில் பொருள் திரண்டிருப்பதைப் (compressed) போலவே பெண்ணின் மார்பகங்களும் திரண்டுள்ளன என்ற கவிஞரின் கற்பனை பாராட்டத்தக்கது. நமது இலக்கியங்களில் இறைச்சிப் பொருளும், உள்ளுறை உவமமும் இருப்பது போலவே காஹாசத்தசஈ பாடல்களில் தொனிப்பொருள் பொதிந்துள்ளது. தொனிப்

பொருளை உணர்ந்தால்தான் காஹாவை இரசிக்க முடியும் என்று கூறுவார்கள். ஒரு காஹா

இது என் மாமியாரின் படுக்கை
இது என்னுடையது
இவை வேலையாட்களினுடையவை
பயணியே
இரவில் கண் தெரியாமல்
என் மீதில் தவறி விழுந்துவிடாதே (பக். 87)

என்றுள்ளது. இக்காஹாவில் தலைவி தன் இருப்பிடத்தைத் தெரிவிப்பதோடு தன் புணர்ச்சி வேட்கையையும் தெரிவித்து விடுகிறாள். எச்சரிக்கையாக வருமாறு மறைமுகமாகக் கூறுகிறாள். இதே கருத்தில் அமைந்த இன்னொரு பாடல்

பயணியே
மீண்டுமொரு முறை உன் மனைவியைக்
காணவேண்டுமெனில்
வேறு பாதையில் போ
ஏனெனில் இந்த நாசமாய்ப்போன ஊரில்
விரக்தியின் உச்சத்தில்
வலையை விரித்துக் காத்திருக்கிறாள்
பண்ணையாரின் மகள்

இங்கேயும் பயணியின் புணர்ச்சியை விரும்பி பண்ணையாரின் மகள் 'வேறு பாதையில் சென்று விடாதே; ஊர் மோசமானது; எச்சரிக்கையாய் வர வேண்டும்; முன்பு ஒருமுறை வந்ததைப் போலவே மீண்டுமொருமுறை வரவேண்டும்; உனக்காகக் காத்திருக்கிறேன்' என்றெல்லாம் தொனிப்பொருள் தோன்ற பாடலின் பொருளை விரித்துக் காணலாம். பழங்கால இந்தியாவில் சமயச் சார்பற்ற காதல் பாடல்கள் இவ்வாறு விரசமாகவும் அமைந்துள்ளன. தொனிப்பொருள் இருப்பதால் கவிதை மெருகடைகின்றது.

மொழிபெயர்ப்பு தற்காலத் தமிழ் வழக்கில் அமைந்திருப்பதாலே நமக்குப் பழைய பாடல்களில் கிடைக்கும் இன்பம் மொழிபெயர்ப்பில் குறைந்து விடுகின்றது. சிலேடையாக வரும் பாடல்களை இரு வேறு பொருள்களையும் வெளிப்படையாக மொழிபெயர்த்துக் கொடுக்க வேண்டும். ஏற்கெனவே ஆங்கிலத்தில் மார்தா ஆன் செல்பி என்ற அறிஞரும், ஜார்ஜ் ஹார்ட் அவர்களும் தமிழ்ப் பாடல்களையும் காஹாசத்தசஈ பாடல்களையும் ஒப்பிட்டு நூல்கள் எழுதியுள்ளனர். அவை தமிழறிஞர்களை எந்த அளவிற்குச் சென்று சேர்ந்திருக்கும் என்று தெரியவில்லை. இதனால் இந்த மொழிபெயர்ப்பு மிகவும் வரவேற்கத் தக்கது. ●


## நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடுகள்




**அப்பாவின் பாஸ்வேர்ட்**

**ஆத்மார்த்தி**

விலை : ₹ 100/-

வாசகனோடு நேரடியாகப் பேசும் தன்மைகொண்ட இக்கதைகளில் உலவும் மாந்தர்கள் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இலக்கு நோக்கிப் பயணிக்கும் முனைப்பில் பயணத்தைத் தொடங்கி வாழ்வின் திசைப்போக்கில் சுழன்றாடி நேரெதிர் திசையில் பயணிக்கிறார்கள்.





**அறிவை விரிவு செய்**

**பேரா. டாக்டர் ராஜா வரதராஜா**

விலை : ₹ 170/-

தொலைநோக்குப் பார்வையுடன், போட்டித் தேர்வு எழுதும் மாணாக்கருக்கு ஒரு கையேடாக தொகுக்கப்பட்டுள்ள இந்நூல், மாணாக்கர்களுக்கு எழுச்சியையும் உத்வேகத்தையும் தரும் வகையில் அமைந்துள்ளது.

# நியூ செஞ்சுரியின் பெரியாரிய நூல்கள்...




பசு. கவுதமன் தொகுத்தளிக்கும்
பெரியாரின் எழுத்துகளுக்கான செம்பதிப்பு

## "நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வர வேண்டும்?"

## பெரியார் ஈ.வெ.ராமசாமி


மொழி, கலை, பண்பாடு, இலக்கியம், தத்துவம் பற்றிய தொகுப்பு

3770 பக்கங்கள் அடங்கிய
ஐந்து தொகுதிகள்
₹ 4800/-


எஸ்.வி.ராஜதுரை - வ.கீதா எழுதிய

## பெரியார்: சுயமரியாதை சமதர்மம்

இந்திய மக்களின் வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் அச்சுறுத்தலை உருவாக்கிக் கொண்டிருக்கும், தமிழ் மக்களின் மொழி, பண்பாட்டு, சமூக, அரசியல் பொருளாதார நலன்களைத் துடைத்தெறிய பேயாட்டம் ஆடிக்கொண்டிருக்கும் போலி சந்நியாசிகளின் குண்டாந்தடி பாசிசத்தை எதிர்த்து நிற்க, ஊன்றி நிற்பதற்கு மட்டுமே கைத்தடிகளைப் பயன்படுத்திய அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் ஆகியோர் நமக்கான வலுவான கருத்தாயுதங்களாக இருப்பர்.




₹ 900/-




## பெரியார் என்னும் இயக்கம்

**தா.பாண்டியன்**

பெரியார் என்பவர் தனியொரு மனிதர். அவரது வாழ்வு ஒரு பேரியக்கமாகும். உலகுக்கே தன்வாழ்க்கைச் செயல்பாட்டில் வழிகாட்டும் பெரியார் காலங்களைக்கடந்து என்றென்றைக்கும் தேவைப்படும் ஞானசூரியன் என்பதை வலியுறுத்துகிறது இந்நூல்

₹ 80/-

# சோவியத் மக்களின் மாபெரும் தேசபக்த யுத்தம்

(1941 - 1945)

## சி.ஆர். ரவீந்திரன்

**தொ**டர்ந்து மனித சமுதாயம் வரலாற்றில் மாறிக்கொண்டும், வளர்ந்து கொண்டும், விரிந்து கொண்டும் இருப்பதைக் காண முடிகிறது. தொடக்கத்தில் பல வகையான மாற்றங்களுக்கு உள்ளான மனித குலம், ஒரு கட்டத்தில் சமுதாயமாக வாழத் தொடங்கி, சிற்றரசுகளாக வடிவம் பெற்று, மாறிமாறி வளர்ந்து, பேரரசாக விரிந்து வாழத் தொடங்கியது. மனித வரலாறு நெடுகிலும் பல வகையான போர்கள் நடந்து வந்ததை, ஆவணங்கள் அடிப்படை ஆதாரமாக விளங்கிப் புலப்படுத்து கின்றன. வரலாற்றில் போர்களுக்கான காரணங்கள் குறித்த மாறுபட்ட கருத்துக்களும் உலகளாவிய அளவில் சொல்லப்பட்டு வருவதைக் காண முடிகிறது.

மனித சமுதாயம் தனது ஆக்கங்களின் வாயி லாகவும், அழிவுகளின் வாயிலாகவும் தொடர்ந்து இருப்பதோடு மட்டுமல்லாமல், மாற்றங்களினூடே, தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த உண்மையை அறிவியல் கண்ணோட்டத்துடன் விரிவாக விளக்குவது "இரண்டாம் உலக யுத்தம்" என்னும் இந்த நூலின் அடிப்படை நோக்கமாக அமைந்துள்ளது.

அங்கும் இங்குமாக, முன்னும் பின்னுமாக பல வகையான வடிவங்களில் சொல்லப்பட்ட இரண்டாவது உலக யுத்த வரலாறு இந்த நூலில் ஒரு முழுமையான தொகுப்பாக அமைந்திருப்பது இதன் தனிச்சிறப்பு. தகுந்த புள்ளி விவரங்களோடு தகவல்கள் முன் வைக்கப்பட்டுள்ளதால் இந்த யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவு மனதைக் கலக்குவதாக உள்ளது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னணியில் அடங்கியிருந்த பல வகையான தகவல்களை ஆசிரியர் விருப்பு வெறுப்பு இல்லாமல் தெளிவாக விளக்குகிறார்.

இதன் முன்னுரையில் நூலாசிரியர் வி.அ. மத்சுலேன்கோ இரண்டாம் உலக யுத்தப் பின்னணியைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் விளக்குவது வாசிப்புக்குத் தூண்டக் கூடியதாக உள்ளது.

பதினெட்டாம் நூற்றாண்டில் நிகழ்ந்த பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு, உலகம் முழுவதுமாகப் பெரு மளவில் விரிவாக மாற்றங்கள் நிகழ்ந்தன. அதைக் கருத்தில் கொண்டு, அடுத்து வந்த நூற்றாண்டுகளில் உலகளாவிய அளவில் நிகழ்ந்த நிகழ்வுகளை ஆய்வு செய்தால் பலவகையான உண்மைகளைக் கண்டறிய முடியும்.

அதை, "முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி மேலும் ஆழமடைந்து வந்த சூழ்நிலைகளில் தோன்றிய இரண்டாம் உலக யுத்தம் *(1939-1945)*, ஏகாதிபத்திய அரசுகள் பின்பற்றிய ஆக்கிரமிப்பு சோவியத் எதிர்ப்புக் கொள்கையின் நியதியான விளைவாக அமைந்தது. உலகம் முழுவதையும் தனக்கு அடிமைப்படுத்தி அடக்கியாள வேண்டும் என்று முயலும் ஏகாதிபத்தியத்தின் சாராம்சத்தி லேயே இந்த யுத்தத்தின் காரணங்கள் அடங்கி யுள்ளன." என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

அதோடு, இன்னொரு கண்ணோட்டத்தையும் அவர் அடையாளப்படுத்துகிறார்: "ஒருபுறம் ஹிட்லரின் ஜெர்மனி, பாசிச இத்தாலி மற்றும் இராணுவ வெறி கொண்ட ஜப்பானும், மறுபுறம் இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் அமெரிக்க ஐக்கியநாடும் இருந்தன. ஆனால், இந்த இரு தரப்புகளுக்கிடையே கடுமை யான போராட்டம் நிலவினாலும் சோவியத் யூனியனின்பாலும், சோசலிசக் கட்டுமானத்தில் அது அடைந்த வெற்றிகளின்பாலும், சர்வதேச அரங்கில் இதன் செல்வாக்கு வளர்ந்து வருவதன்பாலும் உள்ள வர்க்க வெறுப்பு இந்நாடுகளுக்குப், பொதுவானதாக இருந்தது."

தொடர்ந்து அவர் சூழ்நிலைமைகளின் மாற்றத்தைக் குறிப்பிடுகிறார்: "இரண்டாம் உலக யுத்தம், ஏகாதி பத்திய யுத்தம் என்ற வகையில் முதலாளித்துவ அரசு களின் இரண்டு கோஷ்டிகளுக்கிடையே தொடங்கியது. சோவியத் யூனியனின் மீது பாசிச ஜெர்மனி தாக்கியதால் சோவியத் யூனியன் யுத்தத்தில் இறங்க


நேரிட்டதும், ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணி தோற்று விக்கப்பட்டதும், யுத்தத்தின் நியாயமான, பாசிச எதிர்ப்புத் தன்மையை ஊர்ஜிதப்படுத்தின.''

அடுத்த கட்ட நிலைமையை அவர் மேலும் தெளிவுபடுத்துகிறார்: ''யுத்தத்தின் போக்கில் சோவியத் யூனியனின் அரசியல் இலட்சியங்களும், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் மேற் கத்திய வல்லரசுகளின் அரசியல் இலட்சியங்களும் எல்லாவற்றிலும் ஒத்துப்போகவில்லை. ஆனால், பாசிச அரசுகளை முறியடிப்பதில், இந்நாடுகளுக்கு இருந்த பொது அக்கறை இராணுவ - அரசியல் கூட்டின் அடிப்படையாக அமைந்தது.''

மேலும், அங்கு உருவான புதிய நிலைமை களைப் பற்றி அவர் கூர்மையாக வெளிப்படுத்து கிறார்: ''ஐரோப்பாவில், நேசநாடுகள் இரண்டாவது போர் முனையைத் தொடங்கும் பிரச்சினையில் முரண்பாடுகள் மிக வெளிப்படையாகவும், கூர்மை யாகவும் வெளிப்பட்டன. சோவியத் யூனியன் தன்னந் தனியாகவே பாசிச ஜெர்மனியை முறியடிக்கும் என்பது 1944-ஆம் ஆண்டு கோடையில் அனை வருக்கும் தெள்ளத் தெளிவாகப் புரியும் வரை அமெரிக்காவும், பிரிட்டனும் இந்தப் போர் முனையைத் தொடங்குவதை இழுத்தடித்தன.''

அவருடைய யுத்தம் பற்றிய மதிப்பீட்டை இப்படித் தெளிவுபடுத்துகிறார்: ''இரண்டாவது உலக யுத்தம் மனிதகுல வரலாற்றிலேயே மிகப்பெரும் யுத்தமாக அமைந்தது. உலக மக்களில் 80 சதவிகிதத் திற்கும் அதிகமானோர் இந்த யுத்தத்தில் இழுக்கப் பட்டனர். இராணுவ நடவடிக்கைகள் மூன்று கண்டங் களிலும் பெரும் கடல் பரப்புகளிலும் நடைபெற்றன.

''பாசிச ஜெர்மனி மற்றும் அதன் கூட்டாளிகளின் தாக்குதலை தன்மீது ஏற்றுக்கொண்ட சோவியத் மக்களின் மாபெரும் தேசபக்தயுத்தம் (1941-1945) இரண்டாம் உலக யுத்தத்தின் முக்கிய அங்கமாகும். சாராம்சத்தில் மூன்று ஆண்டுகளுக்கு சோவியத் மக்கள், பாசிச ஜெர்மனியின் தலைமையிலான அரசுகளின் கூட்டணியை எதிர்த்துத் தன்னந்தனியாகப் போரிட்டனர். கிழக்கிந்தியப் போர் முனையில்தான் பாசிச ஜெர்மனியின் இராணுவ பலம் தவிடு பொடி யாக்கப்பட்டது. கடுமையான சமர்களில் பாசிசம் முறியடிக்கப்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட்ட நாஜி ஜெர்மனி 1945-ஆம் ஆண்டு மே 9-ஆம் தேதி சரணடைந்தது. செப்டம்பர் 2-ஆம் தேதி குவாண்டுங் இராணுவம் சோவியத் இராணுவத்தால் முறியடிக்கப்பட்ட பின் இராணுவ வெறி கொண்ட ஜப்பான் நிபந்தனையின்றி சரணடையும் ஒப்பந்தம் கையெழுத்தானது.''




**இரண்டாம் உலக யுத்தம்**

**வி.அ.மத்சுலேன்கோ**

தமிழில்: இரா.பாஸ்கரன்

*வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,*
*41- பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்*
*அம்பத்தூர், சென்னை - 600 098.*
தொலைபேசி எண்: *044 - 26359906*

விலை : ₹ 390/-

'இரண்டாம் உலக யுத்தம்' என்ற இந்த நூலில் வி.அ. மத்சுலேன்கோ, இரண்டாம் உலக யுத்தத்தை 5 காலகட்டங்களாகப் பிரித்து விளக்கி உண்மை களைத் தெளிவுபடுத்துகிறார்.

முதல் காலகட்டம் (1939 செப்டம்பர் 1-1941 ஜூன் 21) - யுத்தத்தின் தொடக்கம், மேற்கு ஐரோப்பிய நாடுகளினுள் ஜெர்மனியத் துருப்புகள் நுழைந்தன.

இரண்டாவது காலகட்டம் (1941 ஜூன் 22-1942 நவம்பர் 18) பாசிச ஜெர்மனி சோவியத் யூனியன்மீது தாக்குதல் தொடுத்தது. யுத்தம் விரிவடைந்தது. பிலித்ஸ்கிரிக் (மின்னல் யுத்தம்) எனும் ஹிட்லர் சித்தாந்தம் தவிடு பொடியானது.

மூன்றாவது காலகட்டம் (1942 நவம்பர் 19-1943 டிசம்பர் 31) யுத்தத்தின் போக்கில் அடிப்படை மாற்றம், பாசிசக் கூட்டின் தாக்குதல் போர்த் தந்திரத்தின் தோல்வி.

நான்காவது காலகட்டம் - (1944 ஜனவரி - 1 - 1945 மே - 9) ஐரோப்பாவில் பாசிசக் கூட்டின் முறியடிப்பு, எதிரி ராணுவத்தை, சோவியத் யூனியனின் எல்லைகளுக்கு அப்பால் விரட்டியது. இரண்டாவது போர்முனையை ஆரம்பித்தது. ஐரோப்பிய நாடுகளை ஆக்கிரமிப்பிலிருந்து விடுவித்தது, பாசிச ஜெர்மனியின் முழுத்தோல்வி, இதன் நிபந்தனையற்ற சரணடைவு.

ஐந்தாவது காலகட்டம் (1945 மே 9- செப்டம்பர் 2) - ஏகாதியத்திய ஜெர்மனியின் முறியடிப்பு, ஆசிய மக்களை ஜப்பானிய ஆக்கிரமிப்பிலிருந்து விடுவித்தல் இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவு.

“இரண்டாம் உலக யுத்தம் மக்களுக்கு அளவற்ற துக்கத்தையும், சுமைகளையும், இழப்புகளையும் கொண்டு வந்தது. இந்த யுத்தத்தில் 50 மில்லியனுக்கும் கூடுதலானோர் உயிரிழந்தனர். 4 திரில்லியன் டாலர்கள் பொருட் சேதம் ஏற்பட்டது. ஐரோப்பா விலும், ஆசியாவிலும், மற்ற கண்டங்களிலும் எண்ணற்ற நகரங்களும், கிராமங்களும் தரைமட்ட மாக்கப்பட்டன. மனித மேதமையின் ஏராளமான மாபெரும் படைப்புகள் மறைந்து போயின. பல இலட்சக் கணக்கான மக்கள் காயங்கள், நோய் நொடிகள், பட்டினியால் வாடினர். ஏகாதிபத்தியத்தால் உருவாக்கப்பட்ட இரண்டாம் உலக யுத்தத்திற்கு அளிக்கப்பட்ட விலை இவ்வளவு பயங்கரமானதாக இருந்தது.”

இரண்டாம் உலகயுத்தம் தொடங்கிய சூழலை நூலாசிரியர் தகுந்த புள்ளி விவரங்களுடன் விளக்கு கிறார்: “யுத்தத்தின் தொடக்கத்தில் பாசிச ஜெர்மனியின் தலைமை போலந்தின் மேற்கு எல்லையில் பெரும் சக்திகளைக் குவித்தது. இவற்றில் 62 டிவிசன்கள் (7 டாங்கி மற்றும் 4 மோட்டார் டிவிசன்கள் உட்பட) 2,800 டாங்கிகள், 6000 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், சுமார் 2000 விமானங்கள் (முதலாவது, நான்காவது வான் படைகளைச் சேர்ந்தவை) முதலியவை அடங்கியிருந்தன. மொத்தம் 16 இலட்சம் பேர் இருந்தனர்.”

அதே சமயத்தில் போலந்து நாட்டின் வலிமையைப் புள்ளி விவரங்களோடு குறிப்பிடுகிறார்: “பாசிச ஜெர்மனியத் துருப்புகளை போலந்து இராணுவம் எதிர்த்து நின்றது. இதன் வசம் 39 காலாட்படை டிவிசன்களும், 11 குதிரைப்படை பிரிகேடுகளும், 3 மலையேற்ற பிரிகேடுகளும், 2 கவச மோட்டார் பிரிகேடுகளும், சுமாராக 80 தேசியப் பாதுகாப்பு பட்டாலியன்களும் இருந்தன. மொத்தமாக 10 இலட்சம் போர்வீரர்கள் இருந்தனர். 1939-ஆம் ஆண்டு செப்டம்பர் 1-ஆம் தேதி இதன் வசம் 220 எளிய டாங்கிகளும், 650 சிறு பீரங்கி ஏந்திய டாங்கிகளும், கவச மோட்டார் வாகனங்களும், 4300 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 800 போர் விமானங்களும், 16 போர்க்கப்பல்களும், உதவிப் படகுகளும் இருந்தன.

“இராணுவ உற்பத்திக் குறியீடுகள் ஆயுதப் போராட்டத்தின் அளவுகளுக்குச் சான்று பகர்கின்றன. யுத்த ஆண்டுகளில் (1939 செப்டம்பர் 1 முதல் 1945 செப்டம்பர் 2 வரை) ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணி நாடுகளில் மட்டும் 5,88,000 விமானங்களும் (இவற்றில் 4,25,000 போர் விமானங்கள்) 2,36,000 டாங்கிளும், 14,76,000 சாதாரண பீரங்கிகளும், 6,16,000 மார்டர் பீரங்கிகளும் உற்பத்தி செய்யப்பட்டன; ஜெர்மனியில் சுமார் 1,09,000 விமானங்களும், 46000 டாங்கிகள் மற்றும் திடீர்த் தாக்குதல் பீரங்கிகளும், 4,35,000க்கும் மேற்பட்ட சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும், மற்ற வகை ஆயுதங்களும் உற்பத்தி செய்யப்பட்டன.

தொடர்ந்து, யுத்தம் பற்றிய புள்ளி விவரங்களை நூலாசிரியர் வரிசையாகத் தொகுத்து வழங்குவது, இரண்டாம் உலக யுத்தம் குறித்த விரிவான வரலாற்றுப் பார்வையை உணர்த்துவதாக உள்ளது.

“மொத்தத்தில் 2,194 நாட்கள் (6 ஆண்டுகள்) நீடித்தது. 1.7 பில்லியன் மக்கள் தொகையை உடைய (இது உலக மக்கட் தொகையில் 80 சதவீதமாகும்) 61 அரசுகள் இந்த யுத்தத்தினுள் இழுக்கப்பட்டன. ஐரோப்பிய, ஆசிய, ஆப்பிரிக்கக் கண்டங்களில் உள்ள 40 நாடுகளின் பரப்புகளிலும் அட்லாண்டிக், ஆர்க்டிக், பசிபிக் மற்றும் இந்துமகா சமுத்திரங்களின் பரந்த நீர்ப்பரப்புகளிலும் போர் நடவடிக்கைகள் நடைபெற்றன. 110 மில்லியனுக்கும் கூடுதலானோர் இராணுவ சேவைக்காக அழைக்கப்பட்டனர்.”

இரண்டாம் உலக யுத்தத்தின் விரிவுகளை வி.அ. மத்சுலேன்கோ தொகுத்துக் கூறுகிறார்: “வரலாறு அறிந்த யுத்தங்களிலேயே இரண்டாவது உலக யுத்தம் தான் மிக அழிவுகரமானதாக இருந்தது. ஐரோப் பாவில் மட்டும் போர் அழிவுகளினால் (முழுமை பெறாத புள்ளி விவரங்களின்படி) ஏற்பட்ட பொது வான பொருட் சேதத்தின் மதிப்பு 260 பில்லியன் டாலர்களாகும். (1938-ஆம் ஆண்டு விலைவாசிகளில்) போரிட்ட அரசுகளின் இராணுவச் செலவினங்கள் அவற்றின் தேசிய வருமானத்தில் 60-70 சதவீதமாக இருந்தன. 50 மில்லியனுக்கும் கூடுதலானோர் மாண்டனர். 20 மில்லியனுக்கும் கூடுதலானோரைப் பறிகொடுத்த சோவியத் யூனியனுக்குத்தான் மிக அதிக இழப்பு ஏற்பட்டது. சோவியத் நாட்டில் 1,170 நகரங்களும், 70,000 கிராமங்களும் குக்கிராமங்களும் இடிபாடுகளில் மூழ்கிக் கிடந்தன. 32,000 தொழில் நிலையங்கள் நாசப்படுத்தப்பட்டிருந்தன. ஆக்கிர மிப்புக்கு எதிரான போராட்டத்தில் போலந்து (சுமார் 6 மில்லியன்), யுகோஸ்லாவியா (1.7 மில்லியன்) மற்றும் பிற அரசுகளுக்கும் பெரும் சேதங்கள் ஏற்பட்டன. அமெரிக்க ஐக்கிய நாடு 4,00,000 நபர் களையும், பிரிட்டன் 3,70,000 நபர்களையும் பறி கொடுத்தன. ஜெர்மனியின் தரப்பில் 13.6 மில்லியன் பேர்கள் கொல்லப்பட்டனர்: காயமடைந்தனர்; சிறை

பிடிக்கப்பட்டனர். இதனுடைய ஐரோப்பியக் கூட்டு நாடுகளின் தரப்பில் 1.5 மில்லியனுக்கும் அதிக மானோர் பாதிக்கப்பட்டனர்.''

இந்நூலில் திட்டவட்டமான உதாரணங்களில், புதிய அதிகம் அறியப்படாத பத்திராலய ஆவணங்கள், சோவியத் மற்றும் அயல்நாட்டு அரசியல் பிரமுகர்கள், இராணுவ நிபுணர்களின் நினைவுக் குறிப்புக்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி இரண்டாம் உலக யுத்தத்தின் முக்கியமான சம்பவங்கள் விளக்கப் பட்டுள்ளன. இராணுவ அரசியல் முடிவுகள் தரப் பட்டுள்ளன.

சோவியத் யூனியனின் கம்யூனிஸ்டுக் கட்சியும் மற்ற மார்க்சிய, லெனினியக் கட்சிகளும், "யுத்த மானது பொதுவாகவே கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு எதிரானது'' என்ற லெனினியக் கூற்றை மெய்ப்பிக் கின்றன. "சமாதானத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான 'எல்லாவற்றையும் செய்வோம் என்று தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் நாங்கள் உறுதி கூறுகிறோம்' என்கிறார் வி.இ. லெனின். சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி இந்த லெனினுடைய ஆணைக்கு எப்போதும் விசுவாசமாக இருந்துவந்துள்ளது; இப்போதும் இருக்கிறது.''

என்ற கருத்தை வி.அ. மத்சுலேன்கோ இந்த நூலின் வாயிலாக நிறுவுகிறார்.

விருப்பு வெறுப்பு உணர்வுகளைக் கடந்து அறிவியல் கண்ணோட்ட அடிப்படையில் ஏராளமான உண்மைத் தகவல்களை முன்வைத்து இந்த நூலை ஆசிரியர் நேர்மையாக வடிவமைத்துள்ளார். போர்க் களத்தில் முக்கியமான நிகழ்வுகளையும், விளைவு களையும் தகுந்த புள்ளி விவரங்களோடு குறிப்பிட்டு ஆவணப்படுத்தியிருக்கிறார். அறிவியல் கண் ணோட்டத்தில் ஒரு வரலாறு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

தமிழில் தெளிவாக, எளிமையாக, இயல்பாக மொழி பெயர்க்கப்பட்டுள்ள இந்த ஆழமான அரியநூல் வாசிப்புக்கு உகந்ததாக அமைந்துள்ளது. 'உலகமயமாதல்' என்ற புதிய சூழல்களைப் புரிந்து கொண்டு விழிப்புணர்வு பெறப் பொருத்தமாக அமைந்துள்ளது இந்தநூல்.

நூலாசிரியர் வி.அ.மத்சுலேன்கோவின் அக்கறையும், ஈடுபாடும், உழைப்பும், வெளிப்பாடும் போலவே, மொழிபெயர்ப்பாளர் இரா.பாஸ்கரனின் தனித்திறனும் இந்நூலில் வெளிப்படுகிறது. ●


## நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடுகள்





**சொல் பண்பாட்டு அடையாளம்**

**இரா.வெங்கடேசன்**

விலை : ₹ 200/-

தமிழரின் பண்பாட்டுக்கூறுகளை வெளிப்படுத்தி நிற்கக்கூடிய பல சொற்கள் சங்ககாலம் தொடங்கிச் சமகாலம் வரையிலும் வழங்கி வருகின்ற குறிப்புகளை வெளிப்படுத்துகின்றன - இந்நூற் கட்டுரைகள்.




**பரமாத்து விதம்**

**முப்பால்மணி**

விலை : ₹ 180/-

தமிழகத் தத்துவத்தில் சைவ வேதாந்தமான பரமாத்துவிதம் பற்றிய ஆய்வு நூல். சங்கரர் நெறி, ராமானுஜர் நெறி, சைவ நெறி, ஐரோப்பிய தத்துவச் சிந்தனைகள் போன்றவற்றினூடே சைவநெறியை மனோன்மணியம் உள்ளிட்ட நூல்களிலிருந்து விளக்கியுரைக்கும் நூல்.

# எனது இலங்கைப் பயணம்

## தி.சு நடராசன்

இலங்கை மட்டக்களப்பிலிருந்து, இ-மெயிலில் ஓர் அழைப்பு வந்தது. பேரா. சிவரத்தினம் என்பவரின் கடிதம் அது. செப்டம்பர் முதல் வாரம் அங்கு நடைபெற விருக்கும் கண்ணகி விழாவில் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பு அனுப்பியிருந்தார்கள். எனக்கு அவரைத் தெரியாது. ஆனால், என்னுடைய புத்தகம், சிலப்பதிகாரம்: மறு வாசிப்பு (என்.சி.பி.எச். வெளியீடு) செய்த வேலை இது. இதனை விழாக் குழுவினர் சிலர் படித்திருக்கிறார்களாம். அழைப்பு, அதனை ஒட்டி வந்ததுதான். முதலில் எனக்குத் தயக்கம். 1980 வாக்கில் இலங்கை மலையகத்திலிருந்து இப்படி ஓர் அழைப்பு வந்தது. மலையக இலக்கியம் பற்றிப் பேசவருமாறு அழைத்திருந்தார்கள். போக வில்லை. அதே விழாவிற்கு இரண்டாண்டுகள் கழித்து மீண்டும் அழைப்பு வந்தது. அவர்களுடைய பத்திரிகையில் செய்தியும் வந்தது. ஆனால், யாழ் பல்கலைக்கழகம் எரியூட்டப்பட்ட நேரம் அது. பெருந் தேசியப் பண்பாட்டு அரசியலின் அருவருப்பான முகம், அது. அப்போது போக முடியவில்லை. இப்போது மீண்டும் ஒரு அழைப்பு. இப்போது கண்ணகி - கலை இலக்கிய விழாவுக்காக. மூன்று நாள் நிகழ்ச்சி. செப்டம்பர் 7, 8, 9 நாட்கள். சரி என்று தகவல் அனுப்பினேன். உடன் என் மனைவியும் வருவாள் என்று கூறிவிட்டேன்.

செப்டம்பர் 6, வியாழன் மதியம் ஒரு மணிக்கு மதுரையிலிருந்து புறப்பட்டோம். கொழும்புக்கு ஒரு மணிநேரம் அல்லது அதற்கும் கொஞ்சம் குறைவு தான். கலாநிதி சிவரத்தினம் சொல்லியிருந்த படி எங்களை வரவேற்க விமான நிலையத்திற்குப் ‘பாடும் மீன்’ சிறிகந்தராசா வந்திருந்தார். மூன்று மணி நேரத்துக்கு முன்னாலேயே அங்கு வந்து காத்திருந்தார். இப்போது அவர், ஆஸ்திரேலியாவில் இருக்கிறார். ஆனால், மட்டக்களப்புக்காரர். வருடந் தோறும் நடக்கும் கண்ணகி விழாவிற்கு அவர் வந்து விடுவாராம். தமிழ்ப்பற்றும், ஊர்ப்பற்றும் அவ்வளவு இருக்கிறது. கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து கலாநிதி சந்திரசேகரம் ஒரு கார் அனுப்பியிருந்தார். கொழும்பிலிருந்து மட்டக்களப்பு 300 கிலோ மீட்டருக்கும் அதிகம். வழியெல்லாம் பேசிக் கொண்டு வந்தோம். வேடிக்கை பார்த்துக்கொண்டு வந்தோம். மட்டக்களப்பு வந்தது. அதன் ஒரு பகுதியில் அவர் இறங்கிக் கொண்டார். நாங்கள் இருவரும் பல்கலைக்கழகத்தில் விருந்தினர் மாளிகையில் அன்றிரவு தங்கினோம்.

மறுநாள் காலை, பேராசிரியர் செ. யோகராசா என்பவர் என்னைப் பார்க்க வந்திருந்தார். அவர், கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து சமீபத்தில்தான் ஓய்வு பெற்றார். நல்ல அறிஞர். என்னுடைய பல புத்தகங் களை நன்றாக வாசித்திருக்கிறார். திறனாய்வுக் கலை நூலிலிருந்து சமீபத்தில் வெளிவந்த தமிழ் அழகியல் வரை நன்றாகவே வாசித்திருக்கிறார். நிறைய கேள்விகள். நிறைய விவாதங்கள். அவருடைய மனைவிக்கு உடல்நலமில்லையாம். அப்படி யிருந்தும் நேரம் கண்டுபிடித்து, ரொம்ப நேரம் இருந்தார். இரண்டு முறை வந்திருந்தார். எதிர் பாராத இடத்தில் நம்முடைய புத்தகங்களை ஆழமாக ஒருவர் வாசித்திருக்கிறார் எனும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் என்னென்பது! அதுவும் விவாதம் இலக்கியத்தைச் சார்ந்திருக்குமானால் கேட்பானேன்!

கண்ணகி விழா நிகழ்ச்சி, பிற்பகல் இரண்டு மணிக்குத்தான். இதற்கிடையில் அன்று மட்டக் களப்புப் பகுதி முழுக்கக் கடையடைப்பு. அது ஒரு புது அனுபவம் தான். வலிய நல்ல செய்திதான். மட்டக்களப்பு மாவட்டத்தில் புல்லுமலை என்ற நீர்ப்பசையுடைய ஒரு நல்ல இடம். அதிலிருந்து நல்ல குடிநீரை உறிஞ்சியெடுத்து வெளிநாடுகளில் விற்பனை செய்ய வேலை நடக்கிறதாம். சிங்கள அரசின் அரசியல் தந்திரம் காரணமாகச் செல்வாக்குடைய ஒரு முசுலிம் அரசியல் வாதியான, வியாபாரி ஒருவர், நீர் எடுக்கும் ஒன்றை தொழிற்சாலை ஆரம்பித்திருக் கிறாராம். இதன் காரணமாக அந்தப் பகுதியில் தண்ணீர்ப் பஞ்சம் வரும் என்று மக்கள் பயப்படு கிறார்கள். மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் உணர் வாளர் என்ற ஓர் அமைப்பு விடுத்த அறைகூவலை ஏற்றுக்கொண்டுதான் அந்தக் கடையடைப்பு. பஸ்கள் ஓடவில்லை, பள்ளிகள் திறக்கப்பட வில்லை. முழுக்கடையடைப்பு, முழுவெற்றிதான் என்று அமைப்பாளர்கள் அறிவித்தார்கள். அரசாங்கம், மக்கள் குரலுக்குச் செவிமடுத்து உடனடியாகக் குடிநீர் ஆலையை மூடவேண்டும்; இல்லையென்றால், அடுத்துச் சிறை நிரப்பும் போராட்டம் தொடரும் என்று அறிவித்திருந்தார்கள். அன்று நடைபெற்ற முழுக்கடையடைப்புப் போராட்டம் என்பது, சிங்கள

அரசு, தமிழ் மக்கள் மீது ஏவிவிட்ட யுத்தத்தின் காயங்கள் இன்னும் ஆறவில்லை என்பதை உணர்த்துவதாகவே தோன்றுகிறது.

முதல்நாள், விருந்தினர் மாளிகையில் இருந்து விட்டு மறுநாள் கலாநிதி சிவரத்தினம் வீட்டிற்கு வந்து விட்டோம். அங்கு ஒரு மூன்றுநாள் தங்கல். அன்புடன் கூடிய நல்ல விருந்தோம்பல். சிவரத்தினத்தின் மனைவி திருமதி. அருந்ததி, ஓர் உடன் பிறப்புப் போலவே பழகினார். ஒருநாள், திருமதி அருந்ததியின் தங்கை வீட்டிற்குச் சென்றிருந்தோம். வகைவகையான மீன்களுடன் சுவையாக விருந்து படைத்தார்கள். ஒரு நேரம், பேராசிரியர் மவுனகுரு, சித்ரலேகாமவுனகுரு வீட்டிற்குச் சென்றிருந்தோம். அவர்கள் மதுரைக்கு வந்திருக்கிறார்கள். அங்கேயே எனக்கு நல்ல பழக்கம் தான்.

அன்று பிற்பகல், விழா தொடங்கியது. அருகில் தோற்றாத்தீவு எனும் பகுதியில் உள்ள கொம்புச்சந்திப் பிள்ளையார் ஆலயத்தின் முன்றலில் இது தொடங்கியது. கிராமத்து விழாவாகவே நடந்த இவ்விழா 'கொம்பு முறி' எனப்பட்டது. இது, பிற நிகழ்ச்சிகளுக்குத் தொடக்க மாக அமைந்தது. கிராமத்து மக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்; எல்லாரும் உற்சாகமாகக் கலந்து கொண்டனர். இலங்கையில் தமிழர்களின் நாட்டுப் புற வழிபாட்டில் கலந்து கொள்ளக் கிடைத்த வாய்ப்பு, மிகவும் மகிழ்ச்சி தந்தது.

அடுத்தநாள் காலை 7 மணிக்குப் பண்பாட்டுப் பவனி. கண்ணகியம்மனைக் கொண்டு அமைந்தது - இந்தப் பவனி - அருகில் உள்ள களுதாவளையைச் சுற்றியுள்ள பல கிராமங்களிலுள்ள கண்ணகியம்மன் ஆலயங்களிலிருந்து தனித்தனியே அணிவகுப்புகள் தொடங்க, முடிவில் இந்தத் தோற்றாத்தீவு கொம்புச் சந்திப் பிள்ளையார் ஆலயத்திற்கு வருகின்றது. பல சிறு சிறு அணிகள் ஒன்று திரண்டு, விழா நிகழ்ச்சிகள் நடைபெறுகின்ற களுதாவளை பிரதானவீதியில் உள்ள கலாச்சார மண்டபத்திற்குச் சிறிய ரதத்துடன் வருகின்றன. ஆங்காங்குள்ள கண்ணகி வழிபாட்டை ஒருங்கிணைக்கவும், சுற்றுப்புற மக்களிடையே இணக்கமான நல்லுறவை ஏற்படுத்தவும் கூடியதாக இந்த நிகழ்ச்சி அமைகின்றது. கலாச்சாரமண்டபம், பெரியமண்டபம்தான். நன்றாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. பெரும்பாலும் தென்னங்குருத்து ஓலை களாலேயே அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன.

பண்பாட்டு பவனி முடிந்தவுடன், ஏனைய பிற நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன. பெரும்பாலும் கண்ணகி தொடர்பான நிகழ்ச்சிகள் தான். கருத்தரங்குகள், பட்டிமன்றம், பல்வகைப்பட்ட நடனங்கள், இசை நிகழ்ச்சிகள், கண்ணகி வில்லுப்பாட்டு, கரகாட்டம், குறத்திப்பாடல், மாதவி சபதம் முதலியவை நடை பெற்றன. இவற்றில் பாதி, நாட்டார் மரபில் வந்தவை;



பாதி, செவ்வியல் மரபில் வந்தவை. பேராசிரியர் சி. மவுனகுருவின் நெறியாள்கையில் 'தமிழிசை யாத்திரை' எனும் அற்புதமான நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. இசை, நடனம், கருத்தமைவு என்ற மூன்றும் ஒருங்கிணைய, கண்ணுக்கும், செவிக்கும், கருத்துக்கும் அமுதம் படைப்பதாக இருந்தது. பண் பாட்டு வரலாற்று நிலையோடு கூடியதாக இருந்த இந்தத் தொடர் நிகழ்ச்சியில், பெண்விடுதலை, தலித்தியம் என்ற கருத்துநிலை என்ற இவற்றோடு, தாலாட்டு, ஒப்பாரி, திரைப்பட இசை என்று பல நிலைகள் கொண்டு இது நடந்தது. துணுக்குகளாக அமைந்த இந்த நிகழ்ச்சிகளினூடே நெறியாளர் சுருக்கமான விளக்கங்கள் தந்துகொண்டிருந்தார். ஆடியவர்கள், இளம் பெண்கள்; நன்றாகப் பயிற்சி பெற்றவர்கள். அங்கலாய்ப்பு இல்லாமல் அடக்க மாகவும் நாகரிகமாகவும் நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன.

என்னுடைய உரை, 'கண்ணகி எனும் தொன்மம்' எனும் தலைப்பில் அமைந்திருந்தது. சங்ககாலச் சமுதாயத்தில் காணப்படுகின்ற பல தொல் படிமங்கள், கண்ணகி எனும் பத்தினித் தெய்வத்தை உணர்த்துவதற்கு எவ்வாறு அடிப்படையாக இருந்தன என்பதை விளக்குவதாக இருந்தது. மேலும், தமிழ் மரபுகளுக்கு உட்பட்டு, அதனை மீட்டெடுக்கும் விதமாக, கண்ணகியின் எழுச்சி எவ்வாறு அமைந்திருந்தது என்பதைப் புலப்படுத்துகிற விதமாக என் பேச்சு அமைந்திருந்தது.

கருத்தரங்கம் முதற்கொண்டு பலதரப்பட்ட நிகழ்ச்சிகளையும் நன்கு திட்டமிட்டு நிர்வகித்தது, செயற்குழு; இதன் தலைவர், மட்டக்களப்பைச்

சேர்ந்த திரு. செங்கதிரோன் கோபாலகிருஷ்ணன் என்பவர். இவரும் வரவேற்புக்குழுவைச் சேர்ந்த பிறரும், மிகவும் சுறுசுறுப்பாக இயங்கினார்கள். இவர்களை உற்சாகமாக வழிநடத்தியது தமிழ் உணர்வுதான் என்று சொல்ல வேண்டும்.

இந்த நிகழ்ச்சிகளுக்கு இடையில் ஒருநாள், மதியம் ஒரு மணிக்கு, விழா மண்டபத்திற்கு அருகில் உள்ள 'சுயம்புலிங்க விநாயகர்' கோவிலுக்குப் போயிருந்தோம். அங்குள்ள லிங்கம், சுயம்புவாகத் தோன்றியது என்று மக்கள் நம்புகிறார்கள். மூலஸ்தானத்தில் லிங்கத்தோடு சேர்ந்து விநாயகர் திருவுருவமும் காணப்படுகிறது. அந்தக் கோயில் மதியம் மட்டும்தான் நடைதிறக்குமாம். கோயிலில் அருமையான பளிங்குக்கல் பதித்திருக்கிறார்கள். இதற்கு, ஒரு கோடிக்கு (இலங்கை நாணய மதிப்பில்) மேலே செலவாகியதாம். நம்முடைய மதிப்பில் ரூ. 50 லட்சம் என்று வைத்துக்கொள்ளலாம். இதற்கு நிதி உதவி செய்தவர் கலாநிதி சிவரத்தினத்தின் மைத்துனர், ஸ்விட்சர்லாந்தில் வாழ்கின்ற திரு. சிறிகந்தராஜா ஆவார். இந்தப் பளிங்குக்கல்லைப் பதித்தவர்கள், மதுரைக்காரர்களாம். இந்தக் கோயிலுக்குத் தினந்தோறும் மக்கள், திரளாக வருகிறார்களாம்.

கண்ணகிவிழா முடிந்த மறுநாள் காலை கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குப் புறப்பட்டோம். அதன் ஒரு பகுதியான விபுலானந்த அடிகளார் நினைவு கலைகள் பயிலகம், கலாச்சார மண்டபத்திற்கு அருகிலே இருந்தது. தமிழ் இசை, நடனம் போன்ற கலைகளுக்கு இது பெயர் பெற்றது. விபுலானந்த அடிகள் 'யாழ் நூல்' என்ற அருமையான ஒரு திரவியத்தைத் தந்தவராயிற்றே; அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியர் இந்த விபுலானந்தர் தான். இவருடைய பெயரும் புகழும் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு அடையாளமாக உள்ளது. இதற்கு, சுமார் 15 கி.மீ. தூரத்தில் பிரதான கிழக்குப் பல்கலைக்கழகம் இருக்கிறது. அங்கு ஓர் உரையாற்ற வேண்டும். நாங்கள் புறப்பட்டோம். அதில் பணியாற்றுகின்ற கலாநிதி சந்திரசேகரம் எங்களை அழைத்துப் போக அவருடைய காரில் வந்திருந்தார். உள்ளே நுழைந்தவுடன், அவர் எங்களைத் தமிழ், ஆங்கிலம், வரலாறு, புவியியல் ஆகிய துறைகளின் ஒருங்கிணைப்பாளரைச் சந்திக்க அழைத்துப் போனார். பிறகு, சொற்பொழிவு நிகழ்த்துகின்ற அரங்கிற்குச் சென்றோம். சிறிய அரங்குதான். அங்கு 50 மாணவர்கள் இருந்தார்கள். அங்கே அவர்களிடம் 'தமிழில் கலைகளின் வரலாறு' என்பது குறித்துப் பேசினேன். ஒரு முக்கால் மணிநேரம்; அதன் பின் சிறிய கலந்துரையாடல்; அதன்பின் ஒரு தேநீர் விருந்து; அதன்பின் நேரம் ஆகிவிட்டது என்பதால் அடுத்த நிகழ்ச்சி; உடனடியாக இலங்கையின் மத்தியப் பகுதியில் உள்ள பேராதனைப் பல்கலைக்கழகம் நோக்கிப் புறப்பட்டோம். திரு. சந்திரசேகரம், அந்தப் பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு கார் ஏற்பாடு பண்ணியிருந்தார். டிரைவருடன் இன்னொரு ஊழியரும் வந்தார். அங்கிருந்து பேராதனைப் பல்கலைக்கழகம் சுமார் நூற்றிருபது கி.மீ. தூரத்தில் இருக்கிறது.

ஒரு நான்கு அல்லது ஐந்து மணிநேரப் பிரயாணம். முதலில் கொஞ்சத்தூரம், சில புதர்கள், சில மரங்கள், ஆங்காங்கே செடிகள் இவற்றுடன் நிலம் வறட்சியாகவே தெரிந்தது. டிரைவரும் அவர் நண்பரும் சொல்லிக் கொண்டு வந்தார்கள்: இங்கே பல இடங்களில் விடுதலைப்புலிகள் தங்கியிருந்தார்கள் என்றும், அவர்களுக்கும் சிங்கள ராணுவத்தினர்க்கும் இங்கே யுத்தங்கள் நடந்தன என்றும், இதன் காரணமாகவே இந்தப் பகுதிகளைச் சிங்கள அரசு அபிவிருத்தி செய்யாமல் புறக்கணித்து விட்டது என்றும், சொல்லிக் கொண்டு வந்தார்கள். வழியெல்லாம் சின்னச்சின்ன ஊர்கள், பழக்கடைகள் இருந்தன. சாலைகள், பளபளவென்று தார்ச் சாலைகள். நம்மூர் இணைப்புச் சாலைகள் போல் அல்லாமல் நன்றாக இருந்தன. சைனாக்காரன் போட்ட சாலைகளாம். சைனாவின் ஆதிக்கம் பல முனைகளில் வெளிப்பட்டது. இலங்கையின் சில பகுதிகளில் கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் கல்லையும், மண்ணையும் போட்டு மெத்துகிறார்களாம். மெத்திய புதிய நிலப் பகுதிகள் எல்லாம் சைனாவில் ஆதிக்கத்தில் இருக்குமாம்.

பாதித்தூரம் போனபிறகு மலையடிவாரம் தெரிந்தது. பயணம் இப்போது ரம்மியமாக இருந்தது. கார், மலையின் மேலே ஏறும் போது, சிறிது நேரத்தில் மழை பெய்யத் தொடங்கியது. பெரிய மழை! மலையின் சரிவுகளிலிருந்து மழைநீர் பெருகி விழுந்தோடி வந்தது. மேலே சரிவிலிருந்து தண்ணீரோடு சேர்ந்து பாறைக்கற்களும் உருண்டு வந்தால் என்ன செய்வது என்று டிரைவர் நகைச் சுவையுடன் அங்கலாய்த்துக் கொண்டார். உயரமாகச் சென்ற பாதையில் எட்டு முனைகள்; திருப்பங்கள். எட்டுத் திருப்பங்களுக்குப் பிறகுதான் மலைச்சரிவு கீழ்நோக்கி வந்தது மாதிரித் தோன்றியது. மழை விடாமல் பெய்து கொண்டிருந்தது. கண்டி நகரத்தை நெருங்குகின்ற போதுதான் மழையும் நின்றது.

கண்டி, கொழும்பிற்கு அடுத்த பெரிய (மகாநுவாரா) நகரம். இது மலைகளால் சூழ்ந்தது. நகரத்தில் எங்குப் பார்த்தாலும் வெள்ளைப் பளிங்குக் கற்களாலான புத்தர் சிலைகள். சிலைகளும், சடங்குகளும், ஆச்சாரங்களும் கூடாது என்று போதித்தவராயிற்றே - அதனால் தான் இப்படி... மேலும்,



புத்தருடைய பல்களில் ஒன்று என்று கணக்கிட்டு இங்குப் 'பல்கோயில்' ஒன்றும் உள்ளது. வெள்ளைப் பளிங்குளால் கட்டப்பட்ட இந்தப் புத்த விகாரம் கண்டியின் ஓர் உச்சியில் அமைந்துள்ளது. பழைய அரண்மனை, அதற்கு நேர் எதிரே, சற்றுத்தூரத்தில் உள்ளது. பல்கோயில் உலக அளவில் பிரசித்த மானது. கண்டியின் மக்கள் தொகை ஒரு இலட்சத்து அறுபதினாயிரம். இதில் சிங்களவர்கள் மட்டும் 74.55 சதவீதத்தினர். தமிழர்கள் 19 ஆயிரம் பேர் 13 சதவீதத்தினர். தமிழகத்தின் பிரசித்தமான திரைப்பட நடிகரும், முதல்வருமான திரு. எம்.ஜி. ராமச்சந்திரன் இந்தக் கண்டியில் பிறந்தவர்தான்.

கண்டியில் அடிவாரத்தில் உள்ளது, பேராதனைப் பல்கலைக்கழகம் (University & Peredeniya). ஏறத்தாழ இரண்டாயிரம் ஏக்கர் நிலத்தில், மலை சூழ்ந்த பிரதேசமாக இருக்கும் இந்தப் பல்கலைக்கழகம் 73 துறைகளைக் கொண்டது. இலங்கையில் இரண்டாவது பெரிய பல்கலைக்கழகம் இது. இதன் நுழைவாயிலில் உள்ள தாவரவியல் தோட்டம் இலங்கையில் மிகவும் புகழ் பெற்றது. இந்தப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை பெரியது; பிரசித்தமானது. பல்கலைக்கழகத்தின் மிகப் பழைமையான செனட் அரங்கத்தினருகே அமைந்துள்ளது இது.

கண்டிக்கு நாங்கள் வரும்போது, இரவு ஆகி விட்டது. முதலில் பல்கலைக்கழகத்தின் அருகே உள்ள விருந்தினர் மாளிகையில் தங்கினோம். பின்னர்க் காலையில், பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி வ. மகேஸ்வரன் வீட்டிற்குச் சென்றோம். அங்கே இரண்டு நாள் தங்கல். அவருடைய வீடு, பல்கலைக்கழகத்தின் நுழைவாயிலருகே இருந்தது. அது, பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான வீடு. சுற்றிவர பரந்த வெளியுடன் கூடிய அந்த வீட்டில் ஒரு காலத்தில் பிரிட்டிஷ் அதிகாரி இருந்தாராம். மகேஸ்வரன், யாழ்ப்பாணத்துக்காரர். அவருடைய மனைவி, இயல்பாகப் பழகக் கூடியவர். காலையில் 11 மணியளவில் நிகழ்ச்சி. தமிழ்த்துறை, விசாலமான அறைகளில் இருந்தது. ஆசிரியர்கள், ஏற்கெனவே தெரிந்தவர்கள் போல் நன்றாகப் பழகக் கூடியவர்கள். கூட இருந்து தேநீர் அருந்திவிட்டு, நிகழ்ச்சி நடக்கிற அரங்கத்திற்குச் சென்றோம். அரங்கம் மிக விசால மானது; நவீனமானது. 200க்கும் கூடுதலாக மாண வர்கள் இருந்தார்கள். பெரும்பாலோர் பெண்கள் தான். அங்கே எம்.ஏ. கிடையாது. பி.ஏ.யில் சிறப்புப் பாடமாகத் தமிழை எடுத்துக்கொண்டவர்கள் தான். அவர்களைத் தவிர, பிற துறை மாணவர்கள் சிலரும் வந்திருந்தார்கள். தமிழ்த்துறையின் ஆசிரியர்மார்கள் வந்திருந்தார்கள். மேலும், முன்னர் இத்துறையின் தலைவராக இருந்தவரும், சிறந்த திறனாய்வாளராக அறியப்பட்டவருமான எம்.ஏ. நுஃமான் அந் நிகழ்ச்சிக்கு வந்திருந்தார். இறுதியில் பேசவும் செய்தார்.

ஒரு மணிநேரத்திற்கு மேலிருக்கும். இலக்கியத் திறனாய்வு குறித்துப் பேசினேன். இதில் விசேட மென்ன என்றால், என்னுடைய **'திறனாய்வுக் கலை'** (என்.சி.பி.எச். வெளியீடு) அங்கே ஒரு பாடநூல்.

மேலும், **'கவிதையெனும் மொழி'** என்ற நூல் அங்கு ஒரு துணைப்பாட நூல். எல்லோரும் விரும்பிப் படித்திருப்பதாகத் தெரிந்தது. மிகுந்த அக்கறை யுடனும், கவனிப்புடனும் சொற்பொழிவைக் கேட்டனர். இறுதியில் ஒரு கலந்துரையாடல் வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னேன். கேள்விகள் கேளுங்களேன் என்று சொன்னேன். ஒரு அரை மணிநேரத்துக்கு மேல் மாணவ, மாணவிகள் கேள்விகளால் துளைத்தெடுத்துவிட்டார்கள். நல்ல கேள்விகள், நல்ல விசாரணைகள், நல்ல அவதானிப்புகள். தமிழ் மாணவர்கள் மட்டுமல்ல, பிறதுறை மாணவர் களும்தான். ஒரு தமிழ் மாணவி - இரண்டாம் ஆண்டு படிப்பவர் - பெயர் தீபா என்று நினைக்கிறேன். கூர்மையான கேள்விகள் 'திறனாய்வுக் கோட் பாடுகள் பற்றி எழுதியிருக்கிறீர்களே எந்தக் கோட்பாடு உங்கள் சார்புடையது? நீங்கள் யாராக இருந்து திறனாய்வு செய்கிறீர்கள்? உங்கள் நிலைப் பாடு என்ன? என்று என்னை நோக்கி கேள்விகள். இப்படியொரு கேள்வி, யாரும் கேட்டதில்லையே! நான் அசந்து விட்டேன். ஆனால் திருப்திப்படுத்த வேண்டுமே... திருப்திப்படுத்தினேன் என்று நினைக் கிறேன். இப்படிப்பட்ட மாணவர்களைத் - தைரியமும் மறுவிசாரிப்பு மனமும் இருக்கிற மாணவர்களைச் - சந்திப்பதில் எவ்வளவு மகிழ்ச்சியிருக்கிறது, தெரியுமா!

நிகழ்ச்சி முடிய மதியம் ஒரு மணிநேரத்துக்கு மேல் ஆகிவிட்டது. அதன்பிறகு, அதே இரண்டாம் தளத்தில் உள்ள ஒரு பொது அறையில் - அது ஒரு சிறிய சிற்றுண்டிச்சாலை மாதிரி இருந்தது. சமையலுக்குரிய வசதிகளும் உண்டு. அங்கு எல்லார்க்கும் உணவு வந்தது. சேர்ந்து சாப்பிட்டோம். அதன் பிறகு, ஆசிரியர் அறைக்குச் சென்று கொஞ்சநேரம் உரையாடி னோம். அதற்குப் பிறகு வீட்டிற்கு வந்து மதிய ஓய்வு எடுத்தோம். மாலைப்பொழுதின் பின்நேரம் கண்டி நகரத்தைச் சுற்றிப் பார்த்து வரலாம் என்று பேராசிரியர் சொல்ல, நேரம் குறைவு என்றாலும் கிளம்பினோம். கடைவீதிகளின் வழியாகச் சுற்றி னோம். புத்தர் கோயில், உயரமான மலைப்பகுதியில் பளிங்குக்கட்டடத்தில் பளபளத்துக் கொண்டிருந்தது. அங்கேதான் புத்தருடைய 'பல்' பாதுகாக்கப்படு வதாகச் சொன்னார்கள். நேரம் ஆகிவிட்டதால் அங்கு மேலே போகமுடியவில்லை. ஆனால், அடிவாரத்தில் பத்தினித்தெய்யோ, விஷ்ணுத்தெய்யோ, முருகன் தெய்யோ என்று சிறு கோயில்கள் இருந்தன. தெய்யோ என்றால் தெய்வம் என்று பெயர். மேலே புத்தரை வழிபட்டுவிட்டுக் கீழே ஆண்களும் பெண்களும் வெள்ளை வெளேரென்று பளிச்சிடும் உடையுடன், இந்தத் தெய்வங்களை வழிபட்டார்கள். மணியடித்துத் தெய்வங்களை வழிபட்டார்கள். பத்தினித்தெய்யோ என்பவர் கண்ணகிதான். கண்ணகியின் ஓவியம், கம்பீரமான தோற்றத்துடன் இருந்தது. கையில் சிலம்புடன் நிற்கும் கோலம் கவனிக்கும் படியாக இருந்தது. புத்தரை வணங்கி வரும் சிங்களவர்கள் பயபக்தியுடன் தொழுதார்கள். புத்தரைப் போற்றலாம்; வணங்கலாம்; ஆனால் துயரத்தைச் சொல்லி அழ முடியாது; முறையிட முடியாது; ஆனால் இந்தப் பத்தினித் தெய்யோவிடம் மனத்துக்குள் சொல்லி முறையிட முடியுமே... கண்ணகி வழிபாடு சிங்கள மக்களிடமும் காணப் படுகிறது என்பதையே இந்தச் சிறுகோயில்கள் காட்டுகின்றன எனலாம். இலங்கையில் கண்ணகி வழிபாட்டைக் கொண்டு வந்தவர் சிங்கள மன்னர் கயவாகுதானே!

மறுநாள் காலை, கொழும்பு விமானதளத்திற்குக் கிளம்ப வேண்டும். வீட்டிலே தேநீர் அருந்திவிட்டுக் கிளம்பினோம். பல்கலைக்கழகம் கார் அனுப்பி யிருந்தது. ஒரு பேராசிரியர் உடன் வந்தார். வழியில் பல்கலைக்கழகத்தில் மருத்துவக்கல்லூரியின் நுழை வாயிலின் அருகே ஒரு அழகான திறந்தவெளியில் உள்ள சிற்றுண்டிச்சாலையில் காலைச் சிற்றுண்டி அருந்தினோம். அது வழக்கமான மேலைநாட்டுப் பாணியிலான 'நவீனச்' சிற்றுண்டிச் சாலை அல்ல. அதற்கு மாறானது; முரணானது. மண் சார்ந்த இனவரைவுச் சிற்றுண்டியகம் அது; 'Ethnic Food' தான் இதன் கோட்பாடு. பெண்களால் மட்டுமே நடத்தப்படுவது. அரசாங்கமே முன்னின்று இதனை நிறுவி, வளர்த்து வருவதாகச் சொன்னார்கள். அப்படி என்ன கிடைக்கிறது, இங்கே? ரசாயன உரங்கள் இல்லாமல் இங்கேயே விளைந்தவற்றைக் கொண்டு செய்யப்பட்ட சிற்றுண்டிகள், எண்ணெய் களில் கருக்காமல் சமையல் ஆனவை. காய்கறி சூப்பு, இலைக்கஞ்சி, இடியாப்பம், அப்பம், புட்டு, தோசை, பணியாரம், காய்கறி உருண்டை, வாழைப் பூ வடை - இப்படிப் பல. எல்லாம் உடல் நலத்திற்கு உகந்தவை. ருசியோ அருமை, விலையோ குறைவு. மாணவர்களும் ஆசிரியர்களுமாக வாடிக்கையாளர் கூட்டமோ அதிகம். Ethnic Food என்பது வெறுமனே விற்பனைத் தந்திரமாக அல்ல; ஒரு சமுதாய நோக்குடன் காணப்படுகிறது.

ஒரு மன நிறைவுடன் பேராதனையை விட்டு நகர்ந்தோம். கொழும்புக்கும் கண்டிக்கும் ஆன தூரம் 120 கி.மீ. இருக்கும். வழியெல்லாம் பசுமையாக இருந்தது. விமானதளத்தின் அங்காடிகளில் சைனாப் பொருட்களும், சிங்கள மொழியுமாக இருந்தது. கொழும்பு-மதுரை செல்லும் விமானத்தின் அறிவிப்புகள் இந்தியில் மிதந்தன. மதுரை வந்து சேர்ந்தோம். நிகழ்ச்சிகளும் நினைவுகளும் நெஞ்சு நிறையக் கிடந்தன; இன்றும் கிடக்கின்றன. ●